உ

சிவமயம்.

சீகாழி

அம்பலவாணக்கவிராயரவர்கள்செய்த

அறப்பளீசுரசதகம் மூலமும்

சதுரகிரி. திருநெல்வேலி வித்வான்

குப்புசாமிப்பிள்ளை அவர்கள்செய்த

உரையும்.

MADRAS:

PRINTED AT THE S. P. V. PRESS.

No. 84, Acharappen Street.

1911.

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

அதாவது.

சதுரகிரியென்னும் தலத்தில் அறப்பளீசுரம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிற சிவபெருமானது திருநாமத்தைச் செய்யுள்தோறும் அமைத்துப் பாடப்பெற்ற நூறுசெய்யுள்கொண்ட ஒரு பிரபந்தம். இந்நூலின் செய்யுளொவ்வொன்றிலும் இறுதியில் "அருமைமதவேள் அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீ சுரதேவனே" என்பது மகுடமாக அமைக்கப்பட்டிருத்தல் காண்க. அறப்பளீ சுரரைப் புகழ்கின்றசதகம் என இரண்டனுருபும் பயனுந் தொக்கதொகை யென்றுவது, அறப்பளீசுரரது சம்பந்தமானசதகம் என ஆறும்வேற்றுமைத்தொகையென்றுவது விரித் துரைத்துக்கொள்க. அறப்பள்ளியென்பதைக் கோயிற்பே ரெனக்கொண்டால் அங்கு எழுந்தருளியிருக்கிற ஈசுரர்மேற்பாடிய சதகம் என்றுகும்,

நகமாவது தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்று, அகப்பொருள் ஒன்றன்மேலாவது புறப்பொருள் ஒன்றன் மேலாவது நூறுசெய்யுள் கற்பித்துக் கூறுதல் இதனிலக்கணம். அகப்பொருள் - காமவிஷயம். புறப்பொருள் - மற்ற விஷயங்கள். இந்நூலில் பலவகை நீதிகளும் மற்றும் பலவகை யியல்புகளும் கூறப்பட்டுள்ளனவாதலால் இது புறப்பொருளின்மேற் கூறியதாகக் கொள்க "விளையு மொரு பொருண் மேலொரு நூறு, தழையவுரைத்தல் சதகமென்ப,, என்பது இலக்கணவிளக்கம். சதம்-நூறு என்னுந்தொகையை யுணர்த்தும் வடசொல், அதுகப் பிரத்தியயம் பெற்றுச் சதகம் என்றாயிற்று.

இந்நூல், முதலிற் காப்புச் செய்யுளா யுள்ள வெண்பா வொன்று தவிர நூறு ஆசிரிய விருத்தங்களை யுடையது. இந்நூலாசிரியர் அம்பலவாண கவிராயரென்பதை, இந்நூலினீற்றில் தற்சிறப்புப் பாயிரமாகக் கூறிய செய்யுளில், "அம்பலவாணகவிராய னுரகு மென்புன் கவியையுஞ் சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகும்,, என்று இந்நூலாசிரியர்தாமே கூறியிருத்தலால் இனிதுவிளங்கும். இவர், சோழநாட்டில் தில்லையாடியில் வேளாளர்குலத்தில் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் தோன்றிப் பின்பு சீகாழியில் தங்கி, அறுபத் தேழுவயது வரையில்

வாழ்ந்து, இராமநாடகம், அனுமார் பிள்ளைத்தமிழ், சீகாழிப்புராணம் முதலிய நூல்களைச்செய்து பிரசித்திபெற்ற சீகாழி அருணாசலக் கவிராயரது புதல்வர் மூவருள் மூத்தவர். ஆகவே இவர் பிறந்தகாலம் ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்குமுன் என்பது விளங்குகின்றது. இவர்புதல்வர் சுப்பராயக்கவிராயர் என்பவர். இந்நூற் செய்யுட்களின் மகுடந் தோறும், "அருமைமதவேள் அனுதினமு மனதினினை" என்ற அடைமொழியைச் சிவபெருமானுக்குக் கொடுத்துக் கூறியிருத்தலால், இவர் மதவேள் என்னும் வேறுபெயருள்ள ஒரு பிரபுவினால் ஆதரிக்கப் பட்டவரென்று அறியலாம். அந்தப் பிரபுவானவர், வேளாள சாதியில் தோன்றினவர் என்றும், கங்காகுலத்தவர் என்றும், மோழை பூபதிஎன்னும் பிரபுவினது புதல்வர் என்றும், ஈகை அறிவு, அழகு, அதிகாரம், கீர்த்தி, முதலியவற்றிற் சிறந்தவர் என்றும் இந்நூலால் விளங்கும் இந்நூலின் முதற் செய்யுளில் "மோழை பூபதி பெற்ற அதிபனெம தருமைமதவேள்" என்றும், ௫-வது-செய்யுளில் "நீதிசேரரச னெம தருமை மதவேள்" என்றும், எ-வது-செய்யுளில், "கங்காகுலத்தலைவன் மோழை தருமழகனெம தருமைமதவேள்" என்றும், அ-வது-செய்யுளில், "இவையெலாமறியுமெம தருமைமதவேள்" என்றும், ௰-வது-செய்யுளில், "கற்பதருவாகுமெம தருமை

மதவேள்" என்றும், ௪௭-வது - செய்யுளில், " அவனிபுக
ழருமைமதவேள் " என்றும், ௭௩-வது-செய்யுளில், "ஆழி
புடைசூழுலகில் வேளாளர்குலதிலக னருமெமதருமைமத
வேள் " என்றும், ௭௯-வது-செய்யுளில், " பைங்குவளை
மாலையணி மார்பனருமன்னலெம தருமைமதவேள் " என்
றும், ௯௭-வது-செய்யுளில், " இச்செகமெலாங் கொண்
டாடவே அருள்கற்பதருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெமதருமைமதவேள் " என்றும் இவரை இந்நூலா
சிரியர் பாராட்டிக் கூறியிருத்தல் காண்க. அறப் பள்ளி
யென்பது வைப்புஸ்தலங்களாகிய சிவஸ்தலங்களுள் ஒன்
றென்றும், அது கொல்லிமலையைச் சார்ந்துளது என்றும்,
அதற்குச் சதுரகிரியென்னும் பெயருண்டென்றும், ஷை
சதகத்தைப் பாடுவித்த பிரபுவானவர் கொல்லி மலையி
லுள்ள குண்டுனிநாட்டுத் தலைவராகிய கருமக்கவுண்டர்
என்றும், ஷை சதகத்தில் மதவேள்என்று கூறப்படுகிறவர்
இவர்தாம் என்றும், மோழைக்கவுண்டர் என்பவர் இவரு
டைய தந்தையார் என்றும் சிலமுதியோர் கூறுகின்றனர்.

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

மூலமும் உரையும்.

காப்பு - வெண்பா.

உம்பர்கோ னெம்பெருமா னோங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

(இ-ள்.) உம்பர்கோன்-தேவர்களுக்குத் தலைவனும், எம்பெருமான்-எம்பெருமானும் ஆகிய, ஓங்கு-உயர்ந்த, அறப்பளீசுரன்மேல்-அறப்பளீச்சுரன்மீது, பொருள் சேரும்சதகம், வளமான அர்த்தவிசேஷங்கள் கூடின ஒருசதகத்தை பாட(நான்) பாடுதற்கு, அம்-அழகாகிய, புவியோர்-பூமியிலுள்ளோர், ஆக்கும்-செய்கிற, துதிக்கை-தோத்திரங்களை, உள்ளான்-உடையவன், அன்பு உடையார்க்கு(தன்னிடத்தில்)அன்புடையவர்களாகிய அடியார்க்கு, இன்பு அருளி-பேரின்பத்தை யருள் செய்து, காக்கும்-காக்கின்ற, துதிக்கைஉள்ளான்-தும்பிக்கையுளளவன், (அந்தவிநாயகக் கடவுளானவன்) காப்பு-காவலாகக்கடவன். எ-று.

உம்பர்-மேலிடம், வான், அது அவ்விடத்திலுள்ள தேவரையுணர்த்தலால் இடவாகுபெயர். கோ-அரசன்,

அது னகரச்சாரியை பெற்றுக்கோன் என்றாயிற்று. உம்பர்கோனும் எம்பெருமானும்ஆகிய அறப்பளீசுரன் என்றியையும். பெருமான்-பெருமையுடையோன். அம்புவி ஒரு சொல்லெனக் கொண்டு உலகு எனப் பொருளுரைத்தலு மாம். அம்புவியோர் என்றது கற்றோரும் மற்றோருமாகிய இருதிறத்தாரையு முணர்த்தும், கற்றோர் கவிகளால் துதிப்பவர், மற்றோர் வாய்ச்சொற்களால் துதிப்பவர் ஆதலால், துதிக்கை-துதித்தல், இது தொழிலாகு பெயராய்த் துதித்தலையுடைய தோத்திரத்துக் காயிற்று. துதிக்கையுளான் என்பதற்கு துதித்தற்குரிய கடவுளாயிருப்பவன் என்றுரைத்தலும் பொருந்தும், இப்பொருட்கு துதிக்கு ஐஉளான் எனப் பிரித்துக்கொள்க. அன்பு-பத்தி, சைவசமயிகள் யாதானுமோர் நூல்செய்யத் தொடங்குங்கால், முதலில் விநாயகக் கடவுள் வணக்கங் கூறுதல் மரபாதலால் இந்நூலாசிரியரும் ஆன்றோரொழுக்கப்படி உம்பர் கோன் என்னும் முதற்குறிப்புள்ள இவ் வெண்பாவினால் விநாயகக்கடவுள் வணக்கங் கூறினார். இவ்வாறு கூறுதல் யாதுக்கெனின், தொடங்கும் நூல்இடையூறின்றி யினிது முடியுமென்பது கருதியென்க இடையூறுவாராமற்காத்தலால் விநாயகக் கடவுளுக்கு விக்நராஜர் என்னும் பெயர் வழங்கும். விநாயகர் - என்பதற்குத் தமக்குமேலொரு தலைவரில்லாதவர் என்பது பொருள். இக்காப்புச் செய்யுளில் தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் கூறப்படுதலால் இது தற்சிறப்புப் பாயிரம் எனப்படும். தெய்வ

வணக்கமாவது விநாயகக்கடவுளை வணங்குதல், செயப்படுபொருளாவது அறப்பளீசுரசதகம், "தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளும், எய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" என்பதிலக்கணம். பாடுதற்கு எழுவாயாகிய நான் என்பது வருவித்துரைக்கப்பட்டது. காப்பு என்னும் பெயர்ப்பயனிலையோடு ஆகக்கடவன் என்பது சேர்க்கப்பட்டது. அம்புவி - நீர் சூழ்ந்தபூமி யெனினுமமையும். அம் - நீர். (கடல்) எல்லா நீர்க்குமுதலாதலால் கடலை நீரென்றே கூறலாம். எல்லா நீர்க்கும் என்றது ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என்பவற்றுக்கும் என்றபடி.

உயர் பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதனவானுத லரிததி னிரக்கமுள
செஞ்சினோ னாத லரிது
நேசமுட னுன்பதத் தன்பனாய் வருதலி
னீணிலத் தினு மரிததாம்

அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
. வதிபனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை சருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (க)

(இ-ள்.) கடல்-கடல் சூழ்ந்த, உலகில்-உலகத்தில், வாழும் வாழ்கின்ற, உயிர்-உயிர்களின், எழுபிறப்பினுள்-எழுவகைப்பிறவிகளுள்ளே, மிக்க-மேலான, காட்சிபெறு-அறிவைப்பெற்ற, நரசென்மமாய்-மானுடப் பிறப்பாக, கருதமதிக்கும்படி, பிறத்தல்-பிறப்பது, அரிது-அருமையாகும், அதினும்-அதைப்பார்க்கினும், உயர்சாதியில் - உயர்குலத்தில், கற்புவழிவருதல் - கற்புள்ள வமிசத்தில் பிறத்தல், அரிது - அருமையாகும், அது தன்னினும் - அதைப் பார்க்கினும், வடிவமுடன் - உருவோடு, அவயவம் - உறுப்புகள், குறையாது-குறையாமலும், பிழையாது - தவறாமலும், வருதல் - பிறத்தல், அரிது - அரிதாகும்,வந்தாலும் (அப்படி) பிறந்தாலும், இது புண்ணியம் இதுபாவம் என்று எண்ணி - இதுபுண்ணியம் இதுபாவம்என்றாலோசித்து, மாசு இல்வழிநிற்றல் - குற்றமற்றவழியில் நிற்பது. அரிது - அரிதாகும்,(அதினும்-அதிற்காட்டிலும்.) நெடிய தனவான் ஆதல்-பெருஞ் செல்வனாகுதல், அரிது-அரிதாகும், அதின - அதைப்பார்க்கிலும், இரக்கம்உள்ளநெஞ்சினோன்ஆதல் - இரக்கமுள்ளமனமுடையவனாகுதல்,அரிது அரிதாகும்,அதினும்-அதைப்பார்க்கிலும், இ-இந்த, நீள்நிலத்து-பெரியவிலவுலகத்தில்,நேசமுடன்-பக்தியோடு,உன்

பதத்து-உன்திருவடிக்கு, அன்பனாய்வருதல்-அன்பனாகிவருதல், அரிது-அரிதாகும், அடியவர்க்கு-அடியார்க்கு, அமுதமே-அமிர்தம்போல்பவனே, மோழைபூபதிபெற்ற அதிபன்-மோழை பூபதியீன்ற அதிபனாகிய, எமது அருமை மதவேள்-எமதருமையாகிய மதவேள் என்பவன், அனுதினமும்-நாள்தோறும், மனதில்-மனத்தில், நினைதரு-நினைக்கின்ற, சதுரகிரிவளர்-சதுரகிரியில் வளராநின்ற, அறப்பளீசுர தேவனே-அறப்பளீசுரன் என்னும்கடவுளே. எ - று.

உயிரெழு பிறப்பு என்றது. தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவற்றை. காட்சி-அறிவு, கருதல்-மதித்தல், கற்பு-ஆடவர்க்குக் கல்வியென்றும் மாதர்க்குப் பதிவிரதாதர்மமென்றும் கொள்க. வடிவம் - முழுவடிவு, அழகுமாம். அவயவம் - உறுப்புக்கள், அவை கால் கை முகம் தலை முதலியன. குறைதல், உறுப்பிருந்தும் குறைந்திருத்தல், பிழைத்தல்-அவயவமில்லாமலேயிருத்தல். மாசில்வழி-நல்வழி (முத்திநெறி.) நெடியஎன்பதை தனத்துக் காதல் காலத்துக் காதல் விசேடணமாக்குக. நினைதரல்-தியானித்தல். நினைதருஎன்பதற்குப்பகுதி நினைதா.

மனையாட்டி சிறப்பு.

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷி யாய்மிக்
கமலைநிக ரூப வதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்த வளுமாய்

மணமிக்க நாணமட மச்சம்பயிர்ப் பென்ன
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்
இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி
யென்பெய ரிலாத வளுமா
யிரதியென வேலிலை புரிபவளு மாய்ப்பிறர்த
மில்வழி செலாத வளுமாய்
அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய
ளாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனநினைந் தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௨)

(இ ள்) கணவனுக்கு- தன்நாயகனுக்கு, இனியள் ஆய்- இனிமையுள்ளவளாகி ம்ருதுபாஷிஆய் - மென்சொல்லையுடையவளாகி. மிக்க-மேலான, கமலைநிகர்-திருமகளைநிகர்க்கிற,ரூபவதிஆய்-வடிவுடையவளாகி, காய்சினம் இல்லாளும் ஆய்-சுடுகின்றகோவமில்லாதவளுமாகி, நோய்பழி இல்லாதது-நோயும் பழியுமில்லாததாகிய, ஓர்-ஒப்பற்ற,கால்வழியில் வந்தவளும் ஆய்-சந்ததியில் தோன்றினவளுமாகி,மணம்மிக்க-வாசனைமிகுந்த, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னவரும்·நாணம்மடம் அச்சம் பயிர்ப்பு என்று சொல்லும்படி யுண்டாகிய, இனியமார்க்கவதி ஆய் - நன்னெறியுடையவளாகி, மாமிமாற்கு மாமிக்கும் மாமனுக்கும், இதம் செய்பவளும் ஆய்·உபசாரம் செய்பவளுமாகி, வாசல் வரு

விருந்து ஓம்புபவள் ஆய்-தன் வாசலில்வந்த விருந்தினரை யும் உபசரிப்பவளாகி, இணை இல் - நிகரற்ற, மகிழ்நன்-க ணவனது, சொல்வழி-சொல்வழியிலே, 'நிற்பவளும்ஆய்-நி ற்பவளுமாகி, வந்தி என்பெயர் இல்லாதவளும் ஆய்-மலடி யென்கிற பெயரில்லாதவளுமாகி, இரதியெனவே - இரதி யென்றே சொல்லும்படி, லீலைபுரிபவளும் ஆய்-லீலைசெய்ப வளுமாகி, பிறர் இல்வழி செல்லாதவளும் ஆய்-அந்நியரது வீட்டு வழியே போகாதவளுமாகி, அவளியிழை ஒருத்தி உண்டாயின்-பெண்ணொருத்தியுண்டானால், அவள்-அந்த ப்பெண்ணானவள், கற்பு உடையவள் ஆகும் - கற்புடையவ ளாவாள் எமது அருமைமதலேவள். எ-று.

கணவன்-கண்ணோட்ட முள்ளவன்,கண்-கண்ணோட்டம் (தாக்ஷிண்யம்), இதில் அகரம் சாரியை, வகரம் உடம்படு மெய். பாஷி - பாஷிப்பவள்(பேசுகிறவள்). தாமரைமலரிலி ருப்பவளாதலால் திருமகளுக்குக் கமலையென்னும்பெயர்வ ந்தது. இது கமலா என்னும் வடசொற்றிரிபு ரூபம்,வடிவு, (அழகு) காய்தல், சுடுதல், அடுத்தாரைச் சுடுதலால் சின த்தைக் காய்சினம் என்றார் "சினமென்னுஞ்சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும் ஏமப்புணையைச் சுடும்" என்றார் பெருநாவலரும். கால்வழி, சந்ததி, மணம், வாசனை, அது இங்குப்புகழைக் குறித்தது. "தற்காத்துத் தற்கொண் டாற் பேணித்தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்பது திருக்குறள். நாணம், மடம்,அச்சம்,பயி ர்ப்பு என்னும் நான்கும் பெண்மைக்குணங்கள்,இவற்றுள்

நாணயமாவது பரபுருடரைக்காண நாணுதல், மடமாவது தன்கணவன் பணிவிடைசெய்தலையன்றி வேறொன்றையும் அறியாமை. அச்சம்-பரபுருஷதரிசன மாத்திரையால் அஞ்சுதல். பயிர்ப்பு-பரபுருஷரைக்கண்டால் அருவருத்தல். லீலை-புணர்ச்சி. அணியிழை-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஆபரணமணிந்தவள் என்பது பொருள்.

நன்மக்கட் பேறு.

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
 கருமங்கள் செய்துவரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
 சாதக னெனப் படுதலும்
மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
 மறுத்துவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
 மார்க்கமுந் தீர்க்கா யுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
 மீகையுஞ் சன்மார்க்கமு
மிவையெலா முடையவன் புதல்வனு மவனையே
 யின்றவன் புண்ய வானும்
அங்கச விரோதியே சோதியே நீதிசே
 ராசனெம தருமை மதவே
ளாதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுரதேவனே. (௩)

(இ-ள்.)தம்குலம் விளங்கிட-தமதுகுலமானது விளங்கும்படி, பெரியோர்கள் செய்துவரும்-பெரியோர்கள் செய்துவந்த, தருமங்கள் செய்துவரலும்-தருமங்களைச் செய்துவருதலும், தன்மம்மிகுதானங்கள் செய்தலும் தர்மமிகுந்த தானங்களைச்செய்தலும், கனயோகசாதகன் எனப்படுதலும்-பெரியயோக ஜாதகனென்று பிறரால் சொல்லப்படுதலும, மங்குதல் இல்லாத-குறையாத அறிவினையுடைய,தன்-தனது,தாய் தந்தை குரு-தாய்தந்தை குரு என்பவர்களுடைய, மொழி-சொல்லை, மருது-மறுக்காமல், வழிபாடுசெயலும்-வழிபடுதலும்,வழிவழிவரும்-வமிசபாரம்பரியமாய்வந்த, தமது-தம்முடைய, தேவதாபத்திபுரி மார்க்கமும்-தேவதா பக்தியைச் செய்கிற நன்னெறியும், தீர்க்காயுளும்-தீர்க்காயுசும், இங்கித குணங்களும்-இனியகுணங்களும், வித்தையும்-கல்வியும், புத்தியும்-அறிவும், ஈகையும் கொடையும், சன்மார்க்கமும்-நன்னெறியும் ஆகிய, இவையெலாம்-இவையாவையும், உடையவன்-உடையவனே,புதல்வன் ஆம்-புத்திரனுவன்,அவனை ஈன்றவனே-அவனைப்பெற்றவனே, புண்ணியவான் ஆம்-புண்ணியவானுவன், அங்கசவிரோதியே-மன்மதசத்ருவே, சோதியே-ஒளியுருவனே, நீதிசேர் அரசன், நீதிபொருந்திய அரசனுகிய,எமது அருமைமதவேள். எ-று.

தம்குலம் விளங்கிட என்றுராயினும் குலத்துக் கினமாகிய கோத்திரத்தையும் சேர்த்துக் குலகோத்திரங்கள் விளங்கிட எனப் பொருளுரைத்துக் கொள்க. பெரியோர்

கள் முன் பிறர்கள். தருமங்கள் முப்பத்திரண்டுவகைத் தர்மங்கள், ஆவையாவன.—வண்ணான், நாவிதன், காதோலை, சோலை, மடம், தடம், சுண்ணம்பு, அறவைப்பிணம் சுடல், மங்களவாத்தியம், அன்னமளித்தல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல், தலைக்கெண்ணெய்கொடுத்தல், பெண்போகந்தரல், ஐயமிடல், ஆதுலர்க்குச்சாலைகட்டுவித்தல், ஏறுவிடுத்தல், கலையோதுவார்க்குண்டி, விலங்குக் குணவு கொடுத்தல், சிறைச்சோறளித்தல், பிறர்துன்பம்நீக்கல், கன்னியாதானஞ்செய்தல், கற்றவராகிய அறுசமயத்தார்க்கும் உணவு கொடுத்தல், விலைகொடுத்து உயிர்களைமீட்டுவிடுதல், குழந்தைகட்குப் பால்கொடுத்தல், பிள்ளைபெறுவித்தல், குழந்தைகளைவளர்த்தல் என்பன. தானங்கள்-கோதான பூதான ஹிரண்யதானங்கள். கனயோகசாதகன்-பெரியயோகத்திற்பிறந்தவன். மங்குதல்-புகழ் குறைதல், தீர்க்காயுள்-நெடுங்காலம் உயிர்வாழ்ந்திருத்தல், இங்கிதம் - இனிமை (நன்மை) உடையவன் என்பதனிற்றில் பிரிநிலை யேகாரம் தொக்கது. அங்கசவிரோதி - மன்மதனை யெரித்ததனால் வந்த பெயர்.

சகோதர ரொருமை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுக மெனக்
கொண்டுதாந்தேடுபொருளவர்தேடு பொருளவர்கொள்
கோதில்புகழ் தம்புக ழெனக்

தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந்
    தீதிலவர் தவமா மெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
    சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருட னிறைத்திடுங்
    கொள்கைபோற் பிரி வின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
    கூறுவது வே தருமமாம்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
    யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
    ரறப்பளீ சுர தேவனே. (சு)

(இ-ள்.) கூடப் பிறந்தவர்க்கு-உடன்பிறந் தவர்களுக்கு, எய்து துயர்-உண்டாகிய துன்பம், தமது துயர்என-தமக்குண்டாகிய துன்பம்என்றும், கொள்சுகம்-அவர்களடைந்த இன்பம், தம்சுகம்என - தாமடைந்த இன்பமென்றும், கொண்டு-உட்கொண்டு(நினைத்து), தாம்தேடுபொருள் அவர்தேடுபொருள்என - தாம்சம்பாதித்தபொருள் அவர் சம்பாதித்தபொருளென்றும், அவர்கொள்-அவரடைந்த,கோது இல்புகழ்-குற்றமில்லாதபுகழ், தம்புகழ்என-தமதுபுகழ் என்றும், தேடுற்ற அவர்நிந்தை-தேடிக்கொண்ட அவர்பழி தம்நிந்தைஎன-தமது பழியென்றும், தம்தவம்-தமது தவம், தீது இல்-தீமையில்லாத,அவர் தவம்ஆம்என-அவர் தவமாகுமென்றும், இவர்க்கு - இவ்விருவர்க்கும், சீவன்ஒன்று-உயி

ரொன்று. உடல்வேறு-உடல் வேறாயிருந்தன, என - கண் டோர்சொல்லும்படி, ஐந்தலை-ஐந்துதலைகளையுடைய, சிறு அரவம்-சிறுகின்ற பாம்பானது, மணிவாய்தொறும்-அழகி யவாய்தோறும், கூடுற்ற இரையெடுத்து-சேர்ந்த இரையை யெடுத்து, ஓர் உடல்நிறைத்திடும் கொள்கைபோல்-ஒருஉ டம்பை நிரப்புகிற தன்மைபோல, பிரிவு இன்றி-பிரிவில்லா மல், கூடிவாழ்பவர் தம்மையே-சேர்ந்து வாழ்கின்றவர்களை யே, சகோதரர் எனக்கூறுவதுவே-சகோதரர் என்றுசொ ல்லுதலே, தருமம்ஆம்-தர்மமாகும், ஆடிசிவந்த - நடனஞ் செய்துசிவந்த, செந்தாமரைபாதனே - செந்தாமரைமலர் போலுந் திருவடிகளை யுடையவனே, அண்ணல்-பெருமை யையுடைய, எமதருமைமதவேள்.எ-று

கோதில்புகழ்-எக்காலத்தும் விளங்கும்புகழ். தவம்-தவப்பயன் உடல்வேறு-உடம்பிரண்டு. ஐந்தலைஅரவம்என வியையும், மணிவாய் - மாணிக்கத்தையடக்கும் வாய்எனி மையும். இரை-உணவு. ஒருடல்என்றது-ஒருவயிறு என் றபடி, பாம்புக்குஉடல் முழுதும்வயிறே யாதலால் வயிற் றை உடலென்றேகூறினர். சகோதரர்-ஒருவயிற்றிற் பிறந் தவர்-உதரம். வயிறு-தாமரை-பொருளாகுபெயர்.

சற்குரு வியல்பு.

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
    விவரவிஞ் ஞான பூர்ண
வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
    வீர வைராக்ய முக்ய

சாதா ரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதி நிஷ்டானுபவராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பர சமயமும்
நீதியி னுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாச மிலராய்
நித்தியா னந்தசை தன்யரா யாசையறு
நெறியுளோர் சற்குரவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமா
மமலசிவம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ரு)

(இ-ள்) வேதாந்த சித்தாந்தவழிதெரிந்து - வேதாந்த சித்தாந்த வழிகளையறிந்து, ஆசாரவிவரம்-ஒழுக்கவகை, விஞ்ஞானபூர்ண வித்யாவிசேஷம்-மேலாகிய ஞானபூர்ண வித்யாவிசேடம், சற்குணம்-நற்குணம், சத்யம்-உண்மை, சம்பன்னம்-சம்பத்துடைமை, வீரவைராக்யம்-வீரவைராக்கியம், முக்கியசாதாரணப்பிரியம் - முதன்மையாகிய சாதாரணப்பிரியம், யோகமார்க்க ஆதிக்யம் - யோகமார்க்கச் சிறப்பு, சமாதி நிஷ்ட்டாநுபவர் ஆய்-சமாதி நிஷ்டை என்பவற்றை அநுபவமாகவுடையவராய், சட்சமயநிலைமையும் அறுசமய நிலைகளையும், பரமந்த்ர பரதந்த்ரதருமமும்-பரமந்த்ர பரதந்த்ர தருமங்களையும், பரசமயமும்-பரசமயங்களையும், நீதியின் உணர்ந்து - நீதியினாலறிந்து, தத்துவ

மார்க்கர் ஆய் - தத்துவநெறியையுடையவராகி, பிரமநிலை கண்டு - பிரமப்பொருளின் நிலையைக்கண்டு, பாசம் இலர் ஆய்-பற்றில்லாதவராகி, நித்தியானந்த சைதந்யராய் - நித்யாநந்த சைதன்யராகி, ஆசை அறுநெறிஉள்ளோர்-ஆசையற்ற வழியுள்ளவர், சற்குரவர் ஆம் - உத்தமாசாரியராவர், ஆதாரம் ஆய்-ஆதாரமாகி, உயிர்க்குஉயிர் ஆகி - உயிருக்கு உயிராகி, எவையும் ஆம்-மற்றெல்லாப் பொருளுமாகின்ற, அமல-அமலனே, எமதருமைமதவேள்-எ-று.

வேதாந்தம் - வைதிக முடிவு (வேதமுடிவு)- சித்தாந்தம், ஆகமமுடிவு (தருக்கமுடிவு). விஞ்ஞானம் - விசேட அறிவு, பூர்ணம்-நிறைவு, வித்யாவிசேஷம்-கல்விச்சிறப்பு, வீரவைராக்யம்-சிறந்தவைராக்யம், வைராக்யம்-நிராசை-சாதாரணப்பிரியம்-எல்லா வுயிர்களின் மேலுமுள்ள பொதுவானகிருபை, ஆதிக்யம்-மேன்மை, சட்சமயம்-ஆறுசமயங்கள், அவையாவன-கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், வியாசமதம், ஜைமினிமதம் இவையாறும் வேதாந்த மதமெனப்படும். பௌத்தம், ஜைநம்; பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூனியவாதம் இவையாறும் புறச்சமய மென்பர் வைதிகர். வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம். அன்றியும் புறச்சமயமாவன, உலோகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம் இது சைவர்கொள்கை. வைஷ்ணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் இவை வைதிகமதம் எனப்படும்.

பரமந்த்ரம்-இதரமாகிய மந்திரங்கள். பரதந்த்ரம் இதரமாகிய தந்திரங்கள். பரசமயம்-அந்நியசமயங்கள். தத்துவம்-உண்மை, தத்துவமார்க்கம்-உண்மைவழி. சைதன்னியர்-அறிவுடையார். ஆதாரம்-இடம். அமலன்-பரிசுத்தன்.

நன்மாணாக்க ரியல்பு.

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி
மாறு திகழ்ந்தாலு மோ
மனதுசற்றாகிலுங் கோணாது நாணாது
மாதா பிதா வெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுட லாவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றி மலரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற் சீடராம்
வினைவேர றும்படி யவர்க்கருள்செய் திடுவதே
மிக்க தேசிகரது கடன்
ஐயா புரம்பொடி படச்செய்த செம்மலை
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சு)

(இ-ள்.) வைதாலும்-(தம்மைஆசிரியர்) திட்டினாலும்,ஓர் கொடுமை செய்தாலும்-(ஒருகொடிய தண்டனையைத் தம

க்கு அவர்) செய்தாலும், சிறிமாறுது இகழ்ந்தாலும்-(தம் மேல்அவ்வாசிரியர்) கோபித்து இடையறுமல் அவமதித் தாலும், மனதுசற்று ஆகிலும் கோணுது - மனம்சிறிதாயி னும் மாறுபடாமலும், நாணுது - (ஆசிரியருக்குப் பணிவி டைசெய்வதில், வெட்கப்படாமலு மிருந்து, நீ எனக்கு பொய்யாமல் மாதா பிதா என்று - நீயே எனக்குத் தவரு மல் தாயும் தந்தையுமென்று பணிமொழிகூறி, கனிவொ டும் நெஞ்சுருக்கத்துடன், பணிவிடைபுரிந்து (அவ்வாசிரி யர்க்கு) குற்றேவல்செய்து, புனித-பரிசுத்தனே, பொருள் உடல்ஆவியும்-பொருள்உடல் உயிர் என்பவையெல்லாம், உனதுஎன - உன்னதேயென்று, தத்தம்செய்து - தத்தம் பண்ணி, இரவுபகல்போற்றி-இரவும்பகலும் துதித்து வழி பட்டு, மலர்அடியில்வீழ்ந்து - (அவ்வாசிரியரது) தாமரை மலர்போன்ற சீர்பாதங்களில்விழுந்து தண்டனிட்டு, மெ ய்யாகவேபரவி-உண்மையாகவேபுகழ்ந்து, உபதேசம்பெற விரும்புவோர் - (அவ்வாசிரியரிடத்தில்) மந்திரோபதேசத் தைப் பெற்றுக்கொள்ள இச்சிப்பவர், சற்சீடர்ஆம்-நன்மா ணக்கராவர், வினைவேர்அறும்படி-(அச்சீடரது) வினைகளி ன் வேரற்றுப்போகும்படி, அவர்க்கு - அந்தச்சீடருக்கு, அருள்செய்திடுவதே-மந்திரோபதேசம் செய்தருள்வதே, மிக்க-மேலான, தேசிகர்துகடன்(நல்லஆசிரியரது) கடனு கும், ஐயா-ஐயனே, புரம்-முப்புரம், பொடிபடச்செய்த- பொடியாகச்செய்த, செம்மலே-பெரியோனே, அண்ணல்- பெருமையுள்ள, எமதருமை மதவேள்-எ-று.

வைதாலும் செய்தாலும் இகழ்ந்தாலும்என்பவற்றில் உம்மைகள் எண்ணுப்பொருளன, செய்தாலுமே இகழ்ந் தாலுமே, என்ற ஏகாரங்கள் அசைநிலை, இழிவு சிறப்பெ ளினுமமையும், சற்றாகிலும் என்னும் உம்மை இழிவு சிற ப்பு, கனிவொடும என்னும் உம்மை இசைநிறை, பொரு ளுடலாவியும் என்பதில்உம்மை இறந்ததுதழீஇயது, உன் றனது என்பதில் தன்சாரியை, பொருளுடலாவி உன்றன துஎன்றது பன்மையொருமைமயக்கம், தனித்தனிஉன்னு டையதுஎன்க. இரவுபகல் - உம்மைத்தொகை, இரா என் பது குறியதன்கீழாக்குறுகி உகரமேற்று இரவு என்றாயி ற்று. மலரடி-உவமைத்தொகை, மெய்யாகவே என்பதில் ஏகாரம்தேற்றம், உபதேசமது என்பதில் அதுபகுதிப் பொருள்விகுதி, சற்பீடராம் என்பதிலுள்ள ஆம்என்பதை த்தேற்றப் பொருளதாகவாவது அசையாகவாவதுகொள் க. செய்யுமென்முற்றாகக் கொள்ளலாகாது அது பலர்பா லுக்குவாராததலால். அருள்செய்திடுவதே என்பதில் ஏ காரம்பிரிநிலையோடுதேற்றம், ஈற்றடியிலுள்ள ஏகாரங்கள் விளியுருபுகள், மநஸ், புநீத, ஸச்சிஷ்யர், ஆர்ய, ஈஸ்வர, என்ற வடமொழிகள் விகாரப்பட்டன. மாதா, பிதா, தத் தம், உபதேசம், தேசிகர், புரம், அநாதிநம், சதுரகிரி, தே வன், என்பன வடசொற்கள், சற்று-இடைச்சொல், மாதா பிதா என்பன பெயர்ப்பயனிலையாய் நின்றன, ஆவாய்என வருவிப்பினுமமையும், செம்மல், அண்ணல், என்பனஆண் பாற் சிறப்புப் பெயர்கள், மதவேள் என்னும் மன்மதன்பெ

யர் இங்குஆகுபெயர் வகையால் ஒரு பிரபுவுக்கு வழங்கியது, அன்பிற்சிறத்தலால் மாதாவை முற்கூறினர். பொருளுடலாவி என்றமுறை ஒன்றினும்ஒன்று மேன்மேற் சிறத்தலைக்குறித்தது. செம்மை மேன்மை அழகு என்பவற்றால் தாமரைமலர் அடிக்கு உவமையாயிற்று. அடைகொடாமல் மலர்எனக்கூறினல் தாமரைமலரையே குறிக்கும் மெய்யாகவே பரவுதலாவது உள்ளும்புறமும் ஒத்துப்புகழ்தல். தீவினைபோலவே நல்வினையும் பிறப்புக்குக் காரணமாதலால் வினைவேரறும்படி எனப்பொதுப்படக் கூறினர். வினைவேர் என்றது அவாவை. " அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவா அப்பிறப்பீனும்வித்து!! என்பது திருக்குறள், " ஆர்வவேர் ,, என்பது சிந்தாமணிதேசிகர்-சிறந்த ஆசிரியர்,

திரிபுரமெரித்தகதை:—தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன்என்னும் மூவரும் பெருந்தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று, மயன்என்பவனால் சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்னும் மூன்றிடங்களிலும் முறையேபொன்வெள்ளி இரும்பு என்பவற்றால் அரண்வகுத்து இயற்றப்பட்டு ஆகாசமார்க்கத்தில் சஞ்சரிக்குந் தன்மையுள்ள மூன்று பட்டணங்களையடைந்து, விதிமுறைவழுவாமற் சிவபூசைசெய்துகொண்டு, அந்தச் சிவபக்தி மஹிமையால் எவராலும் அழிக்கவொண்ணுதவராய், அப்படிப்பட்ட வேறு சில அசுரர்களோடு அந்த நகரங்களுடனே தாம் நினைத்த இடங்களில்

பறந்துசென்று பல இடங்களையும் பாழாக்கிவருகையில், அந்தத் துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், திருமால் மாயையினால் ஜிநாவதாரமும் புத்தாவதாரமுஞ்செய்து பற்பலதீய வழிகளைக்கற்பித்து உபதேசித்து மயக்கி அந்த அசுரர்களைச் சிவத்துவேஷிகளாகச் செய்து விட்டபிறகு, தேவர்கள் பிரார்த்தனையால் சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திரசூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்குவேதங்களை நான்கு குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருமலையை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும்; விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைத்து அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு, யுத்தசந்நத்தனாய்ச்சென்று போர்செய்யக்கருதிப்புன்சிரிப்புச் செய்தலும், அந்தப்புன்சிரிப்பினாலேயே அவ்வசுரர்கள்மடிந்துஅவர்களுடையபட்டணங்களும்பாழாயினவென்பதாம்

பொருள் செயல் வகை.

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்க வேண்டும்
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரண
முடலிற் றரிக்க வேண்டு
முற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
யோங்குபுகழ் தேட வேண்டும்

மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ
வழிதேட வேண்டு மன்றி
வழிதிற் புதைத்துவைத் தியாதபேர்களே
மார்க்க மறியாக் குருடராம்
அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ)

(இ-ள்) புண்ணியவசத்தினால்-(தாம் முற்சநநத்திற்செய்த) புண்ணியவசத்தால், செல்வம் வரவேண்டும் - செல்வமுண்டாகவேண்டும், பொருளை-அந்தச்செல்வத்தை, ரக்ஷிக்கவேண்டும்-காப்பாற்றவேண்டும், புத்தியுடன் - அறிவுடனே, அது-அந்தப்பொருள், ஒன்று நூறு ஆகசெய்து-ஒன்று நூறாகும்படி செய்து, போதவும் வளர்க்கவேண்டும்-(வியாபாராதிகளால்) மிகவும் விருத்தி செய்யவேண்டும், உண்ணவேண்டும் - உணவுமுதலியவற்றைப் புசிக்கவேண்டும், பின்பு-அதன்பிறகு, நல்லவஸ்திரம் ஆபரணம் - நல்ல ஆடையாபரணங்களை, உடலில் தரிக்கவேண்டும்-உடம்பில் அணிந்துகொள்ளவேண்டும், உற்ற - (தம்மைவந்து) அடைந்த, பெரியோர்-பெரியோர்கள், கவிஞர்-கவிவாணர் தமர்-உறவினர், ஆதுலர்க்கு-வறிஞர் என்னும் இவர்களுக்கு, உதவி-அவர் வேண்டுவன கொடுத்து ஓங்கு-உயர்ந்த, புகழ்-கீர்த்தியை, தேடவேண்டும் - சம்பாதிக்கவேண்டும், மண்ணில்-இந்த நிலவுலகத்தில், வெகு தருமங்கள்செய்ய வேண்டும் - அநேக தர்மங்களைச் செய்யவேண்டும், உயர்-

உயர்ந்த, மோக்ஷவழி தேடவேண்டும் - முத்திநெறியைத் தேடவேண்டும், அன்றி-(இவ்வாறு செய்தல்) அல்லாமல், வறிதின்-வீணாக, புதைத்துவைத்து மண்ணிற் புதைத்து வைத்து, ஈயாதபேர்களே - கொடாதபேர்களே, மார்க்கம் அறியா குருடர் ஆம் - வழிதெரியாத குருடராவர், அண்ணாலே-பெரியோனே, கங்காகுலத்தலைவன் - கங்காகுலத்தலைவனும், மோழைதரும்அழகன்-மோழைபூபதிபெற்ற அழகனும் ஆகிய, எமது அருமைமதவேள்-எ-று.

புண்ணியவசம்-புண்ணியப்பேறு.(பேறு-பயன்)-செல்வமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி போதவும் வளர்த்தல் - வியாபாரம் முதலியவை செய்து மிகுதியாக விருத்திசெய்தல். உண்ணவேண்டும் என்றது நன்றாயநுபவிக்கவேண்டுமென்றபடி - உற்றபெரியோர் - ஞானத்தைப் பெற்ற பெரியோர் எனினுமாம். உதவுதல் - கொடுத்தல். மோக்ஷவழி-முத்திநெறி, அதாவது சரியை கிரியையோக ஞானங்களாகிய நான்கு பாதங்களையும் முறையாய் அநுஷ்டித்தல். வறிதின்-வீணே, அதாவது தமக்கும் பிறர்க்குமுதவாமல் மண்ணிற் புதைத்துவைத்தல். ஈயாதபேர்கள் என்றது லோபிகளை மார்க்கம்-வழி, அது இங்கு நல்வழியைக் குறித்தது.

தீவழி விலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற செல்லொணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் னிற்கொணாது

கொஞ்சமே னுந்தீது செய்யொணு தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணு தயற்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணுது
கோளுரைகள் பேசொணுது
நஞ்சுதரு மரவொடும் பழகொணு திருள்வழி
நடந்துதனி யேகொ ணுது
நதிபெருக் காகிலதி னீஞ்சல்செய் யொண்ணுது
நல்வழி மறக்கொ ணுது
அஞ்சாம லரசர்முன் பேசொணு திவையெலா
மறியுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ)

(இ-ள்) வஞ்சகர்தமைகூடி மருவொணுது-கபடஜநங்களைச்சேர்ந்து நட்புச்செய்யலாகாது, அன்பு இல்லார்-அன்பில்லாதவரது, வாசலில் செல்லொணுது-வாசலுக்குப்போகலாகாது, எவரிடத்திலும் வாதுபுரியொண்ணுது-யாவரிடத்திலும் வாதுசெய்யலாகாது, அறிவு இல்லா மடையர் முன் நிற்கொணுது-அறிவில்லாத மடையருக்கெதிரே நிற்கலாகாது, கொஞ்சம் ஏனும் தீதுசெய்யொணுது-சிறிதாயினும் தீமைசெய்யலாகாது, ஒருவர்மேல் குற்றம் சொல்லொண்ணுது-ஒருவர்மீது குற்றம் சொல்லலாகாது, அயல் கோதையர்களோடு - அந்நியமாதர்களுடன், பரிகாசம் செய்யொண்ணுது-பரிகாசம் செய்யலாகாது, கோள்உரைகள் பேசொணுது - கோட்சொற்களைச் சொல்லலாகாது, நஞ்சுதரும்-விஷத்தைத்தருகிற, அரவொடும்-பாம்புடனே பழகொணுது-பழகலாகாது, இருள்வழி-இருட்டுவழியில்,

தனி-தனிமையாக, நடந்து ஏகொணாது-நடந்துபோகலாகாது, நதி-ஆறானது: பெருக்குஆயின் - பெருக்காயிருந்தால், அதில்-அதிலே, நீஞ்சல்செய்யொண்ணாது-நீந்தலாகாது, நல்வழி மறக்கொணாது-நன்னெறியை மறக்கலாகாது, அரசர்முன் - அரசருக்கெதிரில், அஞ்சாமல் பேசொணாது-அஞ்சாமல் பேசலாகாது, இவை எல்லாம் அறியும்-இவையாவுமறிகின்ற, எமதருமைமதவேள்-எ-று

கபடகுணமுள்ளவர்களோடு கூடினால் தீமையுண்டாமாதலால் "வஞ்சகர் தமைக்கூடி மருவொணாது" என்றும் அன்பில்லாதவரது வாசலிற் சென்றால் அவமானமுண்டாமாதலால் 'அன்பிலார் வாசலிற் செல்லொணாது' என்றும், வெற்றி தோல்விகள் ஒருவர் பங்கல்லவாதலால், 'வாதெவரிடத்திலும் புரியொணாது' என்றும், அவிவேகிகளுக்கெதிரே நின்றால் தமக்கு அநர்த்தமுண்டாமாதலால் 'அறிவிலா மடையர்முன் னிற்கொணாது' என்றும், சிறிதுதீமை செய்யினும் அது பெருந்தீமைக்குக் காரணமாதலால், கொஞ்சமேனுந் தீதுசெய்யொணாது' என்றும், ஒருவர் குற்றத்தை யெடுத்துச்சொன்னால் அவர் தமது குற்றத்தை யெடுத்துச் சொல்லுவராதலால் 'ஒருவர்மேற் குற்றஞ்சொல்லொண்ணாது' என்றும், பிறர் மனைவியரோடு அசதியாடினால் உயிர்க்கிறுதி நேரிடு மாதலால் 'அயற்கோதையர்களோடு பரிகாசஞ்செய்யொண்ணாது' என்றும்,ஒருவர்மேற் கோட்சொன்னால் 'அவர் தம்மீது கோட்சொல்லுவராதலால் கோளுரைகள்பேசொணாது' என்றும், பாம்போ

டு பழகினால் அது எக்காலத்தும் விஷத்தையே தருமாதலால் 'நஞ்சுதரு மாவொடும் பழகொணாது' என்றும், இருட்டுக்காலத்தில் தனியே சென்றால் அநேக ஆபத்துக்கள் நேரிடுமாதலால் 'இருள்வழி நடந்து தனியேகொணாது' என்றும்' பெருக்காற்றில் நீந்தினால் அது இழுத்துக்கொண்டு சென்று கடலிற் சேர்க்குமாதலால் 'நதிபெருக்காகினதிலீஞ்சல்செய்யொண்ணாது, என்றும், சன்மார்க்கத்தை மறந்தால் 'நரகப்ராப்தியுண்டாமாதலால் நல்வழி மறக்கொணாது' என்றும், அரசர்க்கெதிரே அச்சமில்லாமற் பேசினால் தண்டனைக்குள் சிறையுண்டாமாதலால்' அஞ்சாமலரசர் முன் பேசொணாது' என்றும் கூறினார்.

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற் கழகுதான்
தூயதவ மேன்மையுப காரம்விர தம்பொறுமை
சொல்லரிய பெரியோர் களைத்
தாழ்தல்பணி விடைபுரிதல் சீலமே சங்கருணை
சாற்றுமிவை யாமென்பர் காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி யெனவே
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெம தருமை மதவே

ள னுதினமு மனதினினை தருசநூா கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூ)

(இ-ள்.) வாழ் - (ஒருவன் இல்லறத்தோடுகூடி) வாழ்கின்ற, மனைதனக்கு-வீட்டுக்கு, அழகு-அழகு, குலம்-(உயர்) குலத்திற் பிறந்த, மங்கை-மனைவியாவள், குலமங்கைவாழ்வினுக்கு-அந்தக் குலமங்கையோடுகூடிவாழும் இல்வாழ்க்கைக்கு, அழகு-அழகு, சிறுவர்-புதல்வராவர், வளர்சிறுவருக்கு-(அப்படி பிறந்து) வளர்கின்ற சிறுவருக்கு, அழகு-அழகு, மாநிலம் துதிசெய் குணம்ஆம் - பெரியநிலவுலகத்தா ரெல்லாராலும், தோத்திரஞ் செய்யப்படுகிற நற்குணமாம், சூழ்குணமதற்கு-(அவ்வாறு) நிறைந்த நற்குணத்துக்கு, அழகு - அழகு, பேர் அறிவு - (பலவற்றையும் அறிகின்ற சிறந்த ஞானமாம், பேர் அறிவு தோன்றிடின்-(அப்படிப்பட்ட) சிறந்த ஞானமுண்டானல், அதற்கு-அந்த ஞானத்துக்கு, அழகு-அழகு, தூயதவம்-பரிசுத்தமான தவமும், மேன்மை-பெருங்குணமும், உபகாரம் - (பிறர்க்கு, உபகரித்தலும், விரதம்-விரதங்களை அநுஷ்டித்தலும், பொறுமை-(பிறர்செய்த குற்றத்தை) பொறுத்துக் கொள்ளுதலும், சொல்அரிய பெரியோர்களை நாழ்தல்-சொல்லுதற்கரிதாகிய(சிறப்பினையுடைய) பெரியோர்களை வணங்குதலும், பணிவிடைபுரிதல்- (அவர்களுக்கு) தொண்டுசெய்தலும், சீலம்-நல்லொழுக்கமும், நேசம்-நட்புக்குணமும், கருணை - அருளும் (என்று,) சாற்றும்-சொல்லப்பட்ட, இவைஆம் - இவைகளாகும், என்பர் - என்று சொல்லுவர்.

(அறிவுடையோர்) சௌரி-திருமாலும், மலரோன்-பிரமனும், அமரர் - (இந்திரன்முதலிய) தேவர்களும், முனிவர்-இருடிகளும், முச்சுடர்-முச்சுடர்களும் ஆகிய, எல்லாம்-யாவரும், சரணம் - அடைக்கலம், எம்மைரக்ஷி-எங்களைக் காப்பாற்றுவாயாக, எனவே - என்று வேண்டுதலும், ஆழ் கடல் உதித்துவரு-ஆழ்ந்தபாற் கடலிற் றோன்றி வெளிப்பட்ட, விடம்உண்ட நஞ்சையுண்ட, கண்டனே-ஸ்ரீகண்டனே, அண்ணல்-பெருமை பொருந்திய, எமதருமை மதவேள் - எ - று.

உபகாரம், வரதம், சீலம், கருணை, சௌரி, அமரர், சரணம், விஷம், கண்டம் என்பன வடசொற்கள். பெரியோர் என்றது அறிவு ஒழுக்கம் வயது என்பவற்றால்முதிர்ந்தவர்களை, நேசம்-நேயமென்பதன்போலி. சௌரி-சூரன் என்னும் அரசனது குலத்திற் பிறந்தவன். சூரன்-ஸ்ரீக்ருஷ்ணனது தந்தையாகிய வசுதேவனது தந்தை மலரோன் திருமாலின்உந்தித்தாமரைமலரிற்பிறந்தவன். அமரர்-மரணமில்லாதவர். இதுமங்கலவழக்கு. ஆழ்கடல் வினைத்தொகை. விடமுண்ட வரலாறு-திருமாலின் கட்டளைப்படி தேவர்கள் அசுரர்களைத்துணைக்கொண்டு திருப்பாற் கடல் கடையும்போது அதிலிருந்துண்டானதாகிய அதிபயங்கரமான ஆலகாலம் என்னும் பெரிய நஞ்சைக் கண்டவுடனே அதன் வேகத்தைக் பொறுக்க மாட்டாதவர்களாய் அஞ்சியோடிச் சரணமடைந்த தேவர்களுடைய வேண்டுகோளுக்குத் திருவுளமிரங்கிச் சிவபெருமான் அந்த நஞ்சை அமுது செய்து தன் கண்டத்தில் நிறுத்தி, தேவர் முதலிய யாவரையும் காத்தருளினான் என்பதாம்.

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங்
    கொழுநனில் லாத மடவார்
  குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
    குஞ்சர மிலாத சேனை
காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
    கதிர்மதி யிலாத வானங்
  கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
    காவல ரிலாத தேசம்
ஈவதில் லாததன நியமமில் லாதசெப
    மிசைவலவ ரில்லாத வூ
  ணிச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மி
    னேதுபல னுண்டு கண்டாய்
ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதரு
    வாகுமெம தருமை மதலோ
  ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுர தேவனே. (௪0)

(இ-ள்.) கோவில் இல்லாதவூர்-கோயிலில்லாத ஊரும், நாசி இல்லாமுகம்-மூக்கில்லாத முகமும், கொழுநன் இல்லாத மடவார்-கணவனில்லாத பெண்ணும், குணமது இல்லாவித்தை - குணமில்லாத கல்வியும், மணமது இல்லாதமலர் - வாசனையில்லாத பூவும், குஞ்சரம் இல்லாதசேனை-யானையில்லாத சேனையும், காவல் இல்லாதபயிர் - காவலில்லாத பயிரும், பாலர் இல்லாதமனை-சிறுவரில்லாதவீடும், கதிர்மதி இல்லாதவானம்- சூரிய சந்திரர்களில்லாத ஆகாயமும், கவிஞர் இல்லாதசபை - கவிவாணரில்லாத சபையும், சுதிலயை இல்லாதபண் - சுதிலயைகளில்லாத பண்

னும், காவலர் இல்லாத தேசம் - அரசரில்லாததேசமும், ஈவது இல்லாத தனம்-ஈகையில்லாததனமும், நியமம் இல்லாதசெபம் - நியமமில்லாத ஜபமும், இசைலவணம் இல்லாத ஊண்-சொல்லப்பட்ட உப்பில்லாத உணவும், இச்சை இல்லாத பெண்போகநலம்-விருப்பமில்லாத பெண்ணினது அநுபவ சுகமும் (ஆகிய), இவைதம்மின்-இவைகளால், ஏதுபலன் உண்டு-யாதுபயனுளது, ஆவிஅனையாட்கு - உயிரை நிகர்த்தவர்களுக்கு, இடம்தந்தவா-இடங்கொடுத்தவனே, கற்பதருஆகும் - கற்பகத்தருவை நிகர்த்தவனாகிய, எமதருமைமதவேள் - எ - று.

கோவில் கோயில் என மருவி வழங்குதலுமுண்டு. கோவில்-தேவாலயம், கோ-தெய்வம், இல்-வீடு. மடவாள்-இளம்பெண்-மடமை-இளமை-கல்விக்கு நற்குணம் பொருத்தமாதலால் குணமதில்லா வித்தையென்பதில் குணம் நற்குணமெனப் பொருள்படும் மலர்-மலர்தலையுடையது. இது முதனிலைத்தொழிலாகுபெயர். சேனை-படை. யானை குதிரை தேர் காலாள் என்னும் நால்வகைப்படையினுள்ளும் யானைப்படை சிறந்ததாதலாலும் அதில்லாத படை சிறவாதாதலாலும் குஞ்சரமிலாதசேனை, என்றார். காவல்-காத்தல். (பட்டிமாடு முதலியவற்றால் அழிவுபடாமற்காப்பாற்றும்) பயிர் - தானியாதிகளின் விளைச்சல் பாலர்-இளஞ்சிறுவர். கதிர்-கிரணம், இது சினையாகுபெயராய்க் கிரணங்களையுடைய சூரியனை யுணர்த்திற்று கதிர்மதி-கதிரும்மதியும் என உம்மைத் தொகையாக்கினுமமையும். கவிஞர் - வித்துவான்கள். பண்-இங்கு இராகத்துக்காயிற்று. காவலர்-காத்தற்றொழில்வல்லார் (அரசர்), தேசம்-நாடு. தனம்-பொருள். நியமம்-ஏற்பாடு. செபம்-ஜபித்தல். (உருப்போடுதல்.) இசைத்தல் அறுசுவையிற் சிறந்ததென்று

புகழ்ந்து சொல்லுதல். போகநலம் - புணர்ச்சி யின்பம். இவைதம்மின் என்பதில் தம்சாரியை. இன் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப் பொருளில் வந்தது, ஏ - என்னும் வினு எதிர் மறையாய் இல்லை யெனப் பொருள் பட்டது. கண்டாய்-முன்னிலையசை யிடைச்சொல். ஆவியனையாள் என்றது உமாதேவியாரை. உயிரில்லாத வுடம்பு இயங்காதவாறுபோலச் சிவசத்தியாகிய உமாதேவி யில்லாதவிடத்துச் சிவபெருமானும் இயங்கார் என்பது தோன்ற, 'ஆவியனையாட்கிடந்தந்தவா, என்றார். "சிவமெனும் பொருளு மாதிசத்தியொடு சேரினெத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடினியங்குதற் குமரிதரிதெனுமறை யிரைக்குமால்" என்றார் பிறரும். இடம் - இடப்பாகம். உடம்பும் உயிரும் முறையே இடமும் இடத்து நிகழ்பொருளு மாதல்போல, சிவபெருமானும் உமாதேவியாரும் முறையே இடமும் இடந்து நிகழ் பொருளு மாதலால் இம்முறையாலும் சத்திக்கு ஆதிக்கியந் தோன்றுத லறிக. கல்பகதரு என்னும் வடசொல் ஈறு சிதைந்து கற்பதரு எனவந்தது.

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
　　பொருளை யருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
　　பொல்லாத மிடி வைத்தனை
நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
　　நெறி மாதரைத் தந்தனை

நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர் வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்து பரவச் செய்தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாட வேவ செய்தனை
ஆதர விலாமலிப் படிசெய்த தென்சொலா
யமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௧)

(இ-ள்.) பூதநயை இல்லாத லோபியர் இடத்திலே-பூத நயையில்லாத லோபிக ளிடத்தில், பொருளை அருளிச் செய்தனை-பொருளை யருள்செய்தாய், புண்ணியம் செய்கின்ற சற்சநர் இடத்திலே - புண்ணியத்தைச் செய்கிறநன் மக்களிடத்தில், பொல்லாத மிடி வைத்தனை - பொல்லாத வறுமையை வைத்தாய், நீதி அகல் மூடர்க்கு - நீதியற்ற மூட ஜநங்களுக்கு, அருந்ததி எனத்தக்க - அருந்ததியென்று சொல்லத்தகுந்த, நெறி - நெறியையுடைய, மாதரை தந்தனை-பெண்களைக் கொடுத்தாய், நிதாநம் உள்ள உத்தமர்க்கு-நிதாநத்தை யுடைய உத்தம ஜநங்களுக்கு, இங்கிதம் இல்லாத கொடுநீலியை சேர்வித்தனை - நன்மையில்லாத கொடுநீலிகளைச் சேர்த்தாய், சாதியில் உயர்ந்தபேர்-சாதியிற் சிறந்த பேர்கள், ஈனர் பின்னே சென்று-ஈனசாதியார் பின்னே போய், தாழ்ந்து பரவச்செய்தனை-பணிந்து

தோத்திரஞ் செய்யச் செய்தாய், தமிழ் அருமைஅறியாத தமிழினது அருமையைத் தெரிந்து கொள்ளாத, புல்லர் மேல்-அற்பர்மீது, கவிவாணர் பாட செய்தனை - கவிவாணர் பாடும்படி செய்தாய், ஆதரவுஇல்லாமல்-கிருபையில்லாமல், இப்படி செய்தது - இவ்வாறு செய்தது, என் - என்னே, சொலாய் - சொல்லுவாயாக, அமல-அமலனே, எமதருமை மதவேள்-எ-று.

பூததயை - உயிர்கள்மேலருள். லோபியர்-உலுத்தர். மிடி-தரித்திரம். அருந்ததி -வ'-மீன், வசிட்ட முனிவர் மனைவி. இவள் கற்பிற் சிறந்தவளாதலால் இவளை உலகத்துப் பெண்களெல்லாரும் தமது பதிவ்ரத்யம் கெடாதிருக்கும்படி கிருபை செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்து வணங்குவது பிரத்தியக்ஷம். நெறி - கற்புநெறி. நிதானம்-சாந்தகுணம். கொடுநீலி - கொடிய பாசாங்குக்காரி. ஈனம் இழிவு. தமிழருமை-தமிழ்ப் பாடல்களின் அருமை. ஆதரவு - இரக்கம் எனினும் பொருந்தும்.

குணக்கேடரியல்பு.

மாறுத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொரு பதர்
வாள்பிடித் தெதிரிவரி லோடிப் பதுங்கிடு
மனக்கோழை தானொரு பதர்
ஏறு வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பானொரு பத

மில்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கி வாழ்பவ னொருபதர்
வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வானொரு பதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாளை
விட்டுவிடு வானொரு பதர்
ஆறுத துயரையு மிடியையுந் தீர்த்தருள்செ
யமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௨)

(இ-ள்) மாறாத கலைகற்றும் - மாறுபடாமைக் கேதுவாகிய நூல்களைக் கற்றும், நிலை பெற்றசபையிலே-நிலைபெற்ற சபையின் கண், வாய் இல்லாதவன்-வாய்பேசாதவன் ஒரு பதர்-ஒரு பதராவன், எதிரி - பகைவன், வாள் பிடித்து வரின் - வாளேந்தி வந்தால், (அதைக் கண்டு) ஓடி பதுங்கிவிடும் - ஒடிப்பதுங்குகின்ற, மனக்கோழை -மனக்கோழை, ஒரு பதர் - ஒருபதராவன், ஏறு வழக்கு உரைத்து- ஏறு வழக்குப்பேசி, அனைவரும் - எல்லாரும், சீசி என்று இகழ நிற்பான் - சீசியென் றிகழும்படி நிற்பவன், ஒருபதர் - ஒரு பதராவன், இல்லாள் - மனையாள், புறம் செல்ல சம்மதித்து - வெளியே போகச் சம்மதித்து, அவளோடு- அவளுடனே, இணங்கி வாழ்பவன் - கூடி வாழ்பவன்,ஒரு பதர் - ஒரு பதராவன், வேறுஒருவர் மெச்சாது - வேறொ

ருவர் மெச்சாமல், தன்னையேதான் மெச்சி - தன்னைத்தா னே மெச்சிக் கொண்டு, வீண் பேசுவான் - பயனற்ற சொற்களைச் சொல்லுவோன், ஒரு பதர் - ஒரு பதராவன், வேசையர்கள் ஆசைகொண்டு - வேசையர் மீது இச்சைகொண்டு, உள்ளளவும் - தானுள்ளவும், மனையாளை-மனைவியை விட்டு விடுவான் - விட்டு விடுவோன், ஒருபதர் - ஒரு பதராவன், ஆறாத துயரையும் - தணியாத துன்பத்தையும், மிடியையும் - வறுமையையும், தீர்த்து அருள்செய் - நீக்கியருள் செய்கிற, அமல - பரிசுத்தனே, எம தருமை மதவேள். எ-று.

மாறாத கலை - குணம் வேறுபடாமைக் கேதுவாகிய நூல்கள். அவை தர்க்கம் வியாகரணம் முதலாயின. கற்றும் என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. நிலை பெற்ற சபை- அறிவுடையோரால் நிறைந்த சபை, வாய் என்றது வாயினுண்டாகும் சொல்லை. பதர்-பதர்க்கு நிகராய்ப் பயனற்றவனுனவன். பதர்-நெல் முதலான வற்றில் உள்ளீடில்லாதிருப்பதாகிய உமிக்கூடு. பதுங்குதல் - மறைதல் கோழை - அச்சம், மனக்கோழை - மனத்தில் அச்சமுள்ளவன். (மீரோ தைரிய மில்லாதவன்). ஏறா வழக்கு-நியாய சபைக்கு ஏற்காத வழக்கு. வழக்கு - விவகாரம். புறஞ்செல்ல என்றது இங்கு வியபிசரிக்க என்றபடி, வேறொருவர் - அயலார். ஆண் - பயனில்சொல். ஆசை - மோகம்.

செயத்தக்கவை.

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வளைகட றிரிந்துபொரு டேடவேண் டுந்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டுங்கொண்டு
த்யாகங் கொடுக்க வேண்டும்
ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னாலுமிகு பத்தி வேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
யனகவேம தருமை மதவே
ளனுதினமு மனதிலினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௩)

(இ-ள்.) வாலிபந்தனில் - பாலியத்தில், வித்தை கற்க வேண்டும் - கல்வி கற்கவேண்டும், கற்ற வழியிலே நிற்கவேண்டும், கற்றவன் பயனாகிய நல் வழியிலே நிலைத்திருக்க வேண்டும், வளைகடல் திரிந்து - (உலகை) வளைத்திருக்கிற கடலின்மீதுலாவி, பொருள் தேடவேண்டும் - திரவியத்தைச் சம்பாதிக்க வேண்டும், தேடி-சம்பாதித்து, வளர்

அறம் செய்யவேண்டும்-விருத்தியடைதற்கேதுவாகிய தருமத்தைச் செய்யவேண்டும், சீலம் உடையோர்களை சேர வேண்டும் - நல்லொழுக்க முள்ளவர்களைக் கூடவேண்டும், (கூடின பிறகு) பிரிதல் செய்யாது இருக்க வேண்டும்-(அவர்களைவிட்டு) பிரியாதிருக்க வேண்டும் செந்தமிழ்ப் பாடலி பல கொள்ள வேண்டும்-செந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றையும் ஏற்கவேண்டும், கொண்டு - ஏற்று, த்யாகம் கொடுக்கவேண்டும்-(பாடினபுலவருக்கு) தியாகம்செய்யவேண்டும் ஞாலம்மிசை-உலகின்மேல், பல தருமம் நாட்டவேண்டும்-பல வகையாகிய தருமங்களை நிலைநிறுத்த வேண்டும், நாட்டி - நிலைநிறுத்தி, நன்ருய் நடத்த வேண்டும்-(அவற்றை) செவ்வையாக நடத்தி வரவேண்டும், நம்பன் - சிவபெருமானது, இணை அடி-இரண்டு சீர்பாதங்களையும், பூசை பண்ண வேண்டும் - பூசை செய்ய வேண்டும், பண்ணினும் - செய்தாலும், மிகுபத்திவேண்டும் - மிகுந்தபத்தி வேண்டும், ஆலம் அமர்கண்டனே-நஞ்சமர்ந்த கண்டத்தை யுடையவனே, பூதி அணிமுண்டனே - திருநீறணிந்த நெற்றியை யுடையவனே, அநக-பரிசுத்தனே, எம தருமை மதவேள். எ-று.

பால்யம் என்னும் வடசொல் வாலிபம் எனத்திரிந்து வந்தது. வித்யா என்னும் வட சொல்லின் இறுதி ஆகாரம் ஐயாகி வித்தையென் ருயிற்று. கற்றவழி என்றதனுல்வழி நல்வழியைக் குறித்தது. வளை யென்னுந் தொழிற் கேற்ற உலகு என்னுஞ் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது.

கடல் திரிந்து என்றது கப்பலேறிக் கடலிலுள்ள தீபாந்தரங்களுக்குப்போய் என்றபடி. வளரறம்-செய்பவன்வளர்தற் கேதுவாகிய அறம். இல்லறத்தின் சிறப்பு, "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங் - காக்க மெவனோ வுயிர்க்கு" என்னுந் திருக்குறளால் இனிது விளங்கும். சேரவேண்டும் பிரிதல் செய்யாதிருக்கவேண்டும். எனவிருத்தலால் சிலமுடையோர் என்றது நல்லொழுக்க முடையோரை. செந்தமிழ்ப்பாடல் - செந்தமிழாற் பாடப்பட்ட நூல், பல என்றது அந்தாதி கலம்பகம் மாலை உலா தூது முதலிய வற்றை.

மேன்மே லுயர்ச்சி.

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முள புருடனுஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தரு தேவனும்
பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்ய வானே பிரமனும்
நன்மைதரு பதினா யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன் செங்கண்மா
லாருமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகா தேவனும்

அன்மட்டு வார்குழலி பாகனே யேகனே
யண்ணலெம தருமை மதவே
ளானுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௪)

(இ-ள்.) தன்மட்டில் - தன்னளவில், இரவாது - யாசிக்காமல், சீவநம் செய்பவன் - சீவநம் செய்பவனே, சாமர்த்தியம் உள்ள - சமர்த்துள்ள, புருடன் ஆம் - மனிதனுவான், சந்ததம் - எப்பொழுதும், பதின்மரைக் காப்பாற்றுவோன் - பத்துப்பேரைக் காப்பாற்றுகிறவன், மிக்கதரணி புகழ்தரு - மேன்மையாகிய இவ்வுலகத்தார் புகழ்தற்குரிய, தேவன் ஆம் - தேவனுவான், பொன் - பொன்னை, மட்டு இல்லாமல் ஈந்து - அளவில்லாமற் கொடுத்து, ஒரு நூறு பேரை புரப்பவன் - ஒருநூறுபேரைக் காப்பாற்றுகிறவன், பொருவுஇல் - ஒப்பற்ற, இந்த்ரன் - இந்திர னுவான், புவிமீதில் - உலகினிடத்தில், ஆயிரம் பேர்களை காப்பாற்ற - ஆயிரம்பேரைக்காப்பாற்றுகிற, புண்யவானே - புண்ணியவானே, பிரமன் ஆம் - பிரம னுவான், நன்மைதரு - நன்மையைச் செய்கிற, பதினுயிரம்பேர் தமை - பதினுயிரம் பேர்களை, காத்து ரக்ஷிப்பவன் - காத்து ரக்ஷிக்கிறவன், செங்கண்மால் - திருமாலாவன், நாளும் - நாள் தோறும், இவன்மேல் - இவனுக்குமேல், அதிகம் ஆக - மிகுதியாக, வெகுபேர்க்கு உதவும் - அநேகம் பேருக்கு உதவிசெய்கிற, நரனே - நரனே, மகாதேவன் ஆம் - மகாதேவனுவன், அல் - இருட்டுப்போன்ற, மட்டுவார் குழலி பாகனே - தே

ளெழுகாநின்ற கூந்தலை யுடையவளாகிய உமாதேவி பங்க னே, ஏகனே - ஒப்பற்றவனே, அண்ணல்-பெருமைபொரு ந்திய, எமதருமை மதவேள். எ-று.

சீவநஞ் செய்பவன்-உயிர் வாழ்பவன், இரவாது சீவ நஞ்செய்பவன் என்றதனால் இரத்தற் றொழிலொழிய வே றெந்தத் தொழிலாயினுஞ் செய்து சீவிப்பவன் என்றாயி ற்று. இரத்தல் இழிதொழில்என்பதனை, "ஏற்பதிகழ்ச்சி" "கரவாது வந்தியுங் கண்ணன்னார் கண்ணும், இரவாமை கோடியுறும்" "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற், கிரவி னிளி வந்ததில்" என்றமேலோர் திருவாக்குகளால் அறிய லாம். புகழ்தரு என்பதற்குப் பகுதி புகழ்தா. புரத்தல்- காப்பாற்றுதல். பதினாயிரம் பேர்தமை என்பதில் தம்சாரி யை. மகா தேவன் - சிவபெருமான். அல்குழலி, மட்டுவா ர்குழலி என்றியைத் துரைத்துக் கொள்க. புருடன், தே வன், இந்திரன், பிரமன், செங்கண்மால், மகாதேவன் என் னுஞ் சொற்கள் மேன்மே லுயர்ச்சியைத் தருதல் காண்க.

செயற்கருஞ்செயல்.

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பை நீர்போற் செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவி னைப்பூண லாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பசுஷ முடனே யுண்ணலாம்

பாணமொடு குண்டுவில கச்செய்ய லாமரப்
பாவை பேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்தி சற்று
மில்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாது காண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௫)

(இ-ள்) நீர்மேல் நடக்கல் ஆம் - நீரின்மேல் நடத்தலும் கூடும், எட்டியும் தின்னல்ஆம்-(மிகவுங் கசக்கு மியல்புள்ள) எட்டிப் பழத்தையும் தின்னுதல்கூடும்; நெருப்பை - (சுடுமியல்புள்ள) நெருப்பையும், நீர்போல் செய்யல் ஆம் - நீர்போல (குளிர்ந்த தாகவும்) செய்தல் கூடும், நெடிய பெருவேங்கையை - நீண்ட பெரிய கொடும்புலியை, கட்டியே தழுவல்ஆம் - (கைகளால்) கட்டி யணைத்தலுங் கூடும், நீள் அரவினை-நீண்ட பாம்பை, பூணல் ஆம் - (அதன்வேகத்தை யடக்கி) ஆபரணமாகத் தரித்துக் கொள்ளுதலுங் கூடும், பார்மீது மணலை - பூமியின்மேலுள்ளமணலை,சோறு என-சோறென்றுசொல்லும்படி, சமைக்கல் ஆம் - சமைத்தலுங் கூடும், (அப்படி சமைத்த சோற்றை) பக்ஷமுடனே உண்ணல்ஆம் - அன்புடனே புசித்தலுங்கூடும், பாணமொடு குண்டு-பாணத்தோடு குண்டையும், விலகச் செய்

யல் ஆம்-விலகிப் போகும்படி செய்தலுங் கூடும், மரப்பாவை - மரத்தாற் செய்யப்பட்ட பதுமையை, பேசப்பண்ணல் ஆம் - பேசப் பண்ணுதலுங் கூடும், ஏர்மேவு காடியை - அழகு பொருந்திய காடிநீரை, கடையுற்று-(தயிர் கடைதல்போல மத்தினால்) கடைந்து (அதிலிருந்து), வெண்ணெயும் எடுக்கல்ஆம்-வெண்ணெயும் எடுத்தலுங்கூடும் சற்றும் சிறிதும், புத்தி இல்லாத மூடர்-அறிவில்லாதமூடருடைய, மனத்தை திருப்ப மனத்தைத் திருப்புதற்கு, எவருக்கும் முடியாது-யாவராலும் முடியாது, மேவு-விரும்பப்படுகிற, ஆர் - ஆத்திப் பூமாலையையும், கொன்றை - கொன்றைப்பூ மாலையையும், புனை-தரித்த, வேணிய-சடாபாரத்தை யுடையவனே, சுரர் பரவும்-தேவர்கள் துதித்தற்குரிய, அமலனே-குற்றமற்றவனே, அருமைமதவேள். எ-று.

* காண்-தேற்றவிடைச்சொல்.

* செய்தற்கரிய செயல்களெல்லாவற்றையும் செய்து முடிக்கலாம், மூடர் மனத்தைவசப்படுத்தலாகாதென்பது இச்செய்யுட் கருத்து:—

" கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
 கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
 கட்செவி யெடுத் தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்து லோகத்தையும்
 வேதித்து விற் றுண்ணலாம்

வேறொருவர் காணாமை யுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமையொ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும் புகுதலாம்
சலமே னடக்கலாம் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மநா நந்தமே."

என்ற தாயுமானவர் பாடலில் சாதாரணமாய் மனத்தை யடக்குதல் கூடாதென்றிருக்க, மூடர் மனத்தை யடக்குதல் கூடாதென்பது சொல்லாமே யமையும்.

சலமே னடத்தலையும், கனன்மேலிருத்தலையும் முறையே ஜலஸ்தம்பநம் என்றும் அக்நிஸ்தம்பநம் என்றும்கூறுவர் வடநூலார். எட்டி எட்டிமரம், இது இதன்சினையாகிய பழத்தை யுணர்த்தலால் முதலாகுபெயர். ஆர் கொன்றை என்னு மரப் பெயர்கள் அவற்றின் சினைகளாகிய மலர்களை யுணர்த்தலால் முதலாகு பெயர்கள். இம்மலர்கள் இவற்றால் தொடுக்கப்பட்ட மாலையைக் குறித்தலால் கருவி யாகுபெயர். சிவபெருமான் நாகங்களை அடக்கி ஆபரணமாகத் தரித்ததும், திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகியம்மை ஒருகால் மணலைத் தன்கற்பின் மகிமையால்

அன்னமாகச் சமைத்துப் படைக்க அதனை அவர் உண்ட தும் அறிந்து கொள்க. பக்ஷம், பாணம், வட சொற்கள். காடி, சாதத்தோடு புளித்தநீர், வெண்ணெய், உருக்காத நெய், மேவு என்ற விசேடணம் முன்னின்ற ஆர் என்பத னோடும், பின்னின்ற கொன்றை என்பதனோடும் கூட்டப் பட்டது, ஆத்தியும கொன்றையும் சிவபெருமானுக்கு மிக வும் பிரியமாதலால், "ஆத்தி சூடி,, "கொன்றை வேந்தன் செல்வன்" என்னும் ஔவையார் திருவாக்காலும் இனிது விளங்கும். வேணீ என்னும் வடசொல் வேணியென ஈயீறு இகர மாயிற்று. பாற்கடல் கடையப்பட்டகாலத்தில் அதி லுண்டான மதுவுக்குச் சுரா என்று பெயர், அதனை யுண் டதனால் தேவர்களுக்கு சுரர் என்னும் பெயர்வந்தது. வில் லில் தொடுக்கப்படுவது, பாணம்-(அம்பு) என்றும், துப் பாக்கிலிருந்து வெளிப்படுவது குண்டு என்றும் சொல்லப் படும்.

உத்தமராவோர்.

செய்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
 தீமையை மறந்த பேருந்
திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
 சித்தம் வையாத பேரும்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப்பொருளாளர்
 கையிற் கொடுத்த பேருங்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
 காத்தருள்செய் கின்ற பேரும்

பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மெனனினுங் கனவிலும்
பொய்மை யுரையாத பேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சற்புருட ரென்றுலகி
லகமகிழ்வ ருருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கசு)

(இ-ள்) செய்நன்றி (ஒருவர் தமக்கு செய்த உபகாரத்தை, மறவாத பேர்களும், மறந்துவிடாமல் நினைக்கிறவர்களும், ஒருவர் செய் தீமையை-ஒருவர் செய்த தீங்கை, மறந்தபேரும்-(நினையாமல்) மறந்துவிட்ட பேர்களும், திரவியம் தரவரினும்-பொருள் கொடுக்க வந்தாலும், ஒருவர் மனையாட்டிமேல்-ஒருவரது மனையாள் மேல், சித்தம் வையாத பேரும்-மனம் வையாதபேர்களும், கைகண்டு எடுத்த பொருள்-கைகண்டெடுத்தபொருளை, கொண்டுபோய் கொண்டு சென்று, பொருளாளர் கையில் கொடுத்தபேரும்-பொருளுடையோர் கையிற் கொடுத்த பேர்களும், காசினியில்-உலகத்தில், ஒருவர்செய்-ஒருவர் செய்த, தருமம்-தருமமானது, கெடாதபடி-அழியாதபடி, காத்தருள் செய்கின்றபேரும்-காத்தருள் செய்கிற பேர்களும், பொய் ஒன்று-பொய்யாகிய (நிலையற்ற), நிதிகோடி வரினும்-கோடி திரவியம் வருவதா யிருந்தாலும், வழக்கழிவு புகலாத-அழிவழக்குப் பேசாத, நிலைகொள் பேரும்-நடுவுநிலையைக்

கொண்ட பேர்களும், புவிமீது-உலகத்தில், தலைபோகும் என்னினும்-தலைபோகு மாயினும், கனவிலும்-சொப்பனத் திலும், பொய்மை உரையாதபேரும்-பொய் சொல்லாதவர் களும் ஆகிய, ஐய இங்கு இவர் எல்லாம்-அழகையுடைய இவர்களெல்லாரும், சற்புருடர்என்று-உத்தமபுருஷர்களென்று, உலகர்-உலகத்தார் யாவரும், அகம்மகிழ்வர்-மனமகிழ்வார்கள், அருமை மதவேள். எ-று.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" எனத் தெய்வப் புலவர் வற்புறுத்திக் கூறுதலால், இவ்வாசிரியரும், உத்தமபுருஷர்களுக்குள்ளே சிறந்தவர்கள் செய்ந்நன்றி மறவாத பேர்களே யென்பதுதோன்ற, முதலில் அவர்களை யெடுத்துக் கூறினர். திரவியந்தர வரினும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. சித்தம் என்றது இச்சையை. பொருளாளர்-பொருளுக் குரியவர். செல்வம் நிலைபெற்றதாதலால் பொய்யொன்று நிதி எனப்பட்டது. வரினும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. வழக்கழிவு புகழாமையால், நிலை நடுவுநிலைக்காயிற்று. ஐ-அழகு.

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடி வருவோர் தமைக்காக்கு
மவனே மகா புருடனு
மஞ்சாம லெதுவரினு மெதுபோகி னுஞ்சித்த
மசைவிலன் மகா தீரனும்

தொடுத் தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற
தோன்றலே மக ராஜனுந்
தூறிக் கலேக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகா மேருவாம்
அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகா த்யாகியா
மவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு
மவனே மகா வுசிதனும்
அடர்க்கின்ற முத்தலேச் சூலனே லோலனே
யமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கஎ)

(இ-ள்.) அடைக்கலம் என - அடைக்கலமென்று, தேடி வருவோர்தமை-தேடிவருகிறவர்களே, காக்குமவனே-காப்பவனே, மகாபுருடன் ஆம்-மஹாபுருஷனுவன், அஞ்சாமல்-பயப்படாமல், எது வரினும்-எதுவந்தாலும், எது போகினும்-எது போனுலும், சித்தம் இசைவு இல்லான் - மனம் சலிக்காதவனே, மகா தீரன் ஆம்-மஹாதீரனுவன், ஒன்று தொடுத்து-ஒரு காரியத்தைப்பற்றி, சொன்னசொல்-சொன்னசொல்லே, தப்பாது செய்கின்ற-தவருமற்செய்துநிறைவேற்றுகிற, தோன்றலே - பெரியோனே, மகராஜன் ஆம்-மஹா ராஜனுவன், தூறி-நிந்தித்து, கலேக்கின்றபேர்-கலேக்கிற பேர்களுடைய, வார்த்தை-சொல்லே, கேளாத- (செவி

கொடுத்து) கேட்காத, துரையே-பிரபுவே, மகாமேருஆம்-மஹா மேரு ஆவன், அடுக்கின்ற பேர்க்கு வரும்- (தன்னை வந்து) அடுக்கிற பேர்களுக் குண்டாயிருக்கிற, இடர் தீர்ந்து-துன்பத்தை நீக்கி, இரட்சிக்கு மவனே-காப்பாற்றுகிறவனே, மகாத்யாகி ஆம்-மஹாத்யாகி யாவன், அவரவர் தராதரம் அறிந்து-அவரவர்களுடைய தராதரங்களை யறிந்து, மரியாதை செயுமவனே-(அவர்களுக்குத்தகுந்த) மரியாதை-செய்கிறவனே, மகா உசிதன் ஆம்-மஹாவுசிதனுவன், அடர்க்கின்ற (பகைவரை) கொல்லுகிற, முத்தலைச்சூலனே - முத்தலைச்சூலத்தை யுடையவனே, லோலனே-திருவிளையாடலை யுடையவனே, அமலனே-களங்கரஹிதனே, அருமைமதவேள். எ-று.

வருவோர் தமை என்பதில் தம்சாரியை. காக்குமவனே என்பதைக் காக்கும் அவனே என இரண்டுசொல்லாய்ப் பிரித்து காக்கின்ற அவனே எனப்பொருளுரைத்தலுமாம். இவ்வாறே இரட்சிக்கு மவனே, செயுமவனே, என்பவற்றையும் பிரித்துரைத்துக் கொள்ளலாம். அசைவு - சலனம், தீரன் - தைரியசாலி. சொல்-சொன்னபடி, தூறுதல்-நிந்தித்தல். கலக்கின்றபேர் வார்த்தைகேட்டு மனமசையாமைபால் அவனைமகாமேரு என்றார். த்யாகி-கொடையாளன் தராதரம் தகுதியும் தகுதியின்மையும். உசிதன்-சிரேஷ்டன், அடர்த்தல்-கொல்லுதல். முத்தலைச்சூலம்-மூவிலைவேல். லோலன் - பஞ்சகிர்த்தியங்களாகிய விளையாட்டையுடையவன்.

ஒன்றிலொன் றில்லாமை.

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணை யில்லை
நாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
சாதிகுல மென்ப தில்லை
தாக்ஷிண்ய முடையபேர்க் கிகலில்லை யெங்குமொரு
சார்பிலார்க் கிடம தில்லை
பூமிக்கு னீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்று மில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாதவோர்
புருடருக் கொன்று மில்லை
யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனை
யன்புடைய வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கஅ)

(இ-ள்.) காமிக்குமுறை இல்லை-காமியானவனுக்குமுறை யில்லை, வேசைக்கு நாண் இல்லை-வேசைக்குவெட்கமில்லை, கயவர்க்குமேன்மையில்லை-கீழ்மக்களுக்குப்பெருமையில்லை கன்னமிடு கள்வருக்கு இருள் இல்லை-கன்னமிடுகிற திருடருக்கு இருட்டில்லை, விபசார கன்னியர்க்கு ஆணை இல்லை-வியபிசாரஞ் செய்கிறபெண்களுக்குஆணையில்லை, தாம்என்

னும் மயக்கு அறுத்து நாமென்கிற மயக்கத்தை யொழித்து, ஓங்கு பெரியோர்க்கு-உயர்ந்தபெரியோர்களுக்கு,வரு-(உலகத்தில்) உண்டாகிய, சாதிகுலம் என்பது இல்லை-சாதிகுலம் என்பது இல்லை, தாக்ஷிண்யம் உடைய பேர்க்கு - தாக்ஷிண்யத்தையுடைய பேர்களுக்கு, இகல் இல்லை-பகையில்லை, எங்கும் - எவ்விடத்தும், ஒரு சார்பு இல்லார்க்கு-ஒரு ஆதரவில்லாதவர்களுக்கு,இடமது இல்லை-இடமில்லை, பூமிக்குள்-உலகத்தில், ஈயாத லோபர்க்கு-கொடாதலோபிகளுக்கு, வளம்ஆன புகழ் என்பது - மிகுந்த புகழென்று சொல்லப்படுவது, என்றும் இல்லை - எக்காலத்து மில்லை, புலையர்க்கு - நீசருக்கு, நிசம் இல்லை-உண்மையில்லை, கைப்பொருள் இல்லாத ஓர் புருடனுக்கு-கையிற்பொருளில்லாதவனாகிய ஒருபுருஷனுக்கு, ஒன்றும் இல்லை-ஒன்றுமேயில்லை, யாமினி தனக்கு நிகர் - இராத்திரிக்குச் சமானமாகிய, கந்தரத்து - கண்டத்தையுடைய, இறைவனே-தலைவனே, அன்பு உடைய -(எம்போல்வாரிடத்து) அன்புள்ள, அருமை மதவேள்-எ-று.

காமி - அதிக காமமுள்ளவன். முறை - தாய் தங்கை தமக்கை யென்னுமுறை. கயவர்-கீழ்மக்கள், விபசார கன்னியர்-சோரஸ்த்ரீகள். ஆணை-சத்தியம். தாமெனு மயக்கு-அகங்காரம். பெரியோர்-ஞானியர். தாக்ஷண்யம்-கண்ணோட்டம். இகல்-பகை, இது பண்பாகுபெயராய்ப் பகையையுடையவனுக் காயிற்று. இடம் - அண்டுமிடம். யாமினி-இரவு. யாமினினக்கு என்பதில் தன் அ இரண்டுஞ் சாரி

யைகள். கந்தரம்-கண்டம், கம்-தலை, தரம்-தாங்குவதுஆத லால் கண்டத்துக்குக் கந்தரம் எனப் பெயர்வந்தது, இது வடசொல். காமி முதலானவர்க்கு முறை முதலான ஒவ் வொரு குணமில்லை, பொருளில்லாதவனுக்கு எல்லாக்குண ங்களும் ஒருங்கே யில்லையென்பது இச்செய்யுளாற் கூறப் பட்டது.

யாக்கை நிலையாமை முதலியவை.

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டி லாற்றின் பெருக்காங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெலாங்
கானல் காட்டும் ப்ரவாகம்
மேயபுஜ பலவலுமை யிளமையழ கிவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர் தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திரு போதிலும்
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள் புரிகுவாய்
ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதா கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௧)

(இ-ள்.) காயம்-உடம்பு, ஒரு புற்புதம்-ஒரு நீர்க்குமிழி போல நிலையில்லாமல் அழிவதாகும், வாழ்வு-செல்வம், மலை சூழ் தரும் காட்டில்-மலைகளைச் சூழ்ந்த காட்டில் ஓடுகிற, ஆற்றின் பெருக்குஆம்-ஆற்று நீர்ப்பெருக்குப்போல நிலை மாறுவதாகும், கருணை தரு-அன்பு செய்யப்படுகிற, புதல்வர்-புத்திரர்களும், கிளை-உறவினரும், மனை-வீடும், மனையில் மனையாளும் (ஆகிய), இவை எல்லாம்-இவையாவும், கானல்காட்டும் ப்ரவாகம்-கானலினிடத்தே தோன்றுகிற வெள்ளத்தோற்றம்போல நிலையில்லாதனவாகும், மேய இருபுய வலிமை - பொருந்திய இரண்டு தோள்வலியும், இளமை-இளமைப்பருவமும், அழகு - அழகும் ஆகிய, இவை எல்லாம்-இவையாவும், வெயில் மஞ்சள் - வெயிலின்முன் நிலை பெறுமலழிகின்ற மஞ்சளின் நிறம்போன்றன வாகும், உயிர்தானுமே-(உடம்பில்வாழும்) உயிரினது நிலைமையும், வெட்ட வெளிதனில் வைத்த-பெருவெளியிடத்தில் வைக்கப் பட்ட, தீபம்-விளக்குப் போலவிரைவில் அழியுந்தன்மையபதாகும், எனவே கருதி-என்றெண்ணியே, வீண் பொழுது போக்காமல் - வீணாய்க் காலங்கழிக்காமல், நேசமுடனே-அன்போடு, தெளிந்து-மனந்தெளிந்து, அன்பொடு-பக்தியுடனே, உன்பாதத்து-உன் திருவடியில், நினைவு வைத்து-கருத்து வைத்து, இருபோதிலும் - காலைமாலை யென்னும்) இரண்டு சந்தியா காலங்களிலும், நீர்கொண்டு - தீர்த்தத்தைக்கொண்டும், மலர்கொண்டு - மலர்களைக் கொண்டும், பரிவு கொண்டு - அன்பைக் கொண்டும், அர்ச்சிக்க -(உன்

லை) பூசிக்கும்படி, நிமலனே-குற்றமற்றவனே, அருள்புரிகுவாய்-நீகருணைசெய்வாயாக, ஆயும்-ஆராய்கிற, அறிவாளர்-அறிஞர், பணி - வணங்குதற்குரிய, பாதனே-திருவடியையுடையவனே, போதனே - ஞானசொரூபனே, அண்ணல்-பெருமை பொருந்திய, எமதருமைமகவேள். எ-று.

• "நீரிற்குமிழி யிளமைநிறைசெல்வம், நீரிற்சுருட்டுநெடுந்திரைகள், நீரில், எழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே, வழுத்தாத தெம்பிரான் மன்று" என நீதிநெறிவிளக்கத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க. தோன்றி விரைவில் அழிவதற்கு நீர்க்குமிழியும், விரைவிற்சென்றொழிவதற்கு ஆற்றுநீர்ப் பெருக்கும், பிரமைபால் உண்மையாய் உதவுவதுபோலத் தோன்றும் தோற்றத்துக்குக் கானல்வெள்ளமும், இருந்தது தெரியாமல் விரைவாய் அழிதற்கு வெயில்பட்ட மஞ்சளின் நிறமும் எளிதில் அபாயமடைதற்கு வெட்ட வெளியில் வைத்த விளக்கும் உவமையாயின. காயம், புத்புதம், ப்ரவாஹம், புஜம், தீபம், பாதம், போதம் என்பன வடசொற்கள். ஆறு-யாறு என்பதன்மரூஉ, பெருகுவது-பெருக்கு. "தனிமரம தோப்பாகாது தனிப்பிள்ளை பிள்ளையாகாது" எனப் பழமொழி யுண்டா யிருக்கையால் புதல்வர் எனப் பன்மையாற் கூறினர் கிளை-மரத்தைக்கிளை தழுவுதல்போல ஒருவரைத் தழுவிநிற்பது, இது உறவினத்துக்கு உவமையாகுபெயர். மனைவி-வீட்டிலிருந்துகொண்டு குடும்ப காரியங்களைச் செய்பவள். கொண்டு மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபு போதம்-அறிவு, முற்ற

றிவனாதலால் இறைவனைப்போதன் என்றார். முற்றறிவன்-ஸர்வஜ்ஞன் என்னும் வடசொல்லின் மொழி பெயர்ப்பு. போது என்பதுமலர் எனப் பொருள் படுதலால், போதன் என்பதற்கு அன்பரது இதய கமலத்தில் வாழ்பவன் என்றுரைத்தலும் பொருந்தும். காட்டிலாறு-கானாறு, அர்ச்சிக்க என்றது இவ்விடத்துப் பூசிக்க என்னும் பொருளில் வந்தது. ஆயும் என்பதற்கு தத்துவ சோதனை செய்கின்ற என்றும், இறைவனது கல்யாண குணங்களை ஆராய்ந்து மகிழ்கின்ற என்றும் "நானாரென் னுள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்" என்றபடியே தம்மையுந் தமக்காதாரத் தலைவரையும் மற்றும் ஆராய்கின்ற என்றும் உரைத்துக்கொள்க. விட்டு நூல்களையாராய்கின்ற எனினுமமையும்.

திருமங்கை யிருப்பிடம்.

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மா மனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந் துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயி றனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக் கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர் பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின் சிரசிலே

அற்பெருங் கோதைமலர் மங்கைவாழ்குவ ளென்ப
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உ௰)

(இ-ள்.) நல்பரிமுகத்திலே-உத்தம அசுவத்தின் முகத்திலும், மன்னவர் இடத்திலே - அரசரிடத்திலும், நாகரிகர் மாமனையிலே-நாகரிகருடைய அழகிய வீட்டிலும், நனிநமலர் தன்னிலே-தாமரை மலரிலும், கூவிளந்தருவிலே-வில்வமரத்திலும், நறைகொண்ட பைதுளவிலே-வாசனையைக் கொண்ட பசிய துளசியிலும், கற்புடையர் வடிவிலே-கற்புடைய மாதரது உருவத்திலும், கடலிலே - கடலிலும், கொடியிலே - துவசத்திலும், கல்யாண வாயில் தனிலே-கலியாணவாசலிலும், கடிநகரிடத்திலே-காவலைக்கொண்ட நகரத்திலும், நல்செங்நெல் விளைவிலே-அழகிய செந்நெற் பயிரிலும், கதிர்பெறு - விளக்கதனிலே-ஒளியுள்ள தீபத்திலும், பொற்பு உடைய சங்கிலே-அழகுள்ள சங்கிலும்,மிக்கோர்கள் வாக்கிலே-மேலோர் வாக்கிலும், பொய்யாதபேர் பாலிலே-பொய் சொல்லாத பேர்களிடத்திலும், பூதடம்தன்னிலே-தாமரைமலர்த் தடாகத்திலும், பாற்குடத்திடையிலே-பாற்குடத்திடையிலும், போதகத்தின்சிரசிலே - யானைத்தலையிலும், அல் - இருட்டைப்போன்ற, பெரு-நீண்ட, கோதை-கூந்தலையுடைய, மலர் மங்கை-திருமகள், வாழ்குவள் என்பர்-வாழ்ந்திருப்பாளென்பர்(மேலோர்)அண்ணல்-பெருமையுள்ள, எமதருமை மதவேள். எ-று.

நற்பரி-ஹய லீலாவதி, அஸ்வசாஸ்த்ருதய முதலிய வட நூல்களிலும், திருவிளையாடல் முதலிய தமிழ் நூல்களிலும் கூறப்படுகிற நல்லிலக்கண மமைந்த உத்தமமாகவும் நல்பரி-அழகாகிய குதிரை யெனினுமாம். மன்னவர்-செங்கோலரசர். நாகரிகர்-ஆசாரமுள்ளவர். நளிநம்-தாமரை. கூவிளம்-வில்வம். தரு - மரம். நறை-மணம். கற்புடையர்-கற்புள்ள மாதர். கடி - காவல், விளக்கம் எனினுமமையும். பொற்புடைய சங்கு என்றது வலம்புரி யென்னும் உத்தம சங்கத்தை. மிக்கோர்கள் கல்வியறி வொழுக்கங்களால் மேம்பட்டோர், பொய்யாத பேர்-சத்தியவான்கள். (அரிச்சந்திரன் முதலியோர்). பாலிலேயென்பதில்பால் ஏழனுருபு. தடம்-தடாகம். போதகம் - யானை, மலர்மங்கை-தாமரைப்பூவில் வாழ்பவளாகிய ஸ்ரீதேவி.

மூதேவி யிருப்பிடம்.

மிதமின்றி யன்னம்புசிப்போ ரிடத்திலு
மிகுபாஷை யோ ரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்க பாதக ரிடத்துங்
கதிரொனெழு முன்னுறங்கி மலர்போல மலினங் கொளும்பழைய
கந்தை யணிவோ ரிடத்துங்
கடினா யெனச்சிறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனை யகத்தும்
நதிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்த வாட்டின் றிரளிலுஞ்

சாம்பிண முகத்திலு மெலேயிலாக் கவலேபுரி
தௌவைவாழ் குவ ரென்பர்காண்
அதிரூப மலேமங்கை நேசனே மோழைதரு
மழகனெம தருமை மதவே
எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உக)

(இ-ள்.) மிதம் இன்றி - அளவில்லாமல், அன்னம் புசிப்போர் இடத்திலும், சோற்றை யுண்போரிடத்திலும், மிகு பாஷையோர் இடத்தும்-அதிகமாய்ப் பேசுவோரிடத்திலும், மெய் ஒன்று இல்லாமலே - சிறிதும் உண்மையில்லாமலே, பொய்பேசியே திரியும்-பொய்பேசிக் கொண்டே திரிகின்ற, மிக்கபாதகர் இடத்தும்-பெரியபாவிகளிடத்திலும், கதி ஒன்றும் இலர்போல-கதியொன்று மில்லாதவர்போல, மலிநம்கொள்ளும்-அழுக்குப்படிந்த, பழையகந்தை-பழங்கந்தைத்துணியை, அணிவோர் இடத்தும்-தரிப்பவரிடத்திலும், கடிநாய் என சீறி-கடிநாய்போலக் கோவித்து,எவரையும்சேர்க்காத - யாவரையும் சேரவொட்டாத, கன்னி-பெண்ணானவள், வாழ் - வாழ்கின்ற, மனையகத்தும்-வீட்டிலும்-ததிசேர்கடத்திலும்-தயிருள்ள குடத்திலும், கர்த்தபத்திடையிலும்-கழுதையினிடத்திலும், சார்ந்த ஆட்டின் திரளிலும்-பொருந்திய ஆட்டுமந்தையிலும், சாம்பிணமுகத்திலும் - செத்தபிணத்தின் முகத்திலும், எலேயிலாகவலே புரி - எவ்வியில்லாத துன்பத்தைச், செய்கிற தௌவை மூதேவியானவள், வாழ்குவள் என்பர் - வாழ்வாள் என்று

சொல்லுவர் (மேலோர்), அதிரூபம்-மிக்க அழகுள்ள, மலை மங்கை-பார்வதி தேவிக்கு, நேசனே-அன்பனே, மோழை தரும் அழகன்-மோழைபூபதிபெற்ற அழகனாகிய, எமதருமை மதவேள். எ-று.

மிதம்-அளவு, (உண்ணவேண்டிய அளவு). பாஷை-பேச்சு கதி-போக்கிடம். கடிநாய்-கடிக்கிறநாய் கன்னியென்பதுஇவ்விடத்தில் பொதுவாய் மாதுஎன்னும் பொருளில்வந்தது மனையகத்தும் என்பதில் அகம்எழனுருபு.ததி-தயிர்.கர்த்தபம்-கழுதை, கர்த்தபந்திடைஎன்பதில்இடை எழனுருபு. ரூபம் இவ்விடத்து அழகைக்குறித்தது. பார்வதி யென்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பாகிய மலைமங்கையென்பது மலையரையனதுமகள் என்றும் மலையரையனுக்கு மகள் என்றும் பொருள்படும்.

குணாகுண மிரண்டினும் பயன்படாமை.

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டு மென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன கரவாது
கொஞ்சமாய்ப் போகி லென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகி லென்ன
மதுரமில் லாவுவர்க் கடனீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகி லென்ன

உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகி லென்ன
வுதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
வோங்கு மிடிவரி லென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உஉ)

(இ-ள்) குணம் அற்ற-குணமில்லாத, பேய்முருங்கைத் தழை-பேய்முருங்கையிலை, தழைத்து என்ன-செழித்தால் என்னலாபம், குட்டநோய்கொண்டும் என்ன-குட்டநோய் கொண்டால் என்னநஷ்டம், குரைக்கின்ற நாய்மடிசுரந்து என்ன-குரைக்கிற நாயின்மடி பால்சுரந்தால என்னலாபம் சுரவாது கொஞ்சமாய்ப்போகில் என்ன-சுரக்காமல்கொஞ் சமாய்ப்போனல் என்னநஷ்டம், மணம் அற்ற செம்முருக் கதுபூத்து அலர்ந்து என்ன-மணமில்லாத செம்முருக்கா னதுபூத்து அலர்ந்தால் என்னலாபம், மலராதுபோகில் என்ன - மலராமற்போனல் என்னநஷ்டம், மதுரம் இல்லா-இன்சுவையில்லாத உவர்க்கடல்நீர் - உப்புக்கடனீரானது, கறுத்து என்ன-கறுத்திருந்தால் என்னலாபம், மா வெண்மை ஆகில் என்ன - மிகுவெண்மையானல் என்னநஷ்டம், உணவு அற்ற பேய்ச்சுரை-உணவுக் குதவாத பேய்ச்சுரை யானது, படர்ந்து என்ன-படர்நதால் என்ன லாபம், படராது உலர்ந்துதான்போகில் என்ன - படராமல் உலர்ந்து

போனால் என்னநஷ்டம், உதவாதபேர்க்கு-ஈயாதலோபிக ளுக்கு, வெகு வாழ்வுவந்தால் என்ன-வெகுசெல்லம் உண் டானல் என்னலாபம், ஓங்கும்மிடிவரில் என்ன-பெரிதாகி யதரித்திரம் உண்டானல் என்னநஷ்டம், அணி உற்ற - அழகுபொருந்திய, பை-பசுமையாகிய, கொன்றைமாலிகா கொன்றை மலர்மாலையாகிய, ஆபரணனே-ஆபரணத்தையு டையவனே, ஆதியே-முதல்வனே, அருமைமதவேள்-எ-று.

குணம்-நன்மை. குட்டநோய்-கொடிசெடி முதலியவ ற்றிற் குண்டாவதோர் - சொரிநோய், இது உண்டானல் கொடிசெடிகள் உலர்ந்தழியும். நாய்மடி-நாயின்முலை, சுர த்தல்-பாலூறுதல், செம்முருக்கு-ஓர்மரம். அலர்தல்-மலர் தல், உவாக்கடல்-உப்புக்கடலில், உதவுதல் - கொடுத்தல், இன்னது உதவாதபேர் என்னமல் உதவாத என்வாளாகூ றலால் ஒருபொருளுமுதவாத லோபியர் எனப் பொருளு ரைக்கப்பட்டது, வாழ்வு - கருவியாகுபெயர், மாலிகாபர ணன் - வடமொழிச்சந்தி, இது தீர்க்கசந்தியெனப்படும், மாலிகா என்பது தமிழில் மாலிகையெனவரும்.

குறைவுற்றுங் குணங்கெடாமை.

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழு தாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சார மதுரங் குறையுமோ

நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கி விடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையு மாற்றுங் குறையுமோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு வானுலாங்
கதிர்மதி கனம் போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனுங்
காசினி தனிற் போகுமோ
அறிவுற்ற பேணாவிட் டகலாத மூர்த்தியே
யையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௨௩)

(இ-ள்.) தறிபட்ட-வெட்டப்பட்ட, சந்தநக்கட்டை-சந்தநக்கட்டையானது, பழுதுஆயினும்-தான் தேய்ந்துபோனாலும், சார்மணம் பழுதுஆகுமோ - (அதனிடத்தே)பொருந்திய வாசனைகுறைவுபடுமோ - (குறைவுபடாது,) தக்க பால்-சிறந்தபாலை, சுவறிடகாய்ச்சினும்-வற்றும்படி காய்ச்சினாலும், சாரமதுரம் குறையுமோ-அதனால், அதன் சாரமாகிய இன்சுவை குறையுமோ (குறையாது,) நிறைபட்ட கதிர்மணி-நிறைந்த ஒளியையுடைய இரத்தினம், அழுக்கு அடைந்தாலும் - மலிநமடைந்தாலும், அதின் நீள்குணம் அழுங்கிவிடுமோ-அதின் உயர்ந்தகுணம் அழிந்திடுமோ - (அழிந்திடாது,) நெருப்பிடை உருக்கினும்-நெருப்பிலேயிட்டு உருக்கினாலும், அடிக்கினும் - (கருவிகளைக் கொண்டு)

அடிந்தாலும், தங்கத்தின்-உயர்ந்த பொன்னினது, நிறையும் மாற்றும் குறையுமோ-எடையும் மாற்றுங்குறையுமோ (குறையாது,) கறைபட்டமைபுயல்மறைத்தாலும்-கருமை பொருந்திய குளிர்ந்த மேகமானது மறைத்தாலும், வான் உலாம்-ஆகாயத்தில்சஞ்சரிக்கிற, கதிர்மதி-சூரியசந்திரர்களுடைய, கனம் - பெருமையானது, போகுமோ - மறையுமோ, (மறையாது,) (அப்படியே) கற்றபெரியோர் மகிமை-கல்விகற்ற பெரியோரது பெருமையை, அற்பர் - அற்பர். அறிகிலரேனும்-அற்பகுண முடையார் அறியமாட்டாராயினும், (அவரது பெருமையானது) காசினிதனில் போகுமோ - உலகத்தில் அழிந்து விடுமோ, (அழிந்துவிடாது,) அறிவு உற்றபேரை-மெய்யுணர்வடைந்த ஞானியரை, விட்டு அகலாத-விட்டுநீங்காத, மூர்த்தியே - திருவுருவத்தையுடையவனே, ஐயனே-இறைவனே, அருமைமதவேள்-எ-று

இச்செய்யுட்கருத்து-நறுந்தொகையில், "அடினுமாவின்பால் தன்சுவை குன்றாது, சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது, அரைக்கினுஞ் சந்தநந் தன்மணமறாது" எனவும், மூதுரையில், "சந்தநமென்குறடு தான் றேய்ந்த காலத்தும், கந்தங் குறைபடாது" "அட்டாலும் பால்சுவையிற் குன்றாது" எனவும், நான்மணிக்கடிகையில், "மாசுபடினு மணி தஞ்சீர் குன்றாவாம்" எனவும் அமைக்கப்பட்டிருத்தல் காண்க. சந்தநம், சாரம், மதுரம், மணி, கநம், அல்பர், மூர்த்தி, என்பன வடசொற்கள், மாற்று - பொன்னின்தரம், கறை-கறுப்பு, பசுமை-இவ்விடத்துக் குளிர்ச்சி

யெனப் பொருள்பட்டது. குளிர்ந்தநீரைபச்சைத்தண்ணீர்என வழங்குதலுங் காண்க. கதிர்-ஒளி, இது பண் பாகுபெயராய்ச் சூரியனையுணர்த்திற்று. மதி-சந்திரன், யாவராலு மதிக்கப் படுவது, அமிர்தத்தை யுடையது, என்பது பொருள். காசினி - காஸ்யபீ என்னும் வடசொற்சிதைவு. இதற்கு, பரசுராமனால் காசிபமுனிவனுக்குத் தானஞ்செய்யப்பட்டது என்பது பொருள். அறிவு-தத்துவஞானம்.

இதற் குதவிசெய்வ திதுவெனல்.

வானவர் பிதிர்க்கண்முச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரு முதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடு மன்னராம்
தேனமர் நறுந்தொடையல் புனைமன்ன வர்க்குதவி
சேர்ந்தகுடி படை வர்க்கமாஞ்
சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்கு மழையாம்
மேனிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தந் நீதி யொன்று
வேதிய ரொழுக்கமொன் றிம்மூன்று மேயென்று
மிக்கபெரி யோருரை செய்வார்
ஆனமர் நெடுங்கொடி யுயர்த்தவெம் மிறைவனே
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
ரறப்பளீ சுர தேவனே. (உச)

(இ-ள்.) வானவர்-தேவர்கள், பிதிர்க்கள்-பிதிரர்கள், முச்சுடர்-முச்சுடர்கள், மூவர்-மும்மூர்த்திகள், கோள்கட்கும்-கிரகங்கள் என்பவைகளுக்கும், வாழ்வுதரும்உதவி-வாழ்வைத்தருகிற உதவியாவது, புவகம்-இவ்வுலகமாம், வளம்மிக்க-வளமிகுந்த, புவனந்தனக்கு-இவ்வுலகத்துக்கு, மேன்மேல்-மேலும்மேலும் உதவியாவது, வாழ்வு பெற்றிடும் மன்னர்ஆம்-பெருஞ்செல்வத்தைப்பெற்ற அரசராம், தேன் அமர்-வண்டுகள் விரும்புகிற, நறுதொடையல்-மணமமைந்த மலர் மாலையை, புனை-தரித்த, மன்னவர்க்குஉதவி-அரசருக்கு உதவியாவது, சேர்ந்த-(அவர்களை) சார்ந்த, குடிபடை வர்க்கம்ஆம்-குடிபடைகளின் கூட்டமாகும், சேர்குடிபடைக்கு உதவி-சேர்ந்த குடிபடைகளுக்கு உதவியாவது, விளைபயிர் - விளையாநின்ற பயிர்களாகும், பயிர்க்கு உதவி-அந்தப் பயிர்களுக்கு உதவியாவது, சீர்பெற வழங்கும் மழைஆம்-(உலகம்) சிறப்படையப் பெய்கிற மழையாகும், மேல்நிமிர் மழைக்கு உதவி-மேலிடத்தினின்றுமிகுதியாய்ப் பெய்கிற மழைக்குதவியாவது, மடமாதர்-மடமாதருடைய, கற்பு ஒன்று-கற்பு ஒன்றும், வேந்தர்தம் நீதிஒன்று-ராஜநீதி ஒன்றும், வேதியர் ஒழுக்கம் ஒன்று-அந்தணரது ஒழுக்கமொன்றும் ஆகிய, இம்மூன்றுமே என்று-இந்த மூன்றுமே யாமென்று, மிக்க - மேலான, பெரியோர் உரைசெய்வார் - பெரியோர் சொல்லுவர், ஆன்அமர்-இடபவுரு எழுதப்பெற்ற, நெடுகொடி - நெடிய துவசத்தை உயர்த்திப் பிடித்த, எம்இறைவனே-எமது தலைவனே, அதிபனே-அதிபதியே, அருமைமதவேள். எ-று.

இதனைக்கண்டு மகிழ்வ திதுவெனல்.

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் றுலிப்ப
தவர்தந்த சந்ததிய தாஞ்
சந்த்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தஙகுபைங் குமுத மலராம்
புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்கு தாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தோடம்
புரிவது மயூர வினமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாந்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலா மென்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உரு)

(இ-ள்.) தந்தைதாய்-தந்தை தாயருடைய. மலர்முகம் கண்டு நின்று ஆலிப்பது-தாமரைமலர்போலுமுகத்தைக்கண்டு சந்தோஷிப்பது, அவர்தந்த சந்ததிஆம்-அவர்பெற்ற பிள்ளைகளேயாம், சந்த்ரோதயம் கண்டுபூரிப்பது - சந்திரனுதிப்பதைக்கண்டு சந்தோஷிப்பது, உயர்வாவிதங்கு-சிறந்ததடாகங்களில்உண்டாயிருக்கிற, பைங்குமுதமலர்ஆம்-

பசுமையாகிய அல்லிமலராம், புந்தி மகிழ்வாய்-மனமகிழ்ச்சி யுண்டாகும்படி, இரவி வருதல் கண்டு-சூரியன் வருவதைக்கண்டு, அகமகிழ்வ-மனமகிழ்வன, பொங்கு-விளங்குகின்ற, தாமரை மலர்கள் ஆம்-தாமரைமலர்களாகும், பொதவும்-மிகவும், புயல்கண்டு-மேகத்தைக்கண்டு, கண்களித்து, நடம்புரிவது-நடநம்செய்வது, மயூரம் இனம்ஆம்-மயிலின் கூட்டமாம், சிந்தைமகிழ்வாய் உதவு - மனமகிழ்ந்து கொடுக்கின்ற, தாதாவினைக்கண்டு - கொடையாளியைக்கண்டு, சீர்பெறுவது - மனமகிழ்வது, இரவலர் குழாம்-யாசகர் கூட்டமாம், திகழ்நீதி மன்னரைக்கண்டு-விளங்குகின்ற நீதியை யுடைய அரசரைக் கண்டு, களிகூர்வது-சந்தோஷ மிகப்பெறுவது, இ - இந்த, செகம் எல்லாம் என்பர் - இந்தவுலகமுழுதுமாம் என்று சொல்லுவர் (மேலோர்), அம்-அழகிய, அந்திவான் அனைய-அந்திவானத்தை யொத்த, செஞ்சடாடவியனே-செவந்தசடைக்காட்டை யுடையவனே, அமலனே-மலரஹிதனே, அருமைமதவேள். எ-று.

மலர்முகம்-மலர்ந்தமுகம் எனினுமமையும். ஆலித்தல் - சந்தோஷித்தல். சந்ததி - மக்கள். குமுதம்-ஆம்பல். புயல் - மேகம் மயூரம்-மயில். இரவலர்-யாசகர், குழாம்-கூட்டம் அந்திவான்-செவ்வானம்.

அதுவது வாகாமை.

உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி
யுறவாடு முறவு முறவோ
வுபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ

நள்ளா திருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்துவரு
தக்கபயிர் பயிராகு மோ
தளகர்த்த னொருவனில் லாமன்முன் சென்றிடுந்
தானையுந் தானை யாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்ப மாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீ வனமாகு மோ
அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழு
மாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உசு)

(இ-ள்.) உள்அன்பு இல்லாதபேர் - மனத்தில் அன்பில்லாத பேர்கள், தித்திக்கபேசி-இனிக்கப்பேசி, உறவாடும் உறவும்-உறவாடுகிற உறவும், உறவோ-உறவாகுமோ, உபசரித்து-உபசாரம்செய்து, அன்புடன்-அன்போடு, பரிமாறிடாதசோறு-படைக்காதஅன்னம், உண்டவர்க்கு-அதைப் புசித்தவர்க்கு, அன்னம் ஆமோ - அதுசோறாகுமோ, நள்ளாது இருந்துகொண்டு - நள்ளாதிருந்து கொண்டு, ஒருவர்போய் பார்த்துவரு - ஒருவர்போய்ப் பார்த்து வருகிற, தக்க பயிர்-தகுதியாகிய பயிர், பயிர் ஆகுமோ - பயிராகுமோ, தளகர்த்தன் ஒருவன் இல்லாமல்-தளகர்த்தன் ஒருவனில்லாமல், முன் சென்றிடும் தானையும்-முன்னே போகிற படையும், தானை ஆமோ-படையாகுமோ, விள்ளாத-நீங்காத,போகம்இல்லாத-அநுபவமில்லாத, பெண்மேல்

வருவிருப்பமும் - பெண்மீ துண்டாகிற மோகமும், விருப்பம் ஆமோ-மோகமாகுமோ, வெகுகடன்பட்டபேர்-அதிக கடன்பட்ட பேர்கள், செய்கின்றசீவநமும்-செய்கிறசீவநமும், மிக்க சீவநம் ஆகுமோ - மேலான சீவநமாகுமோ, அள்ளாத - குறையாத, இருகருணையாளனே-பெருங்கருணையாளனே, தேவர்தொழும் ஆதியே-தேவர்கள் வணங்குகின்ற முதல்வனே, அருமைமதவேள். எ-று.

உறவாகுமோ என்னும் ஓகாரம் ஆகாது எனப்பொருள் தருவதால் எதிர்மறை. மற்றையடிகளிலுள்ள ஓகாரங்களும்எதிர்மறையோகாரங்களே. பரிமாறுதல் படைத்தல். தள்ளாதிருத்தல்-சோம்பலாயிருத்தல் தளகர்த்தன்-படைத்தலைவன். சீவநம்-உயிர்வாழ்க்கை.

நற்குணங்களுக் கிடமாகாதவர்.

வெறிகொண்ட மர்க்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப் புதலிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாது போல்
குறைகின்ற புத்தியா யதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தான்மிக்க
குவலயந் தனி லவர்க்கு
நிறைகின்ற பத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண் மே

னேசமு மீகையு மிவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உஎ)

(இ-ள்.) வெறிகொண்ட-பைத்தியம் பிடித்த, மர்க்கடம் (இயல்பாகவே மிகு சேஷ்டை யுள்ள ஒரு) குரங்கானது, பேய்கொண்டு-பேய் பிடிக்கப்பட்டு, கள்உண்டு-(அதன்மேல்) கள்ளையும் குடித்து, வெம்-கொடிதாகிய, காஞ்சொரிப் புதலிலே வீழ்ந்து-பூனைக்காஞ்சொரிப் புதலிலே விழுந்து, தேள்கொட்டிட-(அந்தக்காலத்தில்) தேளினால் கொட்டப் படவும்பெற்றால், சங்மார்க்கம்-(அக்குரங்கினிடத்தில்) சாந்த குணமானது, எள்அளவும் மேவுமோ-எள்ளவாயினும் பொருந்துமோ, (பொருந்தாது); மேவாமைபோல்-பொருந்தாதுபோல, குறைகின்ற அற்பர்க்கு·(நற்குணம்) குறைபட்ட அற்பருக்கு, மனைவி இழிசாதிஆய் - மனையாளும் இழிகுலத்தவளாய் வாய்த்து, கூடவே இளமைஉண்டாய்-அதனுடனே யௌவந பர்வமுமுள்ளதாய், கொஞ்சம்ஆம் அதிகாரமும் கிடைத்தால்-சிறிதாகிய அதிகாரமும் கிடைத்து விட்டால், மிக்ககுவலயந்தனில்-பெரிதாகியபூமியில், அவர்க்கு-அவர்கட்கு, நிறைகின்ற புத்தியும்-நிறைந்தஅறிவும், சீலமும்-நல்லொழுக்கமும், மேன்மையும்-பெருந்தன்மையும், நிதாநமும்(காரியங்களில்) விரையாதிருத்தலும்,

பெரியோர்கள்மேல் நேசமும்-பெரியோர்களிடத்தும் அன்பும், ஈகையும் - தாநகுணமும், இவையெல்லாம்-இவையாவும், கனவிலும் நினைவிலும் வாராது - சொப்பனத்திலும் எண்ணத்திலும் உண்டாகமாட்டா, அறைகின்ற-சொல்லப்பட்ட, சுருதியின் பொருள்ஆன-வேதார்த்தமாகிய, வள்ளலே-உதாரசீலனே, |அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள். எ-று.

காஞ்சொரி-உடம்பிற் பட்டவுடனே மிகுந்ததினவையுண்டாக்குவதாகிய ஓர்பூடு (செடி). குவலயம்-பூமண்டலம். வாராது-ஒருமை பன்மை மயக்கம். ஒருவன் இல்லறத்தை வழுவாது நடத்துதற்கு அவனது வாழ்க்கைத் துணையாகிய மனையாளுடைய உடன்பாடும் உதவியும் வேண்டப்படுதலாலும், குலத்துக்கேற்றபடி குணமும் பெருமைசிறுமைகளை யடைதலாலும், மனைவி இழிசாதியாய் வாய்த்தலையும் ஒருகுறையாகக் கூறினர்.

இதனை யின்னமுறையனு மெனல்

தன்னுன் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப் போன் றமையனுந்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
றுய்தந்தை யென்ன லாகும்
ஒன்னூர் செயுங்கொடுமை யான்மெலிவு வந்தபோ
துதவுவோ னிட்ட தெய்வம்
யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரிய
முரைப்பவன் குருவென்னலாம்

எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
　　யெண்ணிவரு வோன் பந்துவா
மிருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
　　னெவனெனினு மவனே சுதன்
அந்நார மும்பணியு மெந்நாளு மேபுனையு
　　மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுர தேவனே. (உஅ)

(இ-ள்.) தன்னால் முடிக்கவொண்ணாத காரியம் - தன்னாலே முடிக்கக்கூடாத காரியத்தை, தான்வந்து முடிப்போன்-தான் வந்து செய்து முடிப்பவன், தமையன்ஆம்-தமையனென்று சொல்லப்படுவான், தன் தலைக்கு இடர்வந்தபோது-தன்தலைக்குத் துன்பம் வந்தபோது, மீட்டு உதவுவோன்-(அந்தத் துன்பத்திலிருந்து) மீளுவித்து உதவிசெய்பவன், தாய்தந்தை என்னல் ஆகும் - தாயும் தந்தையும் என்று சொல்லப்படுவான், ஒன்னார் செயும் கொடுமையால்-பகைவர் செய்யுங் கொடுமையால், மெலிவுவந்தபோது-மெலிவுண்டானகாலத்தில்,உதவுவோன்-உதவிசெய்பவன், இட்டதெய்வம-இஷ்ட தெய்வமென்றுசொல்லப்படுவான், யுத்திபுத்திகள் சொல்லி-யுக்தி புத்திகள் சொல்லி, மேல்வரும் காரியம் உரைப்பவன்-இனிமேல் வருங் காரியத்தைச் சொல்லுவோன், குரு என்னல்ஆம்-குருவென்றுசொல்லப்படுவான், எந்நாளும் - எக்காலத்தும், வரும்-உண்டாகிற நன்மை தீமை-நன்மை தீமைகளை, தனது என்னவே எண்

ளி வருவோன்-தனதென்றே நினைத்து வருகிறவன், பந்துவும்-உறவினன் என்று சொல்லப்படுவான், இருதயம் அறிந்து-கருத்தறிந்து, தன் சொற்படி நடக்குமவன்-தன்சொற்படியே நடப்பவன், எவன் எனினும்-யாவனாகிலும், அவனே சுதன் - அவனே புதல்வனென்று சொல்லப்படுவான், அம் - அழகாகிய, நாரமும்-கங்கையையும், பணியும்-பாம்பையும், எந்நாளும் புனையும்-எக்காலத்தும்தரித்திருக்கிற, அண்ணலே-பெரியோனே, அருமை மதவேள். எ-று.

ஒன்னார்-சேராதவர். (பகைவர்). மெலிவு-தாழ்வு. நாரம்- நீர், அது கங்கைக்காயிற்று, பணி-பணத்தை யுடையது, பணம்-படம்.

அவரவரிடத்து நடக்குமுறை.

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
மாறாத நல் லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
வார்த்தை வழிபா டடக்கம்
காதார் கருங்கண்மனை யாடனக் கோசயன
காலத்தி னய பாஷணங்
கற்றபெரி யோர்முதியர் வருமாது லர்க்கெலாங்
கருணைசே ரருள் விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
நேரல ரிடத்தில் வயிரம்

ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
    தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுர தேவனே. (உகூ)

(இ-ள்.) மாதாபிதாவினுக்கு - தாய்தந்தையர்க்கு (நடக்குமுறை), உள் அன்புடன்-உள்ளன்போடு, கனிவு-இரக்கமும், மாறாத நல் ஒழுக்கம்-மாறுபடாத நல்லொழுக்கமுமேயாம், மருவு குரு ஆனவர்க்கு-பொருந்திய ஆசாரியரானவர்க்கு) நடக்குமுறை, இனிய-இனிதாகிய, உபசாரம் உள்ள வார்த்தை-உபசாரமுள்ளசொல்லும், வழிபாடு-வழிபடுதலும், அடக்கம் அடங்கியிருத்தலுமாம், காது ஆர் கருங்கண்-காதளவுஞ்சென்று மீள்கின்ற கரிய கண்களையுடைய, மனையாள் தனக்கோ - மனைவிக்கு (நடக்கு முறையோ வென்றால்). சயநகாலத்தில்-படுக்கைக்காலத்தில், நயபாஷணம்-இதவசநமாம், கற்ற பெரியோர்-கற்றபெரியோருக்கும், முதியர்-மூத்தோருக்கும், வரும் ஆதுலர்க்கு, நாடி வருகிற யாசகர்க்கும்,எல்லாம்-இவர்களெல்லாருக்கும், (நடக்குமுறை), கருணைசேர் அருள் விதாநம்-கருணையும் பொருந்திய அருளும்பொருட்கொடையுமாம், நீதிபெறு மன்னவரிடத்து-நீதியையுடைய அரசரிடத்து (நடக்குமுறை), அதிக பயவிநயம்-மிக்க பயமும் விநயமுமாம், நெறி உடைய பேர்க்கு-நன்னெறியை யுடைய பேர்களுக்கு, இங்கிதம் - இதஞ்செய்தலாம், நேயம் உள்ள தமர்தமக்கு-அன்புள்ள உறவினருக்கு, (நடக்குமுறை) அகமகிழ்வுடன்பரிவு-மனமகிழ்வோடு அன்புமாம், நேரவரிடத்து-பகைவரிடத்து (நடக்குமுறை), வயிரம்-மனத்தில் வைரங்கொ

ண்டிருத்தலாம், ஆதி-முதன்மையாகிய, மனுநூல் சொல்லும் வழக்கம் இது ஆகும் - மனுநூலிற் சொல்லப்படுகிற முறை இது ஆகும், எமது ஐயனே - எமது இறைவனே, அருமை மதவேள். எ-று

மாறுத-இடையறுத எனினுமாம். ஒழுக்கம்-ஆசாரம். வழிபாடு-வணங்குதல். அருள்-இரக்கம். விதாநம்-செல்வம். அது செல்வங் கொடுத்தலுக்காயிற்று. விநயம்-மரியாதை. வயிரம்-ஆறாக்கோபம்,

குணத்தைவிட்டுக் குற்றத்தைக் கவர்தல்.

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
தூர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளி விடுவார்
இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார்கறுப்
பென்னிலோ போய்ப்பணிகுவா
ரீன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
யென்னிலோ காலில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரி
னன்றாக வேவ பேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மை பலவே செய்குவார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகா
ணத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௰)

(இ-ள்.) துட்டவிகடக்கவியை - துஷ்டவிகடக்கவியை, யாருமே மெச்சுவார் - எல்லாருமே மெச்சுவார்கள், சொல்லும் நற்கவியை மெச்சார்-சொல்லப்பட்ட நற்கவியை மெச்சமாட்டார்கள், துர்ச்சநரை - துஷ்ட ஜநங்களை, அகம் மகிழ்ந்து உபசரிப்பார்-மனமகிழ்ந்துபசரிப்பார்கள், வரும் தூயரை தள்ளிவிடுவார்-வருகிற பரிசுத்தரைத் தள்ளிவிடுவார்கள், இட்டம்உள்ள தெய்வம்தனை கருதிடார்-இஷ்ட தேவதையை நினைக்க மாட்டார்கள், கறுப்பு என்னிலோ-கறுப்புத்தெய்வ மென்றாலோ, போய்பணிகுவார்-சென்று வணங்குவார்கள், ஈன்றதாய் தந்தையை - பெற்றதாய்தந்தையரை, சற்றும் மதியார்-சிறிதும் மதிக்கமாட்டார்கள், வேசை என்னிலோ-வேசையென்றாலோ, காலில் வீழ்வார்-(அவள்) காலில்வீழ்ந்து வணங்குவார்கள், நட்ட லாபங்களுக்கு உள்ஆன பந்துவரின்-நஷ்டலாபங்களுக்குட்பட்ட உறவினன்வந்தால், நன்றாகவே பேசிடார்-நன்றாய்ப் பேசவேமாட்டார்கள், நாளும்-எந்நாளும், ஒப்பாரியாய் வந்த-ஒப்பாரி கொண்டுவந்த, புது உறவுக்கு-புதிய வுறவினனுக்கு, நன்மை பலவே செய்குவார்-பலநன்மைகளையும்செய்வார்கள், அட்டதிசை சூழ் புவியில் - அஷ்டதிக்குகளால் சூழப்பெற்ற பூமியில், ஓங்கு - உயர்ந்து வருகிற. கலிமகிமை - கலியுகத்தின் பெருமை (இதுவாகும்), அத்தனே-இறைவனே, அருமை மதவேள். எ-று.

விகடக்கவி-பகடிப்பாட்டு, பகடிப்பாட்டுப் பாடுவோன். கவியென்றது இங்குப் பாட்டையும்பாடுங் கவிஞனையும் உணர்த்தும். கறுப்பு-கறுப்புத்தேவதைகள், அவைகாட்டேரி முதலியன.

குணங்காண் குறி.

கற்றோர்களென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கி னாற் காணலாங்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கானடையி னுங் காணலாம்
அற்றோர்க ளென்பதனை யொன்றிலும் வாரா
வடக்கத்தி னா லறியலா
மறமுள்ளா ரென்பதைப் பூததயை யென்னுமிலை
யதுகண்டு தா னறியலாம்
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையு மென்றே யறியலாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத்தி னா லறியலாம்
அத்தா குணத்தினாற் குலநலந் தெரியலா
மண்ணாலே யருமை மதலே
எனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௧)

(இ-ள்.) கற்றோர்கள் என்பதை - கற்றவர்களென்பதை, சீலமுடனே சொல்லும்-ஒழுக்கத்தோடு சொல்லுகிற, கனம் வாக்கினால் காணலாம்-மேலான வாக்கினால் கண்டுகொள்ளலாம், கற்பு உள்ளார்என்பதை-கற்புள்ளவரென்பதை, பார்க்கின்ற பார்வையொடு-பார்க்கிற பார்வையுடன், கால் நடையினும் காணலாம்-கால்நடையாலும் கண்டுகொள்ள

லாம், அற்றோர்கள்என்பதனை-அற்றவர்களென்பதை, ஒன்றினும் வாரா-ஒருகாரியத்திலும் முற்பட்டு வராத, அடக்கத்தினால் அறியலாம்-அடக்கத்தால் அறிந்துகொள்ளலாம், அறம் உள்ளோர் என்பதை-தருமமுள்ளவர்களென்பதை, பூததயை என்னும்-(அவர்களிடத்துள்ள) பூததயையென்கிற, நிலைகண்டு அறியலாம்-நிலையைப்பார்த்து அறிந்து கொள்ளலாம், வித்து ஓங்குபயிரை-வித்தினால் விளைகின்ற பயிரை, கிளைத்துவரு துடியினால்-கிளைத்துப் புறப்படுகிற துடியினாலே, விளையும் என்று அறியலாம்—வீரம் உடையோர் என்பது-வீரமுள்ளவரென்பதை, ஓங்கிவரு-உயர்ந்து வருகிற, தைரிய விசேடத்தினால் அறியலாம்-தைரிய விசேஷத்தால் அறிந்து கொள்ளலாம், அத்தா-இறைவனே, அண்ணலே-பெரியோனே, குணத்தினால் நற்குணத்தால், குலநலம் தெரியலாம் - குலத்தினது நன்மையைத் தெரிந்து கொள்ளலாம், அருமை மதவேள். எ-று.

கற்புளார்-கற்புள்ள மாதர். அற்றோர்கள்-அகங்கார குணமற்றவர்கள், பற்றற்றவர்கள். பூததயை-உயிர்களின் மேலுண்டாகிய கிருபை. கிளைத்து வருதல். கிளைவிட்டு வருதல். துடி-வலிமை. தைரிய விசேடம்-அதிக தைரியம், குணம்-நற்குணம் எனப்பட்டது குலநலம் என மேல்வருதலால்.

கூடிற் பயன்படல்.

செத்தைப்பல கூடியொரு கயிறாயி னதுகொண்டு
திண்கரியை யுங் கட்டலாந்
திகழ்ந்தபல துளிகூடி யாறாயின் வாவியொடு
திரளேரி நிறை விக்கலாம்

ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடி
னுடுத்திடுங் கலை யாக்கலா
மோங்கிவரு கோனுடன் சிலையுங் கூடினு
லுயர்கவிகை யாக் கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளை விக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றி பெறலாம்
அற்றகனி யைப்பொருந் தரிபிரமர் தேடரிய
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனநினைவ தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௨)

(இ-ள்.) செத்தை பலகூடி-பல திரணங்கள் சேர்ந்து, ஒருகயிறு ஆயின்-ஒரு கயிறுனல், அதுகொண்டு-அந்தக் கயிற்றைக்கொண்டு, திண்கரியையும் கட்டலாம்-வலிய யானையையும் கட்டலாம், திகழ்ந்த பலதுளிகூடி-விளங்குகிற பலதுளிகள் சேர்ந்து, யாறு ஆயின்-ஆறுனல், (அந்தஆற்றைக்கொண்டு, வாவியொடு-தடாகங்களோடு, திரள் ஏரி-திரண்ட பலஏரிகளையும், நிறைவிக்கலாம்-நிரம்பப்பண்ணலாம், ஒத்த நுண்பஞ்சுபலசேர்ந்து-ஒன்றற்கொன்றொத்த நுட்பமான பஞ்சுபல சேர்ந்து, நூல் ஆயிடின்-நூலானல், உடுத்திடும் - உடுத்துக்கொள்ளுதற்குரிய, கலை ஆக்கலாம்-ஆடைசெய்து கொள்ளலாம், ஓங்கிவருகோனுடன்சிலையும்

கூடினல்-உயர்ந்து வருகின்ற கோனுடனே துணியும் சேர்ந்தால், உயர் கவிகை ஆ கொள்ளலாம்-உயர்ந்த குடையாகப் பிடித்துக்கொள்ளலாம், மற்றும்-மேலும், உயர் தண்டுலத்தோடு-உயர்ந்த அரிசியுடனே, தவிடு உமி கூடின்-தவிடும் உமியும் சேர்ந்திருந்தால், மல்கும் முளை விளைவிக்கலாம் - மிக்க முளைகளை விளையச் செய்யலாம், ஒருவர்க்கு ஒருவர்-ஒருவரோடொருவர், மனம் ஒத்தநேயமோடு-மனமொத்த அன்புடன், கூடி வாழின்-சேர்ந்து வாழ்ந்தால், வெகு வெற்றி பெறலாம்-மிகு வெற்றியை யடையலாம் அற்ற கனியை பொருத்து - அற்ற கனியைப் பழையபடியே பொருத்தி வைத்த, அரி-திருமாலும், பிரமர்-பிரமதேவரும், தேடு அரிய - தேடுதற்கரிய, அமலனே-மலரஹிதனே, அருமைமதவேள். எ-று.

கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. கரி-கரத்தையுடையது, தும்பிக்கையையுடையது, (யானை). துளி-மழைத்துளி, கவிகை-குடை, இது மூடுவது என்னும் பொருளுள்ளது. வெகு வெற்றி-பலவெற்றியெனினு மமையும், திருமாலவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணர் அற்ற கனியைப் பொருத்தின வரலாற்றை பாரதத்திற் காணலாம். அரிபிரமர்தேடரிய என்றது சோணசைல வரலாற்றைக் குறித்தது.

அததற்கு வெற்றியிடம்.

கலைவலாருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிக சயமோ
கைப்பொருளி லேவரு மருத்துவர்க் கோசயங்
கைவிசே டந் தன்னிலே

நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளும் ரண சூரத்திலே।
நற்றவர்க் கதிகசய முலகுபுகழ் பொறையிலே
ஞான வேதியர் தமக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க்।கோசயங்
கூறிய துலாக் கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத கொழு முனையிலே
அலைவில்குதி ரைக்குநடை வேகத்தி லதிகசய
மாமென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௲௲)

(இ-ள்.) கலைவல்லாருக்கு - நூலாராய்ச்சியில்வல்லவர்களுக்கு, அதிக சயம்-மிகுவெற்றி(எதனிடத்துண்டாகுமெனின்), மதுரவாக்கிலே-மதுர வசநத்திலேயாம், காமுகர்க்கு-காமிகளுக்கு, அதிகசயமோ-மிகுவெற்றி (எதனிடத்துண்டாகு மெனின்) கைப்பொருளிலே - கைப்பொருளிலேயாம், வருமருத்துவர்க்கோ சயம்-வருகிற வைத்தியருக்கு வெற்றியோ, கைவிசேடந்தன்னிலே - ஹஸ்த விசேஷத்திலேயாம், நலம் உடைய வேசையர்க்கு-நன்மையையுடைய வேசையருக்கு. அழகிலே-அழகிலேயாம், அரசர்க்கு-வேந்தர்க்கு, நாளும்-எந்நாளும், ரணசூரத்திலே-ரணசூரத்திலேயாம், நல்தவர்க்கு-நன்மையாகிய தவத்தோருக்கு, அதிகசயம் - மிகுவெற்றி, உலகுபுகழ் பொறையிலே-உலகத்தாரால் புகழப்படுகிற பொறுமையிலேயாம், ஞான வேதி

யர் தமக்கோ-ஞானத்தையுடைய அந்தணருக்கோ, குலம் மகிமை தன்னிலே - குலப் பெருமையிலேயாம், வைசியர்க் கோ-வணிகருக்கோ, சயம் - வெற்றி, கூரிய துலாக்கோலி லே-கூரிய தராசுக்கோலிலேயாம், குற்றம் இல்லாதவேளா ளருக்கோ - குற்றமற்ற வேளாளருக்கோ, சயம் - வெற்றி. குறையாத கொழு முனையிலே-மழுங்காத |கொழுமுனையி லேயாம், அலைவு இல் குதிரைக்கு - சலனமில்லாத குதிரை க்கு, நடைவேகத்தில் அதிக சயம்ஆம் என்பர்-நடைவேக த்திலே மிகுவெற்றி யுண்டாகு மென்று சொல்லுவர் (மே லோர்),| அருமை மதவேள். எ-று.

கலைவல்லார்-வித்வான்கள். மதுரவாக்கு-இனிய சொ ல். கைவிசேடம்-கைவாசி,நலம்-போகசுகம். துலாக்கோல்-தராசுத்தண்டு. வேகம்-மிகுவிரைவு.

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்.

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முக சூனியஞ்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர் சூனியம்
மேம்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்க தேசச் சூனியம்
மிக்கசற் புத்திர னிலாததே நலமான
வீறுசேர் க்ரக சூனியம்
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியம்

தொல்லுலகி லனைவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்த சூனிய மென்பர்காண்
ஆம்பல்வத னத்தனைக் குகனையின் றருள்செய்த
வத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே (௯௪)

(இ-ள்.) தாம்பூல தாரணம் இல்லாததே-தாம்பூல தாரணமில்லாதிருப்பதே, வரு - கலை நிறைந்த, பூர்ணசந்த்ரன் நிகர்-பூர்ண சந்திரனை நிகர்த்த, முகசூனியம் - முகசூனியமாம், சற்சனர் இல்லாததே - சற்சநங்கள் இல்லாதிருப்பதே, வெகுசனம் சேர்ந்து வாழ்தரும்-வெகு ஜநங்கள் கூடி வாழ்கின்ற, பெரிய நகர்சூனியம்-பெரிய நகர்சூனியமாம், மேம்பாடு இல்லாத-மேன்மையில்லாத, மன்னவர்கள்வந்து ஆள்வதே-அரசர்வந்து ஆள்வதே, மிக்கதேசசூனியம்-மேலான தேசசூனியமாம், மிக்கசற்புத்திரன் இல்லாததே-மேன்மையாகிய நற்புதல்வன் இல்லாததே நலமான வீறு சேர் - நன்மையாகிய பெருமை யமைந்த, க்ருகசூனியம்-க்ருஹ சூனியமாம், சோம்பாத தலைவர் இல்லாததே-சோம்பியிராத தலைவரையுடையதல்லாததே,வளமுடன்சொல் உயர் சபா சூனியம் வளத்தோடு புகழினாலும் உயர்ந்த சபா சூனியமாம், தொல்உலகில்-பழமையாகிய இவ்வுலகத்தில், அனைவர்க்கும்-எல்லாருக்கும், மாநிதியம்இல்லதே-பெரியதிரவிய மில்லாததே, சுத்த சூனியம் என்பர்-சுத்த சூனியமென்று சொல்லுவர் (பெரியோர்), ஆம்பல் வதனத்தனை - யானைமுகத்தை யுடையவனாகிய விநாயகனையும்,

குகனை-முருகக்கடவுளையும், ஈன்றருள் செய்த அத்தனே-பெற்றருளின இறைவனே, அருமை மதவேள். எ-று.

தாம்பூலதாரணம்-தாம்பூலம் தரித்தல். முக சூனியம்-முகத்துக்குப் பாழாந்தன்மை சூனியம்-பாழ். மேம்பாடில்லாத மன்னவர்கள் - கொடுங்கோலையுடைய அரசர்கள். க்ருகம்-வீடு. தலைவர்-சபாத்தியக்ஷர். சபா-சபை. நிதியம் என்பதில் அம்சாரியை. சுத்த சூனியம்-முழுப்பாழ். ஆம்பல்-யானை ஆம்பல்வதனத்தனைக்குகனை உம்மைத்தொகை.

மூடர் தாரதம்மியம்.

பெணபுத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடு மூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
பரிதவித் திடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்து வீழ்ந்திடு மூடருங்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
காஜ்மூட ரரைமூடர் காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௫)

(இ-ள்.) பெண்புத்தி கேட்கின்ற மூடரும்-(தாம்அறிவுடையோராய் நடவாமல்) மனையாள் பேச்சைக்கேட்டு அப்படியே நடக்கிற மூடர்களும், தந்தைதாய் பிழை தந்தைதாயர்களுடைய குற்றங்களை, புறம் சொல்லும் மூடரும்-வெளியேசொல்லுகிறமூடர்களும், பெரியோர்கள் சபையிலே-மேலோர்கள் கூடியிருக்கிறசபையில், முகடுஏறி-முன்னே வந்து நின்று, வந்தது பிதற்றிடும் - வாயில்வந்ததைத் தாறுமாறுய்ப் பிதற்றுகிற, பெருமூடரும்-முழுமூடர்களும், பண்பு உற்ற சுற்றம்சிரிக்க-நற்குணம் பொருந்திய தமது சுற்றத்தார் நகைக்கும்படி, இழிவுஆன - இழிவாகிய, பழிதொழில் செய்திடும் மூடரும்-பழிதொழில்களைச் செய்கிற மூடர்களும், பற்று அற்றபேர்க்கு - (தம்மிடத்தில்) மெய்யன்பில்லாதவர்கள்பொருட்டு, முன்பிணை நின்று-முன்பு பிணைபட்டு நின்று, பின்பு போய் பரிதவித்திடும்மூடரும்-(அவர்களால் தமக்குத்துன்பம்நேரிட்ட) பிறகுபோய் பச்சாத்தாபப்படுகிற மூடர்களும், கண்கெட்டமாடு என்ன ஓடி-கண்கெட்ட மாடுபோல ஓடி, இரவலர்மீது-யாசகர்மேல், காய்ந்து வீழ்ந்திடும் மூடரும் -கோபித்து விழுகிற மூடர்களும் ஆகிய, இவர் எல்லாம் - இவர்களெல்லாரும், கற்று அறிவு இல்லாத முழு மூடருக்கு-கற்றும் அறிவில்லாத முழுமூடர்களுக்கு, கால்மூடர் அரைமூடர்-கால்மூடரும் அரைமூடருமாக எண்ணப்படுவார்கள், அன்கற்ற-(உன்னைச்சரணமாக) சார்தலைக்கற்ற, நாவலர்க்காக-சுந்தரமூர்த்தி நாயனர் பொருட்டு, தூதுபோய் - தூதுசென்ற, ஐயனே-இறைவனே, அருமைமதவேள். எ-று.

புறஞ்சொல்லுதல்-வெளியிட்டுப் பலரறியச்சொல்லுதல், முகடேறுதல் - எதிரேறுதல். பண்பு-எல்லாரியல்புகளையும் அறிந்து அவர்களுக்கேற்க ஒத்து நடக்குங்குணம். சுற்றம்-சுற்றி நிற்பது, சுபாசுப காலங்களில்வந்து சூழ்ந்திருப்பது ஆதலால் சுற்றம் காரணப்பெயர். "சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்" என்றார் ஔவையாரும். பரிதபித்தல் என்பது பரிதவித்தல்எனவழங்கி வருகின்றது, பரிதாபம்-வடசொல். அறிவின்மையை வற்புறுத்தற்கு 'கண்கெட்ட மாடு' என்றார். கற்றறிவிலாத முழுமூடர் என்பதற்கு-கல்வியறி வில்லாத பெரியமூடர் என்றுரைப்பினு மமையும். அண்முதனிலைத் தொழிற்பெயர், சார்தல் என்பது பொருள். பற்று-ஆதரவுஎனினுமமையும். நாவலர்க்காகவேஎன்பதில் ஏகாரம், கடவுளரெல்லார்க்கும் மேலான தமது பெருந் தன்மையைத், தம்மைக்குறித்துக் கவிபாடியஒருஅடியவரிடத்துக்கொண்ட பெருங்கருணையால் இருந்தது தெரியாதபடிவிட்டு அடியவர்க்கெளியவனாய்த் தூதுசெல்லுதலாகிய சிறுதொழிலைமேற்கொண்டமையைவிளக்கவந்தது.

நாவலர்க்காகத் தூதுபோனகதை—சுந்தரமூர்த்திநாயனார் தலயாத்திரை சென்றபோது திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்ட செய்தியைக்கேள்விப்பட்டு மிகுந்த துக்கமும் கோபமுங் கொண்டிருந்த அவரது முதல் மனைவியாகிய பரவையார், பிறகு நாயனார் திருவாரூருக்கு வந்தபோது தம்மிடம் வருதற் குடன் படாமல், வந்தால் உயிர்விடுவேனென்றுசொல்ல, அதனையறி

ந்த சுந்தரமூர்த்தி நாயனார் பரமசிவனைத் தியானித்து, பரவையாருடைய ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் தூது சென்றருள வேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான், சிவார்ச்சனை செய்கிற ஒரு ஆதி சைவரது உருவங்கொண்டு, அர்த்தராத்திரியில் இரண்டுதரம் தூதுசென்று சமாதானஞ்செய்து, அவள் கொண்டிருந்த கோவத்தைத் தணித்து, நாயனாரை அவளிடத்திற் போகும்படி செய்வித்தருளினர் என்பதாம்.

இதற்கிது வேண்டுமெனல்.

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
 தம்புத்தி கேட்க வேண்டுந்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
 தளசே கரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
 கற்றோரை நத்தவேண்டுங்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
 கருத்துள்ள மந்திரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமார்த்திய னாகினுஞ்
 சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
 தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
 யையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (அசு)

(இ-ள்.) தனக்கு வெகு புத்தி உண்டாயினும்-(ஒருவன்) தனக்கு மிக்க அறிவுண்டாயிருந்தாலும், வேறுஒருவர்தம் புத்திகேட்கவேண்டும்-வேறொருதகுதியுள்ளவர்சொல்லும் அறிவையுங்கேட்கவேண்டும், தான் அதிகசூரனே ஆயினும்-தான்மிகுவீரனேயானாலும், தளசேகரங்கள்கூடவேவேண்டும்-சேனைகளைத் தன்னுடன் சேகரித்துவைத்துக்கொள்ள வேண்டும், கனக்கின்றவித்துவான் ஆயினும் (எவ்விடத்தும்) பெருமையடைகிற வித்துவானானாலும், தன்னினும்கற்றோரை நத்தல்வேண்டும்-தன்னிலும் மிகுதியாய்ப்படித்தவர்களை விரும்பிச் சேரவேண்டும், காசினியை - பூமி முழுதும், ஒரு குடையில் ஆண்டாலும்-ஒருகுடை நிழலில் வைத்து ஆண்டாலும், வாசலில்-தன்வாசலில், கருத்து உள்ள மந்த்ரி வேண்டும் - ஆலோசனையுள்ள மந்திரியை யுடைத்தாயிருக்க வேண்டும், தொனிக்கின்ற சங்கீத சாமர்த்தியன் ஆயினும்-இனிமையாகப் பாடுகிற சங்கீதத்தில் சமர்த்தனானாலும், சுதிகூட்ட ஒருவன் வேண்டும் - உடனிருந்து சுதி கூட்டித்தர ஒருவனிருக்கவேண்டும், சுடர்விளக்கு ஆயினும்-ஒளியுள்ள தீபமேயானாலும், நன்றாய்விளக்கிட-நன்றாக ஒளிசெய்வித்தற்கு, தூண்டுகோல் ஒன்றுவேண்டும்-தூண்டிவிடுங்கோல் ஒன்றிருக்க வேண்டும், அனல் கண்ணனே-(நெற்றியில்) நெருப்புக்கண்ணை யுடையவனே, படிகசங்கம் நிகர்வண்ணனே-படிகத்தையும் சங்கையும்போன்றவெண்ணிற முடையவனே, ஐயனே - இறைவனே, அருமை மதவேள். எ-று.

"கற்றோர்கருச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" ஆதலால், 'கனக்கின்ற வித்துவான்' என்றார். வித்வான-அறிவு

டையவன், வித் - அறிதல். நீதி வழுவாத அரசாட்சியைக் குடையென்றல்மரபு. ஒரு குடையில் ஆளுதலை 'ஏக சக்ராதிபத்யம்' என்பவர் வடநூலார், வாசல் என்றது சபையை. மந்த்ரம்-ஆலோசனை யாதலால் அதனை யுடையவனை மந்த்ரி யென்பவர் வடநூலார். படிகசங்கம்-படிகத்தொகுதியெனினு மமையும். சுதி-சுருதி. சுதிகூட்டல் என்பீது-முதல் நாதமாகிய ஷட்ஜமத்தோடு பஞ்சமம் என்னும் ஸ்வரத்தை மனோரஞ்சகமாகும்படி சுத்தமாகப் பொருந்துதல், யோகிகளுக்கு ஞானோபதேசம் செய்யும் சிவபெருமானது மூர்த்தி தெளி பளிங்குநிறமாதலால் 'படிக சங்கநிகர்வண்ணனே, என்றார்.

வறுமையின் கொடுமை.

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்று மென்ன
மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகி லென்ன
பாலான மொழியுடைய னாயென்ன வாசார
பரனா யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாத போது
வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்த சுற்றமு மிகழுமே
மரியாதை யல்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்

ஆலால முண்டகனி வாயனே நேயனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯எ)

(இ-ள்.) மேலான சாதியில் உதித்தாலும் - மேன்மையாகிய சாதியிற் பிறந்தாலும், அதில் என்ன-அதனால் என்ன பயன், மிக்க அதிரூபமொடு - மிகுந்த அதி சௌந்தரியத்துடன், சற்குணம் இருந்து என்ன-நற்குணமிருந்தும் அதனால் என்னபயன், மிகுமானி ஆகில் என்ன-மிக்க மானமுடையவனானாலும் அதனால் என்ன பயன், பால் ஆன மொழி உடையனாய் என்ன-பால்போன்ற இன்சொல்லையுடையவனானாலும் அதனால் என்னபயன், ஆசாரபரனாய் இருந்தும் என்ன-நல்ல ஒழுக்க முடையவனாயிருந்தாலும் அதனால் என்னபயன், பார்மீது-பூமியின்மேல், வீரமொடு-வீரத்துடன், ஞானவான் ஆய்என்ன-ஞானத்தையுடையவனானாலும் அவற்றால்என்ன பயன், பாக்கியம்இல்லாதபோது-செல்வமில்லாதகாலத்தில், வாலாயமாய்-தாராளமாய், பெற்றதாயும் சலித்திடுவள் - பெற்றதாயும் சலித்துக் கொள்வாள், வந்த சுற்றமும் இகழும்-வந்த உறவும்இகழ்ந்திடும், மரியாதை யில்லாமல் அனைவரும் பேசுவார்-மரியாதையில்லாமல், எல்லாரும் பேசுவார்கள், மனைவியும் தூறு சொல்வாள்-மனையாளும் பழிசொல்வாள், ஆலாலம்உண்ட - ஆலகால விஷத்தையுண்ட, கனிவாயனே - கனிவாயையுடையவனே, நேயனே - (எல்லா வுயிர்களின்மேலும்) அருளுடையவனே, அநகனே-பரிசுத்தனே, அருமை மதவேள்.

உதித்தாலும் என்பது முதலியவற்றிலுள்ள உம்மைகள் உயர்வு சிறப்பு. ஆசாரபரன்-நல்லொழுக்கத்திற் சிறந்தவன் எனினுமமையும், பரன்-சிறந்தவன். வாலாயம்-மிகுதியுமாம், சலித்திடுதல்-வெறுத்திடல்.

ஈ ன த் து வ ம்.

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யென்னுமவ னவனி லீன
னீகின்ற வர்தம்மை யீயாம லேகலைத்
திடுமூட னவனி லீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவிடா னவனி லீனன்
னுதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முலுத்தனே வவனி லீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
யாரிலெல் லோர்க்கு மீனன்
அரக்கிதழ்க் குமுதவா யுமைநேச னேயெளிய
ரமுதனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬அ)

(இ-ள்.) புவிமீதில்-பூமியின்மேல், இரப்பவன் -யாசிப்பவன், ஈநன் இழிந்தவன், அவனுக்கு-அந்த ஈநனுக்கு. இல்

லை என்னுமவன்-இல்லையென்பவன், அவனில் ஈனன்-அவனி லும் இழிந்தவன், ஈகின்றபேர்தமை - கொடுப்பவர்களை, ஈ யாமல் - கொடுக்கவொட்டாமல், கலைத்திடும்மூடன்-கலைக் கின்ற மூடன், அவனில் ஈனன் - அவனிலும் இழிந்தவன், உரைக்கின்ற பேச்சிலே-சொல்லுகின்றசொல்லிலே, பலன் உண்டு எனகாட்டி-பயனுண்டென்று காண்பித்து, உதவி டான்-கொடாதவன், அவனில்ஈனன்-அவனிலும் இழிந்த வன், உதவ வாக்கு உரைத்து - கொடுக்கும்படி வாக்குக் கொடுத்து, இல்லை என்று சொல்லும் உலுத்தனே-இல்லை யென்றுசொல்லுகிறலோபியோ, அவனில் ஈனன்-அவனிலு ம் இழிந்தவன், பரக்கின்ற யாசகர்க்கு-மிகுதியாகிய யாச கர்களுக்கு ஆசை வார்த்தைகள் சொல்லி-ஆசை மொழிக ளைச்சொல்லி, பலகால்-பலதரம், அலைந்து திரியப்பண்ணி-அலைந்து திரியச்செய்து, (முடிவில்) இல்லையென்றிடுகொ டிய பாவியே-இல்லையென்று சொல்லுகிறகொடும்பாவியே, பாரில்-பூமியிலுள்ள, எல்லோர்க்கும்-(ஈனர்) எல்லாரினும், ஈனன்-இழிந்தவன், அரக்கு இதழ் - செவந்த இதழ்களையு டைய குமுதம் - செவ்வல்லி மலர்போன்ற, வாய்-வாயினை யுடைய, உமை நேசனே-உமாதேவிக்குப் பிரியனே, எளி யர் அமுதனே-எளியவர்க்கு அமுதம் போல்பவனே, அரு மை மதவேள். எ-று.

இரப்பவன் முதலிய ஈனர் யாவரினும், யாசகரைப்பல கால் அலையச்செய்து முடிவில் இலலையென்றுசொல்லுகிற ஈனன்மிக்க ஈனன் என்பது இச்செய்யுட்கருத்து, அரக்கு-செவப்பு. இதழ்-தளம்.

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

சென்மித்த வருடமு முண்டான வத்தமுந்
தீதில் கிரகச் சாரமுந்
தின்றுவரு மௌடதமு மேலான தேசிகன்
செப்பிய மகா மந்த்ரமும்
புன்மையவ மானமுந் தானமும் பைம்பொனணி
புனையு மடவார் கலவியும்
புகழ்மேவு மானமு மிவையொன்ப துந்தமது
புந்திக்கு ளே வைப்பதே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருத்தையுந்
தன்பிணியை யும் பசியையுந்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவர்
தஞ்செவியில் வைப்ப தியல்பாம்
அன்மருவு கண்டனே மூன்றுலகு மீன்றவுமை
யன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (நகூ)

(இ-ள்.) சென்மித்த வருடமும்-பிறந்தவருஷத்தையும், உண்டான அத்தமும் - உண்டாயிருக்கிற பொருளையும், தீது இல்கிரகச்சாரமும்-தீமையில்லாதகிரகசாரத்தையும், (நன்மையாகிய கிரகசாரத்தையும்), தின்று வரும் ஔடதமும்-உட்கொண்டு வருகிற மருந்தையும், மேலான தேசிகன் செப்பிய மகாமந்த்ரமும், புன்மை அவமானமும்-(தம

க்கு நேரிட்ட) இழிவான அவமானத்தையும், தானமும்-(தாம்செய்த) தானத்தையும், பைபொன் அணிபுனையும்-பசும்பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்களை யணிந்த, மடவார் கலவியும்-மாதரோடு (தாம்செய்த) புணர்ச்சியின்பத்தையும், புகழ்மேவும் மானமும்-கீர்த்தி பொருந்தியபெருமையையும் இவை ஒன்பதும் - இவை யொன்பதையும், தமது புத்திக்குள் வைப்பதே-தமதுமனத்தில் வைப்பதே, தன்மம் என்று-தர்மமென்று, உரைசெய்வர்-(பெரியோர்) சொல்லுவர், ஒன்னார் கருத்தையும்-பகைவரது அபிப்பிராயத்தையும், தன் பிணியையும்-தனதுநோயையும், பசியையும்-பசியினையும், தான் செய்த பாவமும்-தான்செய்தபாவத்தையும், இவை எல்லாம்-இவையாவும்வேறுஒருவர்தம் செவியில் வைப்பது-வேறொருவர்க்குக் கேட்கும்படி செய்வது, இயல்புஆம்-(தருமநூலின்) துணிபாம், அல்மருவு கண்டனே-இருட்டுப் பொருந்திய கண்டத்தை யுடையவனே, மூன்று உலகும் - மூவுலகத்தையும், ஈன்ற - பெற்ற, உமை அன்பனே - உமாதேவிக்கு நேசனே, அருமை மதவேள் எ-று.

அத்தம்-பொருள். தீதில் கிரகச்சாரம்-நன்மையாகிய க்ரஹசஞ்சாரம், உரைசெய்வர்என்னும் வினைக்கு எழுவாயாகிய பெரியோர் என்பது வருவிக்கப்பட்டது. பாற்கடலிற் பிறந்த நஞ்சை யுண்டு கறுத்த கழுத்தையுடையனுதலால் சிவபெருமானை 'அன்மருவு கண்டனே' என்றார். மூன்றுலகு-சுவர்க்கமத்ய பாதாள லோகங்கள்.

தேவர்கள் காலவளவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொரு தினமதாஞ்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்க
டாமு மீரேழ் சென்றிடும்
மதிமலியு மித்தொகையி னயனுயு ணூறுபோய்
மாண்டபோ தொரு கற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றுநெடிய
மாறனக் கோர் தினமதாம்
துதிபரவு மித்தொகையி லொருகோடி நெடியமா
றூன்றியே போய் மறைந்தா
றேகையோர் பாகனே நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் கால மென்பார்
அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட்
கரசனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சo)

(இ-ள்) சதுரயுகம் ஓரிரண்டாயிரம் பிற்படின்-ஒரு இரண்டாயிரம் சதுர்யுகங்கள்கழிந்தால், சதுமுகற்கு-நான்கு முகங்களையுடைய பிரமதேவனுக்கு, ஒரு திநமதாகும்-ஒரு நாளாகும், சாற்றும்-சொல்லப்பட்ட, இத்திநம் ஒன்றிலே-இந்த ஒருநாளிலேஇந்த்ரபட்டங்கள்தாமும்-இந்திரப்பட்டங்களும், ஈரேழ் சென்றிடும் - பதினான்கு கழிந்துவிடும், மதிமலியும் இத்தொகையின்-கருதுதற்குரிய இந்தத்தொ

கையின்படி, அயன் ஆயுள்-பிரமனது ஆயுளானது, நூறு போய் மாண்டபோது - நூறுசென்று (அவனும்) இறந்த பொழுது, ஒரு கற்பம்ஆம்-ஒருகற்பகாலமாகும், மாறிவரு கற்பம்-மாறிமாறி வருகிறகற்பங்கள், ஒருகோடிசென்ருல்-ஒருகோடி கழியுமானுல், நெடியமால்தனக்கு - நெடுமாலு க்கு, ஓர் திநமதுஆம்-ஒருநாளாகும், துதிசெயும் இத்தொகையில்- துதிக்கப்பட்ட இந்தத்தொகையில், ஒரு கோடி நெடியமால் - ஒருகோடி நெடுமால்கள், தோன்றி-பிறந்து, போய் மறைந்தால்-சென்றுமறைந்தார்களானுல், தோகை-உமாதேவியை, ஓர் பாகனே - ஒரு பாகத்திலுடையவனே, நீ நகைத்து, நீ சிரித்து, அணிமுடி-அழகிய தலையை-துள க்கிடும் காலம் என்பார் அசைக்கிற காலமென்று சொல்லு வர் (அறிஞர்), அதிகம் உள்ள-மிகுதியாயுள்ள, பலதேவர் தேவனே-பல தேவர்களுக்கும் தேவனே, தேவர்கட்கு அரசனே-தேவர்களுக்கு வேந்தனே, அருமை மதவேள். எ-று.

சதுரயுகம்-க்ரேதாயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களுஞ் சேர்ந்தது. பிற்படுதல், கழிதல். ஆயுள்-வயது. நெடியமால் - திரிவிக்கிரமன். தோகை - மயிற்சாயலை யுடையவள், உவமையாகுபெயர். துளக்கல்-அசைத்தல்.

தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர் புனிதமோ
மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணுடிக்கு
மாசின்முற் புற மதனிலே

மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாத ருக்கோ
மேனியெல் லாம்புனித மாகுமா சௌசமொடு
மேவு வனிதையர் தமக்கும்
தாம்பிர மதற்குமிகு வெள்ளிவெண் கலமயர்
தங்க மீயந் தமக்குந்
தரும்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ்சாம்பல்
சாருமண் டாது சாணம்
ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லிலே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சக)

(இ-ள்.) வாம்பரிதனக்கு - தாவிச்செல்லுகின்ற குதிரைக்கு, அதிக புநிதம்-மிகுந்த பரிசுத்தம், முகமதனிலே-(அதனது) முகத்திலேயாம், மறையவர்க்கு-வேதியர்க்கு, உயர் புநிதம்-உயர்ந்த பரிசுத்தம், மலர்அடியிலே-தாமரை மலர்போலுந் திருவடியிலேயாம், ஒளிகொள் கண்ணடிக்கு-ஒளியையுடைய கண்ணடிக்கு, புநிதம் - பரிசுத்தம், மாசுஇல்-குற்றமில்லாத, முன்புறமதனிலே - முற்பக்கத்திலேயாம், மேம்படும்-மேன்மை பொருந்திய, பசுவினுக்கு-பசுவுக்கு, (புநிதம் - பரிசுத்தம்), பின்புறத்திலே-பின்பக்கத்திலேயாம், மிக்கமடமாதருக்கோ-மேன்மை யாகிய இளமை பொருந்திய மங்கையர்க்கோ வென்றால், மேனியெல்லாம்-உடம்பு முழுதும், புநிதம்ஆகும்-பரிசுத்தமாகும், ஆசௌ

சமொடுமேவு வனிதையர் தமக்கும் - அசுத்தத்தோடிருக்கிற மாதருக்கும், தாம்பிரமதற்கும் - செம்புக்கும், மிகு- மேலான, வெள்ளி வெண்கலம் அயம் தங்கம் ஈயம் தமக்கும்-வெள்ளி வெண்கலம் இரும்பு பொன் ஈயம் என்பவைகளுக்கும், தரும்புநிதம்-பரிசுத்தத்தைத் தருவன யாவையெனின், வருபெருக்கொடு-வருகிற நீர்ப்பெருக்குடனே, புளி சுண்ணம் சாம்பல் சாரும் மண் தாது சாணம் இவை புநிதம் ஆம் என்பர்-வருகின்ற நீர்ப்பெருக்கு புளிசுண்ணம்பு சாம்பல்|மண் காவிக்கல் சாணம் ஆகிய இவைகள் பரிசுத்தஞ் செய்வனவாம் என்று சொல்லுவர் (அறிஞர்), மாமேரு வில்லியே-மகமேரு மலையை வில்லாகவுடையவனே, அநகனே-பரிசுத்தனே, அருமைமதவேள். எ-று.

ஆசௌசம்-பூப்புக்காலம், ஆசௌசத்தோடிருக்கும் பெண்களுக்கு நீர்ப்பெருக்கும், தாம்பிரத்துக்குப்புளியும், வெள்ளிக்குச் சுண்ணும்பும், வெண்கலத்துக்குச் சாம்பலும், இரும்புக்கு மண்ணும், தங்கத்துக்குக் காவிக்கல்லும், ஈயத்துக்குச் சாணமும் சுத்திசெய்யும் பொருள்களாம் என்பது இச்செய்யுளிற் கூறப்பட்டது.

அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறொன்று
கோத்துவச விர்த்தி கொள்வார்
குவலயந் தனின்மதக் களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்தி கொள்வார்

படியில்விட வரவைமந் திரதந் திரத்தினற்
பற்றிவச வீர்த்தி கொள்வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச விர்த்தி கொள்வார்
விடமுடைய துட்டரைச் சோர்பந்து கைக்கொண்டு
வீசிவச விர்த்தி கொள்வார்
மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்தி கொள்வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௪௨)

(இ-ள்) கொடிய பொலியெருதை-கொடிதாகிய பொலியெருதை, கயிறு ஒன்று - ஒரு கயிற்றை, இருமூக்கிலும், கோத்து-இரண்டு மூக்கிலும் கோத்து, வசவிர்த்தி கொள்வார்-வசவிர்த்திக்குக் கொண்டுவருவார்கள், குவலயந்தனில்-பூமண்டலத்தில், மதக்களிறதனை-மதயானையை, அங்குசங்கொண்டு-அங்குசத்தினல், வசவிர்த்திக்கொள்வார்-வசவிர்த்திக்குக் கொண்டுவருவார்கள், படியில்-பூமியில், விடம் அரவை-விஷத்தை யுடைய பாம்பை, மந்திரதந்திரத்தினல் - மந்திரதந்திரங்களாலே, பற்றி-பிடித்து, வசவிர்த்தி கொள்வார் - வசவிர்த்திக்குக் கொண்டுவருவார்கள், பாய்கின்ற குதிரையை, நெடிய கடிவாளமதுகொடு-நீண்ட கடிவாளத்தினல், நடைபழக்கி - நடைபழகச்செய்து, வசவிர்

த்திகொள்வார் வசவிர்த்திக்குக்கொண்டுவருவார்கள், விடம்உடைய துட்டரை-விஷமுள்ள துஷ்டரை, சோர்பந்து கைக்கொண்டு-கொறடாவைக் கைக்கொண்டு, வீசி-அடித்து, வசவிர்த்தி கொள்வார்-வசவிர்த்திக்குக் கொண்டு வருவார்கள், மிக்க பெரியோர்களும்-மேலானபெரியோர்களும், கோவத்தை-கோபத்தை, அறிவால்விலக்கி-அறிவினால்விலக்கி, வசவிர்த்தி கொள்வார்-வசவிர்த்திக்குக் கொண்டுவருவார்கள், அடியவர் துதிக்க-அடியார் துதித்தலும், வரு-(அவர்க்குஎதிரே) எழுந்தருளுகிற, செந்தாமரை-செந்தாமரைமலர்போன்ற, பதத்து-திருவடியையுடைய, ஐயனே-கடவுளே, அருமை மதவேள். எ-று.

வசவிர்த்தி கொள்ளுதல்-வசப்படுத்துதல். அங்குசம்-தோட்டி.வீசுதல்-அடித்தல்.செந்தாமரை-முதலாகுபெயர்

ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமொளி
செய்யகச் சோத மெனவே
செப்பிடுங் கிருமிக்கு மிக்கவொளி யதனினுந்
தீபத்தி னொளி யதிகமாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதி லதிகமாம்
பாரமத் தாப்பினொளி யதிலதிக மதிலுமோ
பனிமதிக் கொளி யதிகமாம்
விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிக ருக்கும்

மிக்கவொளி திசைதொறும் போய்விளங் கிடுமென்ன
விரகுளோ ருரை செய்குவார்
அழல்விழிகொ டெரிசெய்து மதனவே டனைவென்ற
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சங)

(இ-ள்.) செழுமணிககுஒளி-செழுமையாகிய இரத்தின த்துக்கு ஒளியிருப்பது, அதன்மட்டிலே - அதினளவிலே யே, அதினும்-அதைப் பார்க்கிலும், செய்ய-செவ்விய, கச்சோதம் எனசெப்பிடும் கிருமிக்கு-கச்சோதமென்று சொல்லப்படுகிற கிருமிக்கு, மிச்சம்ஒளி-மேலான ஒளியுண்டு, அதனினும்-அதைப்பார்க்கிலும், தீபத்தின்ஒளி அதிகம்ஆம் - தீபத்தின்ஒளி அதிகமாகும, தீபத்தின்-தீபத்தினொளியைப்பார்க்கிலும், பழுது இல்லாதீவர்த்தி அதிகம்ஆம்-குற்றமில்லாத தீவர்த்தியின் ஒளி அதிகமாகும், அதின் - அதைப்பார்க்கிலும், பகல்வர்த்தி அதிகம்ஆம் - பகல்வர்த்தியின்ஒளிஅதிகமாகும், அதின்-அதைப்பார்க்கிலும், பாரம் மத்தாப்பின் ஒளிஅதிகம்-பெரிய மத்தாப்பின் ஒளி அதிகமாகும், அதினும்-அதைப் பார்க்கிலும், பனிமதிக்கு ஒளி அதிகம்ஆம்-குளிர்ச்சியையுடைய சந்திரனுக்கு ஒளிஅதிகமாகும், விழைவுதருபரிதிக்கும்-விருப்பத்தைத்தருகிறசூரியனுக்கும், மநுநீதி மன்னர்க்கும்-மநுநீதியுள்ள அரசருக்கும் வீரம் விதரணிகருக்கும்-வீரத்தையுடைய விதரணிகருக்கும்உள்ள, மிக்கஒளி-மேலானஒளியானது, திசைதொறும்போய் விளங்கிடும் என்ன - எல்லாத்திசைகளிலும்செறுன் விளங்கு மென்று, விரகுஉள்ளோர்-அறிவுடையோர்,

உரைசெய்குவார்-சொல்வார்கள், அழல்விழிகொடு-நெருப்புக்கண்ணினல், மதநவேள்தனை - மன்மதனை, எரிசெய்து வென்ற-எரித்து வென்ற, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள். எ-று.

கச்சோதம்-மின்மினிப்பூச்சி. இதனை கத்யோதம்என்பர் ் டநூலார். கிருமி-புழு.

குணங் குற்றமாதல்.

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா முகருக்கு
மாறாத வல் விடமதாம்
மகிழ்நன் றனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோ விடமதாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிக விடமாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீனர்க் கெலாம் விடமதாம்
ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாணி
லேலாத கொடிய விடமா
மேற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னி
லெந்நாளு மதிக விடமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மரையுறையு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர சிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௪௪)

(இ-ள்.) வான்மதியை நோக்கிடின்-ஆகாயத்திலுள்ளசந்திரனைப்பார்த்தால், சோரர்காமுகருக்கு-திருடருக்குங்காமுகருக்கும், மாறாத வல்லிடமது ஆம்-நீங்காத-வலியவிஷமாகும், மகிழ்நன்தனை காணில்-கணவனைக்கண்டால், இதம் இல்லா விபசாரியமாதருக்கு - நன்மையில்லாதவிபசார மங்கையர்க்கு, விடமதுஆம்-விஷமாகும், மேன்மைதரும் நல்சுவை பதார்த்தமும்-மேன்மையைக் கொடுக்கிற நற்சுவையுள்ள பதார்த்தங்களும், சுரரோகம்மிக்கபேர்க்கு-சுரவியாதி மிகுந்தபேர்களுக்கு, அதிகவிடம்ஆம்-அதிகவிஷமாகும், வித்தியாதிபர்தமை கண்டபோது-வித்தையிற் சிறந்தவர்களைக கண்டகாலத்தில், அதிலோப வீணர்க்கு எல்லாம்-அதிக லோபகுணமுள்ள வீணர்களுக்குஎல்லாம், விடமது ஆம்-விஷமாம், ஈனம்மிகு-இழிவிற்சிறந்த, புன்கவிவல்லோர்க்கு-அற்பமாகிய கவிவாணருக்கு, அதிக சபை காணில்-மேலான சபையைக்கண்டால், ஏலாதகொடிய விடம்ஆம்-ஏற்கவொண்ணுத கொடிய விஷமாகும், ஏற்றம் இல்லாத படுபாவிகட்கு-உயர்வில்லாத படுபாவிகளுக்கு, அறம்என்னில்-தருமமென்றுல், எந்நாளும் அதிக விடம்ஆம்-எக்காலத்தும் அதிகவிஷமாகும், ஆனதவயோகியர்கள்-உண்டான தவத்தை யுடைய யோகியர்களுடைய, இதயதாமரை உறையும்-இருதயமாகிய தாமரைமலரில்வாழ்கின்ற, அண்ணலே-பெரியோனே, அருமை மதவேள். எ-று.

வான்மதி என்பதனை வால்மதி யெனப் பிரித்து வெண்மையாகிய சந்திரன் எனினும்பொருந்தும். வித்தியாதிபர்-வித்வான்கள்.

உயர்வன்றித்தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமான மாகிலு மவமான மாகிலும்
மேன்மையோர் செய்யி லழகாம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யி லழகாம்
தருதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளைச்செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சரீரத்தி லோரூன மானமெத்து வாகிலுஞ்
சமர்செய்து வரி லழகதாம்
நகமேவு மதகரியி லேறினுந் தவறினு
நாளுமது வோரழக தாம்
நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன் றென்பர்காண்
அகமாயு நற்றவர்க் கருள்புரியு மையனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சரு)

(இ-ள்.) வெகுமாநம் ஆகிலும் அவமாநம் ஆகிலும்-வெகுமாநத்தையாயினும் அவமாநத்தையாயினும், மேன்மையோர்செய்யில்-மேன்மையுடையோர் செய்தால், அழகுஆம் - அழகாகும், விரகமே ஆகிலும் சரசமேஆகிலும்-விரகமேயாயினும்-சரசமே யாயினும், விழைமங்கை செய்யின்-விருப்பமுள்ள பெண்செய்தால், அழகுஆம்-அழகாகும், வெகுதர்மங்களைச்செய்து அநேகதர்மங்களைச்செய்து, தரு

தாழ்வுவாழ்வுசாரில்-தகுதியாகிய தாழ்வுவாழ்வுகள் உண்டானால், பேரழகதாம்-பேரழகாகும், சீரத்தில்-உடம்பில், ஓர்ஊனம் மானம்ஏது ஆகிலும்-ஒருஊநமாநங்கள் எதுவாயினும், சமர்செய்துவரின்-போர் செய்து உண்டானல், அழகதாம் - அழகாகும், நகம்மேவு மதகரியில்-மலைபோன்ற மதயானைமேல், ஏறினும் தவறினும்-ஏறினாலும் தவறிவிழுந்தாலும், அது-அது, நாளும்-எந்நாளும், ஓர் அழகதாம்-ஒப்பற்ற அழகாகும், நாய் மீதில் ஏறினும் வீழினும்-நாயின்மேல் ஏறினாலும் தவறிவிழுந்தாலும், கண்டபேர்-பார்த்தபேர்கள், நகைசெய்து-சிரித்து, அழகு அன்று என்பர்-அழகல்லவென்றுசொல்வார்கள், அகம்மாயும்-அகங்காரங்கெட்ட, நல்தவர்க்கு-நல்ல தவமுடையோர்க்கு, அருள்புரியும் ஐயனே-அருள்செய்கிற இறைவனே, ஆதியே-முதல்வனே, அருமைமதவேள். எ-று.

விழைதல்-விரும்புதல். தாழ்வுவாழ்வு-வறுமைசெல்வம். ஊநமாநம்-காயம் (வெட்டுக்காயம் குத்துக்காயம்). நகம்-மலை. மேவு உவமவுருபு. அகமாம் என்பதை அகம்ஆயும் எனப்பிரித்து, மனத்தால் தியானிக்கிற எனப்பொருள்கூறினு மமையும்.

நல்வினை செய்தோர்

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
றான மிளையா துதவினோன்
றந்தைசொன் மறாதவன் முன்னவற் கானவன்
றுய்ப்பழி துடைத்த நெடியோன்

வருபிதிர்க் குதவினேன் றெய்வமே துணையென்று
மைந்தன் மனைவியை வதைத்தோன்
யாறான தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகின் மகிமை பெற்றேன்
கருதரிய சிபியரிச் சந்திரன் மாபலி
• கணிச்சியோன் சுமித்திரை சுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனெடு
கானவன் பிரகலாதன்
அரியவல் விபீஷண னெனுமகா புருடரா
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சசு).

(இ-ள்.) சரண்என காத்தவன்-அடைக்கலமென்ற மாத்திரத்தில் காத்தவனும், மெய்யினால வென்றவன்-சத்தியத்தால் வென்றவனும், இளையாது தானம் உதவினேன்-இளைக்காமல் தானங்கொடுத்தவனும், தந்தைசொல் மறாதவன்-தந்தையின்சொல்லைமறுக்காதவனும், முன்னவற்கானவன்-தமையனுக் கானவனும், தாய்பழிதுடைத்த நெடியோன்-தாய்பழியை நீக்கின பெரியோனும், வருபிதிர்க்கு உதவினேன்-வருகின்றபிதிரர்களுக்குஉதவினவனும், தெய்வமே துணையென்று-தெய்வமே துணையென்று நம்பி, மைந்தன் மனைவியை வதைத்தோன் - புதல்வனையும் மனையாளையும் வதைத்தவனும், மாறு ஆன தந்தையை தமையனை பிழை கண்டு மாய்த்து உலகில் மகிமை பெற்றேன் - மாறுபட்ட

தந்தையையும் தமையனையும் அவர்களுடைய குற்றத்தைக்கண்டு அவர்களைக் கொன்று உலகில் பெருமை யடைந்தவனும் (ஆகியஇவர்கள்யாரெனின்), (முறையே), கருது அரியசிபி-நினைத்தற்கரியசிபிச்சக்ரவர்த்தி, அரிச்சந்திரன்-அரிச்சந்திரன், மாபலி-மஹாபலி, கனிச்சியோன்-பரசுராமன், சுமித்திரைசுதன்-இலக்குமணன், கருடன்-கருடன், பகீரதனுடன்-பகீரதனுடனே, சிறுத் தொண்டனொடு-சிறுத்தொண்டனோடு, கானவன் - வேடன், பிரகலாதன்-பிரகலாதன், அரியவல் விபீஷணன்-அரிதாகிய வலியவிபீஷணன், என்னும் - என்று சொல்லப்படுகிற, மகாபுருடர் ஆம்-மஹா புருஷராவர், அத்தனே-இறைவனே, அருமை மதவேள். எ-று.

தீவினை செய்தோர்.

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை
வைதுதன் றலை போயினோன்
மற்றொருவர் தாரத்தி லிச்சைவைத் துடலெலா
மாறாத வடுவாயி னோன்
தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்து மாய்ந்தோன்
றக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினற்
றந்தி வடிவா யலைந்தோன்
மாயனைச் சபையதனி னிந்தனைசெய் தொளிகொணவ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநகுட னொடுதக்க னயிராவ தன்குருடன்
மகன்வழுதி சிசு பாலனும்

ஆயுமறி வாளரொடு தேவர்பணி தாளனே
யவனிபுகழருமை மதவே
னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சஎ)

(இ-ள்.)வாய் இகழ்வுபேசி மிகுவாழ்வு இழந்தோன்-வாயி னல்நிந்தைசொல்லி மிகுந்தவாழ்வையிழந்தவனும், சிவனை வைகுதன் தலைபோயினோன்-சிவனைத் திட்டித் தன் சிரசை யிழந்தவனும், மற்றொருவர் தாரத்தில் இச்சைவைத்து உடல் எல்லாம் மாறுதவடு ஆயினோன் - வேறொருவர்மனைவி மேல் விருப்பம் வைத்து உடம்பெல்லாம் வடுப்பெற்றவனும், தாயத்தினோர்க்கு உள்ள பங்கை கொடாமலே சம்பத்து இழந்து மாய்ந்தோன்,தாயத்தார்க்குரித்தாயுள்ள பாகத்தைக்கொடாமல் தன்செல்வத்தையிழந்து தானும் மடியப்பெற்றவனும் தக்கபெரியோர்தமை வணங்கா மதத்தினால் தந்திவடிவாய் அலைந்தோன் - தகுதியாகிய பெரியோர்களை வணங்காத மதத்தினால்யானையுருப்பெற்று அலைந்தவனும், மாயனை சபையதனில் நிந்தனைசெய்து ஒளிகொள் நவமணிமுடி துணிந்து மாய்ந்து மாய்ந்தோன்-மாயவனைச் சபையில்நிந்தித்து ஒளியைக்கொண்ட நவரத்நகிரீடத்தை யிழந்து மடிந்தவனும் (ஆகிய இவர்கள்யாரெனின் முறையே), வருநகுடனொடு-வருகின்ற நகுடனுடனே, தக்கன்-தக்ஷன், அயிராவதன் - இந்திரன், குருடன்மகன்-துரியோதநன், வழுதி - பாண்டியன், சிசுபாலன் ஆம் - சிசுபாலன் என்பவர்களாவர், ஆயும் அறிவாளரொடு - ஆராய்கின்ற

அறிவினராகிய ஞானியருடனே, தேவர்பணிதாளனே - தேவரும்வணங்குகின்ற திருவடியை யுடையவனே, அவனிபுகழ்-உலகத்தாரால் புகழப்படுகிற, அருமைமதவேள்.

நன்னகர்.

வாவிபல கூபமுட னாறருகு சேர்வதாய்
மலைகாத வழியி லுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச்செந்நெல்
வயல்கள் வாய்க்கால்க ளுளதாய்
காவிகம லங்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கண் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ள தாய்நல்ல
காவல னிருக்கை யுளதாய்த்
தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்கவுள தாய்ச் சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மே கிடைத்தால்
ஆவலொ டிருந்திடுவ தேசொர்க்க வாசமென்
றறையலா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சஅ)

(இ-ள்.) வாவிபலகூபமுடன்-பலவாவி கூபங்களுடனே, ஆறுஅருகுசேர்வதாய்-நதியும் அருகே பொருந்தி யிருப்பதாய், மலைகாதவழியில் உளதுஆய்-மலைகாததூரத்திலுள்ள

தாகி, வாழை கமுகொடு தெங்கு பயிர் ஆவதாய்-வாழை கமுகுகளோடு தெங்கும் பயிராவதாகி, செந்நெல் வயல்கள் வாய்க்கால்கள் உளதாய்-செந்நெல்வயல்களும் வாய்க்கால்களும் உள்ளதாகி, காவிகமலம் குவளைசேர் ஏரிஉள்ளதாய்-செவ்வல்லி தாமரைகருங்குவளை என்பவைகள்பொருந்திய ஏரியையுடையதாகி, கனவர்த்தகர்கள்-பெரியவியாபாரிகளும்,மறைவலோர்-வேதியரும்,காண் அரிய-காணுதற்கு அரிதாகிய, பலகுடிகள்-பலவகைக்குடிகளும், நிறைவுள்ளதாய்-நிறைவுள்ளதாகி, நல்லகாவலன் இருக்கைவுளது ஆய்-நல்லஅரசன் இருப்பிடமுள்ளதாகி, தேவர் ஆலயம்தேவாலயங்கள்,ஆடல்பாடல்-ஆடல்பாடல்கள், அணிமாளிகை-அழகியமாளிகைகள், சிறக்க உள்ளதாய்-மிகவுள்ளதாகி, சற்சநர்சேரும் இடம்ஆகும்-சற்சநர்கள்சேர்கின்றஇடமாகிற, ஓர் ஊர் கிடைத்து ஒரு ஊர் வாய்த்து, அதில்-அவ்வூரிலே அதிக சீவநமும் கிடைத்தால்-அதிகமான சீவநங்களும் கிடைத்தால்,(அவ்விடத்தில்)ஆவலொடு,விருப்பத்தோடு, இருந்திடுவதே, இருந்துவிடுவதே, சொர்க்க வாசம் என்று அறையலாம் - சொர்க்கலோக வாசமென்று சொல்லலாம், அருமைமதவேள். எ-று.

தீநகர்.

ஈனசாதிகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்லில்லி னுக்குமுளதா
யிணைமுலை திறந்துதந் தலைவிரித்திடுமாத
ரெங்கு நடமாட்ட முளதாய்க்

கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக்
காய்ச்ச றப்பாத விடமாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்பதாய்
மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டான தாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதினு மரு நரகிலே
ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௬)

(இ-ள்.) ஈனசாதிகள் குடியிருப்பதாய்-ஈனசாதிகள்குடியிருப்பதாகி, முள்வேலி-முள்வேலியானது, இல்இல்லினுக்கும், உளதாய்-வீட்டு விட்டுக்கும் உள்ளதாகி, இணைமுலை திறந்து-இரண்டு முலைகளையும் திறந்துகொண்டு, தம்தலை விரித்திடும்மாதர்-தமதுதலையை விரித்திடுகிற மாதர்கள் எங்கும்-எவ்விடத்தும், நடமாட்டம் உள்ளதாய்-நடமாட்டமுள்ளதாகி, கானம் ஒருபக்கமாய் - காடொருபக்கமாகி, மலை ஓரமாய் - மலையோரமாகி, முறைக்காய்ச்சல் தப்பாத இடமாய்-முறைக்காய்ச்சல் தவறாத இடமாகி, கள்ளர் பயமாய் - திருடர் பயமுள்ளதாய், நெடியகயிறு இட்டு இறைக்கின்ற - நெடுங்கயிறுகட்டி யிறைத்தற்குரிய, கல் கேணிநீர் உண்பதாய - கற்கிணற்று நீரைக் குடிப்பதாகி,

மானம் இல்லா-மானமற்ற, கொடிய-கொடுமையுள்ள, துற்சனர்தமக்கு ஏற்ற - துற்சனர்களுக்குத் தகுதியாகிய, மணியம் ஒன்று உண்டானதாய்-மணிய மொன்றுள்ளதாகி, மாநிலத்து பெரிய நிலவுலகத்தில், ஓர்தவம் இருந்து - ஒருஇடமிருந்து, அதனில்-அந்தஇடத்தில், வெகுவாழ்வுவாழ்வதிலும்-வெகு வாழ்வு வாழ்வதைப்பார்க்கிலும், அரு நரகிலே-சகித்தற்கரிய நரகத்திலே, ஆனநெடுநாள் கிடந்து அமிழ்தலே சுகம் ஆகும் - உண்டாகிய நெடுநாள் கிடந்து அமிழ்வதே இன்பமாகும், அமலனே - பரிசுத்தனே, அருமைமதவேள். எ-று

முழுக்குநாள்.

வருமாதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிகு மழகு போகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கார
வாரந் தனக் கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குய ரறிவுபோந்
தேடியபொருட்சேத மாம்வெள்ளி சனியெண்ணெய்ச்
செல்வமுண் டாயு ளுண்டாம்
பரிகார முளதாதி வாரந் தனக்கலரி
பீளமனுக் கான செழுமண்
பச்சறுகு பொன்னவற் காமெருத் தூளொளிப்
பார்க்கவற் காகு மெனவே

அரிதா வறிந்தபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவே
ளானுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருo)

(இ-ள்.) வரும்ஆதிவாரம் தொடர்ந்து வருகிற ஆதிவார த்தில், தலைக்கு எண்ணெய் ஆகாது-தலைக்கு எண்ணெயி ட்டுக் கொள்ளுதல் ஆகாது, (ஏனெனின்) வடிவம்மிகும் அழகுபோகும்-வடிவிலுள்ள மிகுந்த அழகழியும்(ஆதலா ல்), வளர்திங்களுக்கு - வளர்கின்ற சோமவாரத்தில் எண் ணெயிட்டுக்கொண்டால், அதிகபொருள்சேரும்-அதிகமா ன திரவியம் சேரும், அங்காரவாரம் தனக்கு-மங்களவார த்தில் எண்ணெயிட்டுக் கொண்டால், இடர்வரும்-துன்ப முண்டாகும், திருமேவு புதனுக்கு-அழகுபொருந்திய புத வாரத்தில் எண்ணெயிட்டுக்கொண்டால், மிகுபுத்தி வந்தி டும் - மிகுந்த புத்திவரும், செம்பொனுக்கு - குருவாரத் தில் எண்ணெயிட்டுக்கொண்டால், உயர் அறிவுபோம்-உ யர்ந்த அறிவு நீங்கும், வெள்ளி - சுக்ரவாரத்தில் எண்ணெ யிட்டுக்கொண்டால், தேடிய பொருட்சேதம்ஆம்-சம்பாதி த்த பொருளுக்கு நஷ்டமுண்டாகும், சனி-சனிவாரத்தில், எண்ணெயிட்டுக்கொண்டால், செல்வம்உண்டு - செல்வமு ண்டாகும், ஆயுள்உண்டாம் - ஆயுளும் உண்டாகும், (இந் தவாரங்களுள் ஆகாதென்று விலக்கப்பட்ட நாட்களுக்கு) பரிகாரம் உளது-பரிகாரமுண்டு, (என்னெனின்) ஆதிவார ம்தனக்கு-ஆதிவாரத்துக்கு, அலரி-அலரியும், பௌமனுக்

கு-மங்களவாரத்துக்கு, ஆனசெழுமண்-உண்டாகியசெழு மண்ணும், பொன்னவற்கு-குருவாரத்துக்கு, பச்சறுகு-பச்சை அறுகம்புல்லும், ஆம்-ஆகும், ஒளிபார்க்கவற்கு - ஒளியையுடைய சுக்ரவாரத்துக்கு, எருத்தூள், ஆகும் என ஆகுமென்று, அரிதா-அருமையாக, அறிந்தபேர்-அறிந்த பேர்கள், (விதித்த நாட்களில்) எண்ணெய் தேய்த்துமுழுக்காடுவார்-எண்ணெயிட்டுக்கொண்டு தலைமுழுகுவார்கள், அருமைமதவேள்.எ-று.

மருத்துவன்.

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீர லக்ஷண மறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமது வாகட மறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடு பஸ்மம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குண வாகடம்
சோதித்து மூலிகா விதங்கண் டுங்கண்டு
தூய தைலம் லேகியஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக மின்னயந்
தோற்றியே யமிர்த கரமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையனு யுயர்வேத
னுகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே (௫௧)

(இ-ள்.) தாதுபரீக்ஷை - தாதுபரீக்ஷையும், வரு-வருகிற, காலதேசத்தொடு-காலதேசங்களோடு, சரீரலக்ஷணம் அறிந்து-சரீரலக்ஷணமுந்தெரிந்துகொண்டு, தந்வந்த்ரி கும்பமுனி தேரர் கொங்கணர் சித்தர் தமது வாகடம் அறிந்து-தந்வந்த்ரி அகஸ்தியர் தேரையர் கொங்கணர் மற்றைய சித்தர்கள் ஆகிய இவர்களால் சொல்லப்பட்ட வாகடங்களை ஆராய்ந்தறிந்துகொண்டு,பேதம்(ஒன்றற்கொன்று) வேறுபாடுடைய, பெருகுளிகை சித்திவகை - பெரிய குளிகை சுத்திவகையும், மாத்திரை பிரயோகமோடு-மாத்திரைப்பிரயோகத்துடனே, பஸ்மம்-பஸ்மமும், பிழையாது-தவறாமல், மண்டூரசெந்தூர லட்சணம்-மண்டூர செந்தூரலட்சணமும், பேர்பெறும் குணவாகடம்-பேர்பெற்ற குணவாகடமும், சோதித்து-சோதனைபண்ணி, மூலிகாவித நிகண்டும் கண்டு-மூலிகை வகைகளைச் சொல்லுகிற நிகண்டையும் பார்த்து, தூயதைலம் லேகியம் சொல்பக்குவம் கண்டு-பரிசுத்தமான தைலம் லேகியம் இவற்றிற்கு நூல்களாற் சொல்லப்படுகிற பக்குவத்தையும் அறிந்து, வரு-உண்டாகிற, ரோகநிர்ணயம் தோற்றி-ரோகத்தின் நிச்சயம் இதுவென்று கண்டுகொண்டு, அமிர்தகரனும் அமிர்தக்கையனும், ஆதிப்பெருங்கேள்வி உடையன்-முதன்மையாகிய பெரியகேள்வியையுடையவன், ஆயுர்வேதன், ஆகும்-ஆயுர்வேதமுடையவனவன், எமதருமைமதவேள்.எ-று.

தாதுபரீக்ஷை - நாடிசோதனை, வாகடம் - வைத்தியநூல். பிரயோகம்-செலுத்தல். அமிர்தகரன் - ஹஸ்தவிசேஷமுள்ளவன், கைவாசியுள்ளவன்.

உண்மை யுணர்குறி.

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ் கிரகணஞ் சாட்சியாஞ்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூய மாத்திரை சாட்சியாம்
ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமை யேசாட்சி யா
மரிதேவ தேவனென் பதையறிய முதனூ
லரிச்சுவடி யேசாட்சி யாம்
நாதனேமாதேவ னென்பதற் கோருத்ர
நமக சமகஞ் சாட்சியாம்
நாயேனை ரட்சிப்ப துன்பார மரியய
னுளுமர்ச் சனைசெய் சரணத்
தாதிநா யகமிக்க வேதநா யகனென
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருஉ)

(இ-ள்.) சோதிடம்-சோதிடநூல், பொய்யாது-பொய்க்காது, மெய்என்பது-உண்மையென்பதற்கு, அறிவுஅரிய-அறிவதற்கருமையாகிய, சூழ்-வளைந்த, கிரகணம்-கிரகணங்களே, சாக்ஷிஆம்-சாக்ஷியாகும், சொல்பெரிய வாகடம்-புகழாற்சிறந்த வைத்தியநூல், நிசம்என்கை-உண்மையென்பதற்கு, பேதிதரு-பேதியையுண்டாக்கிற, தூயமாத்தி

ரை-பரிசுத்தமான மாத்திரையே, சாக்ஷிஆம்-சாக்ஷியாகும், ஆதியில்-முற்காலத்தில், செய்ததவம் உண்டு இல்லை என்பதற்கு-செய்தவவம்உண்டு இல்லையென்றறிவதற்கு, ஆள் அடிமையே சாக்ஷிஆம்-ஆளடிமைகளது உண்மை இன்மைகளே சாக்ஷியாகும், அரி-திருமால், தேவதேவன்என்பதை அறிய - தேவர்களுக்குத் தேவன் என்பதை யறிவதற்கு, முதனூல்-முதல்நூலாகிய, அரிச்சுவடியே சாக்ஷிஆம்-அரிச்சுவடியே சாக்ஷியாகும், மாதேவன்-சிவபெருமான், நாதன் என்பதற்கு - தலைவன் என்பதற்கு, ருத்ரநமகசமகம் சாக்ஷிஆம்-ருத்ரநமகசமகமே சாக்ஷியாகும், நாயேனை ரக்ஷிப்பது உன்பாரம் - நாயினேனைக் காப்பாற்றுவது உன்கடமையாகும், அரிஅயன்-திருமாலும் பிரமனும், நாளும்-நாள்தோறும், அர்ச்சனைசெய்-அர்ச்சிக்கிற, சரணத்து-திருவடியையுடைய, ஆதிநாயக-ஆதிநாயகனே,மிக்க-மேலான, வேதநாயகன்ஆன - வேதநாயகனாகிய, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள். எ-று.

கிரகணம்- சூரியசந்திர கிரகணங்கள். சூரியசந்திரர்கள் ராகுகேது என்னும் பாம்புகளால் வளைக்கப் படுதல் பற்றி 'சூழ்கிரகணம்' என்றார். பேதி-விரேசநம் முதலில் ஓதப்படுதலால் அரிச்சுவடி முதனூல் எனப்பட்டது ருத்ரநமகசமகம்-ருத்ரமூர்த்தியைக் குறித்து வேதத்திற் சொல்லப் படுவதாகிய ஒருமந்திர விசேடம். அரியயன் - உம்மைத்தொகை. வேதநாயகன் - வேதமுதல்வன்.

பிறவிக்குண மாறாமை.

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணை விளைவுங்
கருதரிய வடிவமும் போகமுந் த்யாகமுங்
கனரூப முள மங்கையும்
அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுத மொழியு
மானவிச் செயலெலாஞ் சனனவா சனையினு
லாகிவரு மன்றி நிலமேல்
நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதி
னண்ணுமோ ரஸ்தாளி தன்
னற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருங)

(இ-ள்.) கலங்காதசித்தமும்-கலங்காதமனமும், செல்வமும்-பொருளும், ஞானமும்-ஞானமும், கல்வியும்-வித்தையும், கருணை விளைவும்-அருளுண்டாதலும், கருது அரிய வடிவமும் - நினைத்தற் கரிதாகிய உருவமும், போகமும்-போக சுகமும், த்யாகமும்-கொடையும், கனரூபம் உள்ள மங்கையும் பேரழகுள்ள மனைவியும், அலங்காத வீரமும்-சலிக்காத வீரத்தன்மையும், பொறுமையும் - பொறுமை

யும், தந்திரமும் - உபாயமும், ஆண்மையும்-ஆண் தன்மையும், அமுதமொழியும்-அமிர்தவாக்கும், ஆன-ஆகிய, இச்செயல் எல்லாம்-செய்கைகளெல்லாம், சநநவாசனையினுல்-பிறவிவாசனையால், ஆகிவரும் அன்றி-உண்டாய் வருவதேயன்றி, நிலமேல்-பூமியின்மேல், நலம் சேரும் ஒருவரைபார்த்து-(மேற்சொல்லப்பட்ட) நன்மைகள் அமையப்பெற்ற ஒருவரைப்பார்த்து, அவைபெறக்கருதின்-அவற்றைப்பெற நினைத்தால், நண்ணுமோ-(அவை) உண்டாகுமோ, ரஸ்தாளி தன் நல்சுவை-ரஸ்தாளி வாழைப்பழத்தினது நல்ல சுவையானது, தனக்குவர-தனக்குண்டாகும்படி, வேம்பு-வேப்பம்பழமானது, நெடிதுநாள் தவம்செய்யினும் - நெடுங்காலம் தவம்செய்தாலும், வாராது-உண்டாகமாட்டாது, அலங்காரமாக-அழகாக, மலர்-மலர்ந்த, கொன்றை மாலிகை சூடும்-கொன்றைமலர்மாலையைத்தரித்த, அண்ணலே-பெரியோனே, அருமை மதவேள். எ-று.

ஞானம்-பேரறிவு. வடிவம் - அழகுமாம். போகம்-பெண்போகம். ரூபம் இவ்விடத்து உருவையும் அழகையும் உணர்த்திற்று. அமுத மொழி-செவிக்கினிய செஞ்சொல். ரஸ்தாளி-வாழையிற் சிறந்தசாதிவாழை. நல்சுவை-இன்சுவை, ரஸ்தாளி, வேப்பு, கொன்றை என்பன முதலாகுபெயர்கள். காண்-முன்னிலையசை யிடைச்சொல்.

ஊழ்வலி.

கடலள வுரைத்திடுவ ரரிபிரம ருருவமுங்
　　காணும் படிக் குரைசெய்வார்
காசினியி னளவுபிர மாணமது சொல்லுவார்
　　காயத்தி னிலைமை யறிவார்

விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமற் றடுத் தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னுந் தாவுவார்
தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாரது
துடைக்கவொரு நான் முகற்கும்
அடைவல வெனத்தெரிந் தளவில்பல நூல்சொல்லு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (நிச)

(இ-ள்) கடல்அளவு உரைத்திடுவர்-கடலினளவைக்கவனித்து இவ்வளவென்று சொல்லுவார்கள், அரிபிரமர் உருவமும்-அரிபிரமர்களுடைய உருவத்தையும், காணும் படிக்கு உரை செய்வார்-காணும் படியாகச் சொல்லுவார்கள், காசினியின் நிலவுலகத்தின், அளவு பிரமாணம் சொல்லுவார்-அளவு பிரமாணங்களையும் சொல்லுவார்கள், காயத்தின் நிலைமைஅறிவார் - உடம்பினது நிலைமையையும் அறிவார்கள், விடல் அரிய சீவநிலை காட்டுவார் - நீங்குவதரிய உயிர் நிலையையும் காட்டுவார்கள், மூச்சையும் விடாமல் தடுதது அடக்கி-மூச்சையும் விடாமல்தடைசெய்தடக்கி, மேன்மேலும் மேலுமேலும், யோகசாதனை விளைப்பார்-யோகாப்பியாசம் செய்வார்கள், விண்மீதினும்-ஆகாயத்தின்மே

லும், எட்டி தாவுவார்-எட்டிக்குதிப்பார்கள், தொடல் அரிய-பற்றுதற்கரிய, பிரமநிலைகாட்டுவார் - பிரமநிலையையும் காட்டுவார்கள், எண்வகைத்தொகையான சித்தி அறிவார்-அஷ்டமா சித்திகளையும் அறிவார்கள், சூழ்வினை வரும்பொழுது-விளைந்து கொள்வதற்குரிய வினைவருங்காலத்தில், சிக்கி உழலுவார்-அதில்அகப்பட்டு அலைவார்கள், அது துடைக்க-அந்தவினையைவெல்ல, ஒருநான்முகற்கும்-ஒரு நான்கு முகங்களையுடையவனாகிய பிரமனுக்கும், அடைவு அல்ல எனதெரிந்து - வசமல்லவென்றுதேர்ந்து, அளவு இல் - அளவில்லாத, பலநூல் சொல்லும்-அநேகநூல்கள் சொல்லாநின்றன, அண்ணலே - பெரியோனே, அருமை மதவேள். எ-று.

காயத்தினிலைமையறிதலாவது இந்தவுடம்புஇத்தனை நாள் நிற்கும் என்று யோகாப்பியாசம் நாடித் தாநம்முதலியவற்றாலறிதல். மூச்சு - சுவாசம். எண்வகைத் தொகையான சித்தியாவன-அணிமா, மகிமா, கரிமா, வகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், விசித்வம்என்பன. இவற்றின்விரிவெல்லாம் யோகநூல்களிற் காண்க.

ஒப்புயர் வில்லாமை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்

சோதிதரு மாதவற் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிக சுசியுந்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்த கலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுறக
ரன்ன தானந் தனிலுமோ
ரதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா
மாராய்ந்த பேருரை செய்வார்
ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
மண்ணாலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (ருரு)

(இ-ள்.) வேதியர்க்கு-அந்தணரைப்பார்க்கினும், அதிகம் ஆம்சாதியும்-சிறந்ததாகியசாதியும், கனகம்-பொன்மயமாகிய, மகமேருவுக்கு-மகமேருமலையைப்பார்க்கினும், அதிக மலையும் - சிறந்த மலையும், வெள்திரை கொழித்துவரு-வெண்மையாகிய அலைகளை வீசிக்கொண்டுவருகிற, கங்காநதிக்கு - கங்கையாற்றைப் பார்க்கினுர், அதிகம்-சிறந்ததாய்-மேதினியில் ஓடும் நதியும்-பூமியின்மேல் ஓடுகிறயாறும்-சோதிதரும் ஆதவற்கு-ஒளியைத்தருகிற சூரியனைப்பார்க்கினும், அதிகம்ஆம் காந்தியும்-சிறந்ததாகிய ஒளியும், சூழ்கனற்கு-வளைந்துகொள்ளுதற்குரிய அக்கினியைப்பார்க்கினும், அதிகசுசியும்-சிறந்தசுத்தியும், தூயதாய் தந்தைக்கு-பரிசுத்தமாகிய தாய்தந்தையரைப்பார்க்கினும், மேலான தெய்

வமும்-சிறந்த தெய்வமும், சுருதிக்கு, வேதத்தைப்பார்க்கி லும், உயர்ந்த கலையும்-சிறந்தநூலும், ஆதிவடமொழிதன க்கு-(எல்லாப்பாஷைகட்கும்) முதலாகியவடமொழியைப் பார்க்கிலும், அதிகம்ஆம் மொழியும் - சிறந்த பாஷையும், நகர்-உண்ணப்படுகிற, அன்னதானம்தன்னிலும்-அந்நதா நத்தைப்பார்க்கிலும், அதிக தானமும் - சிறந்த தானமும், இல்லையென்று-இல்லையென்று பலநூல்எல்லாம் ஆராய்ந்த பேர்-பலவாகிய நூல்கள் முழுவதும் ஆராய்ந்தபேர்கள், உரைசெய்வார்-சொல்லுவார்கள், ஆதவன்-சூரியன், பிர மன்-பிரமன்-பிரமதேவன் விண்ணவர்-தேவர்கள், முனிவர்-முனிவர்கள், (ஆகிய எல்லாரும்) பரவவரும் அண்ணலே-வழிபடும்படி எழுந்தருளி யிருக்கிற பெரியோனே, அருமை மதவேள். எ-று.

வேதியர்-வேதத்தில் வல்லவர். ஆதவம்-வெயில், அதனையுடையவனாதலால் சூரியனை ஆதவன் என்றார். சுருதி-கேட்கப்படுவது, வேதம் எழுதிப்படிக்காமல் கேட்டறியப் படுதலால் சுருதியெனப்பட்டது.

வீண்செயல்.

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லா டனக்கஞ்சி யோடிமறை
விரகிலோ ரவரின் வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேற்கவி சொல்வார்

நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்கு மெளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணுய்த்
திரியுமெளி சேனை யாட்கொண்
டாட்டஞ் செயும்பதாம் புயமுடியின் மேல்வைத்த
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫சு)

(இ-ள்.) வேட்டகம் சேர்வோரும் வீணரே-கலியாணஞ் செய்துகொண்ட வீட்டில் சேர்ந்து வாழ்வோரும்வீணரே யாவர், வீண்உரை விரும்புவோர் - பயனற்ற சொற்களைச் சொல்ல விரும்புகிறவர்கள், அவரின்வீணர்-அவரைப்பார்க்கினும் வீணரேயாவர், விருந்துகண்டு-விருந்ினரைக்கண்டு, இல்லாள்தனக்கு அஞ்சி-மனையாளுக்குபயந்து, ஒடிமறை-ஓடிமறைகின்ற, விரகு இலோர்-அறிவில்லாதவர், அவரின்வீணர்-அவரைப்பார்க்கினும் வீணரேயாவர், நாட்டம்தரும்கல்வி இல்லோரும் வீணரே(யாவரும்) நாடுதற்குரிய வித்தையில்லாதவரும் வீணரேயாவர், நாடி - விரும்பி, அவர்மேல் கவிசொல்வார்-அவர்மீது கவிபாடுவோர், நானிலந்தனில்வீணர்-இவ்வுலகத்தில்வீணரேயாவர், நரரைசுமக்கும் எளியோர்-மனிதரைச்சுமக்கின்றஎளியவர், தேட்டறிவிலாத பெருவீணரே-தேடுதற்குரிய அறிவில்லாத பெ

ரிய வீணரேயாவர், அவரினும்-அவரைப்பார்க்கினும், சேர் ஒரு வரத்தும்இன்றி-உண்டான ஒருவருமாநமுமில்லாமல், செலவுசெய்வோர் - செலவுசெய்வோர், அதிகவீணர்ஆம்-மிகுந்த வீணராவர், வீணனுய்த்திரியும்-வீணனுகத்திரிகிற, எளியேனை-எளியவனுகிய என்னை, ஆட்கொண்டு-அடிமை கொண்டு, ஆட்டம்செயும்-நடநஞ்செய்கிற, பதஅம்புயம்-திருவடித்தாமரை மலரை, முடியின்மேல்வைத்த-(எனது) சிரசின்மேல் வைத்த, அமலனே - பரிசுத்தனே, அருமை மதவேள். எ-று.

வேட்டஅகம் வேட்டகம் எனநிலைமொழியீறு தொகுத்தலாயிற்று. அவரின் என்பதில் இன்ஐந்தனுருபு உறழ்பொருளில் வந்தது. வீணர்-பயனில்லாதவர். நரரைச்சுமக்கு மெளியோர் என்றது பல்லக்குச் சுமப்பவரை. தேட்டம்-தேடுதல், சம்பாதித்தல் தேட்ட அறிவு தேட்டறிவு என நிலைமொழியீறுதொகுத்தலாயிற்று.

உதவியின்றிக் கெடுவன.

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையு
 மூதர ணிலாத நகரும்
மொழியும்வெகு நாயகஞ் சேரிடமும் வருமெதுகை
 மோனையில் லாத கவியும்
காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
 கரையிலா நிறை யேரியுங்
கசடறக் கற்காத வித்தையு முபதேச
 காரண னிலாத தெளிவும்

கோப்புள விநோதமுடை யோரருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட்டமுங்
குளிர்புன னிறைந்துவரு மாற்றோர மதினின்று
கோடுயர்ந் தோங்கு தருவும்
ஆப்பதில் லாதவே ரிவையெலா மொன்றாகு
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫எ)

(இ-ள்.) மூப்பு ஒருவர் இல்லாத-முதுமைப்பருவமுள்ள ஒருவரில்லாத, குமரி குடிவாழ்க்கையும்-இளம்பெண்ணின் குடிவாழ்வும், மூது அரண் இல்லாதநகரும்-பழமையாகிய அரசனில்லாத நகரமும், மொழியும்-சொல்லப்பட்ட, வெகுநாயகம்சேர் இடமும் - அநேகரது அதிகாரம் சேர்ந்த இடமும், வரும்-வருகின்ற, எதுகை மோனை இல்லாத கவியும் - எதுகைமோனைகளில்லாதபாட்டும், காப்பு அமைவு இல்லாதது ஓர்நந்தவநமும்-காவலமைந்திராத ஒருநந்தவநமும், நல்லகரை இல்லாநிறை ஏரியும்-நல்லகரையில்லாத (நீர்) நிறைந்த ஏரியும், கசடுஅறகற்காத வித்தையும்-கசடு நீங்கக்கல்லாதகல்வியும், உபதேசகாரணன் இல்லாததெளிவும்-உபதேசத்துக்காரணனாகிய குருவில்லாத மனத்தெளிவும், கோப்புஉள்ள விநோதமுடையோர் - உல்லாசமுள்ள அகசியக்காரர், அருகுபுகழாத-அருகேயிருந்து புகழாத, கோதையர் செய்கூத்தாட்டமும்-பெண்கள் செய்யுங் கூத்தாட்டும், குளிர்புனல் நிறைந்து வரும்-குளிர்ந்த நீர் நிறை

ந்து வருகிற, ஆற்ளுேர மதினின்று-ஆற்ளுேரத்திலிருந்து கோடு உயர்ந்து ஒங்குதருவும் - கிளைகளுயர்ந்தோங்குகிற மரமும், ஆப்புஇல்லாததேர்-ஆப்பில்லாத தேரும்(ஆகிய), இவைஎல்லாம்-இவையாவும், ஒன்றுஆகும்-ஒன்றேயாகும், ஐயனே-இறைவனே, அருமைமதவேள் எ-று.

குமரி-சிறுபெண் அரண்-காவல். அது மதிலரண், நீரரண், காட்டரண், மலையரண்என நான்குவகைப்படும் நந்தவநம்-பூந்தோட்டம். கசடு-குற்றம். வித்தையில் குற்றமாவது ஐயமும் திரிபும். ஐயம்-சந்தேகம். திரிபு-ஒன்றையொன்ருக அறிதல். கோப்புள விநோத முடையோரருகு புகழாதஎன்ற அடைமொழியால், கோதையர் கழைக்கூத்தியர் என்றறிக. ஆப்பு-சிறுசுள்ளாணி. ஆப்பது என்பதில் அதுபகுதிப்பொருள் விகுதி. ஒன்ருகும் என்றது சமமாகும் என்றபடி, அதாவது பயனற்றனவாகும் என்க.

இவையேபோது மெனல்.

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
 பூவலஞ் செயவேண்டு மோ
பொல்லாத கொலைகள விலாதநன் னெறியுளோர்
 புகழறஞ் செயவேண்டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
 நல்லறஞ் செயவேண்டு மோ
நன்மனே சுத்தியுண் டானபேர் மேலுமொரு
 நதி படிந்திட வேண்டுமோ

மெய்யாநி னடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பி வழிபட வேண்டுமோ
வேதியர் தமைப்பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டி யர்ச்சனை செய்வரோ
ஐயா றுடன்கமலை சோணு சலந்தில்லை
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசுதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருஅ)

(இ-ள்) பொய்யாத வாய்மையும் - பொய்க்காத சொல்லையும், சீலமும் - நல்லொழுக்கத்தையும், சார்ந்துளோர்-அடைந்திருப்பவர்கள், பூவலம் செயவேண்டுமோ, பூப்பிரதக்ஷிணம் செய்ய வேண்டுமோ, பொல்லாத கொலை களவு இல்லாத-பொல்லாத கொலைத் தொழிலும் திருட்டுத்தொழிலும் இல்லாத, நல்நெறி உளோர்-நல்வழியுள்ளவர்கள், புகழ் அறம் செயவேண்டுமோ-புகழப்பட்ட தருமம் செய்யவேண்டுமோ, நையாத காமத்தைலோபத்தைவிட்டபேர்-அழியாத காமத்தையும் லோபத்தையும் விட்டபேர்கள், நல்அறம் செயவேண்டுமோ-நல்ல தருமம் செய்ய வேண்டுமோ, நல்மனோசுத்தி உண்டானபேர்-நல்லமனச்சுத்தியுள்ளபேர்கள், மேலும் ஒருநதி படிந்திடவேண்டுமோ-வேறும் ஒருபுண்ணியநதியிற்போய் முழுகவேண்டுமோ, மெய்ஆம் நின் அடியரைபரவுவோர் - உண்மையாகிய உன் அடியார்களை வழிபடுவோர், உன்பதம் விரும்பி வழிபட வேண்டுமோ, உன்திருவடியைவிரும்பி வழிபடவேண்டுமோ, வேதியர்தமை பூசைபண்ணுவோர் - வேதியரைப்பூசிப்பவர்கள்,

வானவரை - தேவர்களை, வேண்டி அர்ச்சனை செய்வரோ-விரும்பி அர்ச்சனை செய்வார்களோ, ஐயாறுடன்-திருவையாறோடு, கமலை-திருவாரூர், சோணசலம்-திருவண்ணமலை, தில்லை-திருத்தில்லை (என்பவற்றுக்கு); அதிபனே-இறைவனே, அருமை மதவேள். எ-று.

சீலம்-ஒழுக்கம், அது பொய்யாத வாய்மையோடுசேர்ந்து வந்தமையால் நல்லொழுக்கத்துக்காயிற்று. பூ-பூமி. படிதல்-முழுகுதல். நெருப்புமலை யாதலால் சோணசலம் எனப்பட்டது. சோணம்-அசலம் எனப்பிரித்துக்கொள்க. சோணம்-செவப்பு, அசலம்-மலை. கமலாலயம் என்பது கமலையென்றாயிற்று.

அரிய ராவோர்.

பதின்மரி லொருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்க மிடுவோர்
இத்தனருமை யறிகுவோர் பதின யிரத்தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா
லீகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
யிலட்சத்தி லேயொருவ ராம்
துதிபெருக வருமூன்று காலமு மறிந்தமெய்த்
தூயர் கோடியி லொருவராந்
தொல்லுலகு புகழ்காசி யேகாம் பரங்கைலை
சூழு மவிநாசி பேரூர்

அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளி சுர தேவனே. (ருகூ)

(இ-ள்.) சபைமெச்சிடப் பேசுவோர்-சபையார் மெச்சும் படிபேசுகிறவர்கள், பதின்மரில் ஒருவர்-பத்துப்பேரிலொருவர், பாடுவோர்-பாடுகிறவர்கள், நூற்றில் ஒருவர்-நூறுபேரிலொருவர், விதிதப்பாது பாடிப்ரசங்கமிடுவோர்-விதி தவறாமற்பாடிப்பிரசங்கம் செய்கிறவர்கள், பார்மீதில்-உலகத்தின்மேல், ஆயிரத்து ஒருவர்-ஆயிரம் பேரிலொருவர், இதன் அருமை அறிகுவோர்-இந்தப் பிரசங்கத்தின் அருமையை அறிவார்கள், பதினாயிரத்து ஒருவர்-பதினாயிரம் பேரிலொருவர், இதை அறிந்து-இந்த அருமையை அறிந்து இதயமகிழ்வால்-மனமகிழ்ச்சியால், ஈகின்றபேர்-கொடுக்கிறபேர்கள், புவியிலே-பூமியிலே, அருமையாகவே-அருமையாகவே, இலட்சத்திலே ஒருவர் ஆம்-லக்ஷத்தில் ஒருவர், துதிபெருகவரும்-தோத்திரம் பெருகவந்த, முக்காலமும் அறிந்த - முக்காலத்தையுமறிந்த, மெய்தூயர்-உண்மையாகிய பரிசுத்தர், கோடியில் ஒருவர் ஆம்-கோடிபேரில் ஒருவராவர், தொல்உலகுபுகழ்-பழமையாகிய வுலகம் புகழ்கின்ற, காசி-காசி,ஏகாம்பரம்-திருவேகம்பம், கைலை-கயிலாயம், சூழும் அவிநாசி-மதித்தற்குரிய அவிநாசி, பேரூர்-திருப்பேரூர், அதிகம்உள்ள வெண்காடு - மேன்மையுள்ள திருவெண்காடு, செங்காடு-திருச்செங்காடு, காளத்தி-திரு

க்காளத்தி, (இந்தத்திருப்பதிகளில்எழுந்தருளியிருக்கிற) அத்தனே-கடவுளே, அருமை மதவேள். எ-று.

சபையென்றது சபையிலுள்ளோரை, முக்காலம்-இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

கற்பு மேம்பாடு.

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
  றனக்கிணங் காத நிறையா
டழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
  சாபங் கொடுத்த செயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறிய வேதனது
  மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் றடிந்தவடி
  வாண்மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
  நாயகனை மேவு தயவா
ணனிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
  நளினமலர் மேல் வைதேகி
அன்னமென வருசந்திர மதிதுரோ பதையென்ப
  ராதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
  ரறப்பளீ சுர தேவனே. (௬0)

(இ-ள்.) தன்கணவன் உருவமாய்-தன்கணவனுருக்கொண்டு, தற்புணரவந்தோன்தனக்கு-தன்னைப்புணரவந்தவனு

க்கு, இணங்காத நிறையாள் - இசையாத நிறையுடையவரும், தழல்கதிர் எழாமலும்-சூரியன் உதிக்காமலும், பொழுது விடியாமலும் - பொழுது விடியாமலு மிருக்கும்படி, சாபம்கொடுத்த செயலாள் - சாபங்கொடுத்த செய்கையையுடையவளும், மன்னிவளர் அழல்மூழ்கி-நிலைபெற்று வளரா நின்ற நெருப்பில்முழுகி, உலகு அறிய - உலகமுழுதும் அறியும்படி, தனது மகிழ்நனை சேர்ந்த பரிவாள் - தன்கணவனைக்கூடின அன்புடையவளும், மைந்தனை சுடவந்த-புதல்வனைச் சுடவந்த, இறைவன் - தன்கணவன், தடிந்த-வெட்டின, வடிவாள்-கூர்மையாகியவாளானது, மாலைஆன-மாலையாகப்பெற்ற, கனிவாள் - அன்புடையவளும், நல்நதி படிந்திடுவது என்ன-நல்ல நதியில் முழுகுவதுபோல, ஆர் அழல் மூழ்கி - (சகித்தற்கு) அரிதாகிய நெருப்பில் முழுகி, நாயகனை மேவுதயவாள்-தன் நாயகனைச் சேர்ந்த தயையுள்ளவளும், யாரெனின், (முறையே) நால் நிலம் புகழ்சாலி - உலகத்தாரால் புகழப்படுகிற அருந்ததியும், பேர்பெறு நளாயினி-பெர்பெற்றநளாயினியும், நளிமலர்மேல் வைதேகி-தாமரைமலர்மேல் வாழ்கின்ற சீதேவியும், அன்னம்என வருசந்த்ரமதி-அன்னம்போல நடக்கிற சந்திரமதியும், துரோபதை-துரோபதையும் ஆவர், என்பர்-என்று சொல்லுவர் (பெரியோர்), ஆதியே-முதல்வனே, அருமை மதவேள். எ-று.

கோடி யுடுக்குநாள்.

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
 கட்டலாம் புதிய சீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
 கடிது நனைவுற் றெழிதரும்

குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதி வாரந் தனக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதி லணிந்தால்
மடைபடா தமழுகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கி ரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரணமுண்டாம்
அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சுக)

(இ-ள்) கறைபடாது ஒளிசேரும்-ஒரு கறையும் படாமல் ஒளியைப் பொருந்து மாதலால், ஆதிவாரம் தன்னில்-ஆதிவாரத்தில் புதியசீலை கட்டலாம் - புதியஆடை யுடுக்கலாம், பலகாலும் - பலதரமும், மழையினில்-மழையினல், கடிது நனைவுற்று ஒழிதரும் - மிகுதியாக நனைந்து நைந்தொழியும் ஆதலால், கலைமதிக்கு ஆகாது-கலைகளையுடைய சோமவாரத்தில் ஆடையுடுக்கலாகாது, அரியகுருதிவாரம் தனக்கு - அருமையாகிய மங்கள வாரத்தில் உடுத்தால், குறைபடாத இடர்வரும் வீரியம்போம்-குறையாத துன்பங்கள் உண்டாகும் வீரியமும் போகும், புந்தியில் புதவாரத்தில் உடுத்தால், கொஞ்சநாளில் கிழியும் வெற்றிபோம்-அற்பகாலத்தில் கிழியும் வெற்றியும் போகும், குருவாரம

தில் அணிந்தால்-குருவாரத்தில் உடுத்தால், மறைபடாத அழகுஉண்டு - மறையாத அழகுண்டாகும், மேன்மேலும் நல்ஆடைவரும் - மேலுமேலும் நல்ல ஆடைகள் வரும், இனிய சுக்கிரற்கோ-இனிதாகியசுக்கிரவாரத்தில்உடுத்தாலோ, வாழ்வுஉண்டு-ஆயுள்உண்டு, திருஉண்டு-செல்வமும் உண்டு, பொல்லாத சனியற்கு-பொல்லாத சனிவாரத்தில் உடுத்தால், வாழ்வுபோம் மரணம் உண்டாம்-ஆயுள்குறைந்து மரணமும் உண்டாகும், அறைகின்ற-சொல்லப்பட்ட, வேதாகமத்தின் வடிவாய் விளங்கு-வேதாகம ரூபமாகவிளங்குகிற, அமலனே-பரிசுத்தனே, அருமைமதவேள். எ-று.

கறை-கறுப்பு, புள்ளி, மதி-சந்திரன் (சோமன்), குருதி-செவ்வாய். புந்தி-புதன். குரு-வியாழன். சுக்கிரன்-வெள்ளி.

சகுனம்.

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
  சூகரங் கீரிகலைமான்
றய்யபா ரத்வாச மட்டையெலி புன்கூகை
  சொற்பெருக மருவு மாந்தை
வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
  விளங்குமிரு நா வுடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
  வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
  லொருதுடை யிருத்தல் பற்ற

லொருதும்ம லாணையிட லிருமல்போ கேலென்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௨)

(இ-ள்.) சொல் அரிய கருடன்-சொல்லுதற்கரிய கருடனும், வாநரம்-குரங்கும், அரவம்-பாம்பும், மூஞ்சூறு-மூஞ்சூறும், சூகரம்-பன்றியும், கீரி-கீரிப்பிள்ளையும், கலைமான்-கலைமானும், துய்ய பாரத்வாசம்-பரிசுத்தமாகிய-கரிக்குருவியும், அட்டை - அட்டையும், எலி-எலியும் புல்கூகை-அற்பமாகிய கூகையும், சொல்பெருக மருவும் ஆந்தை-சொற்களை மிகுதியாய்ப் பொருந்திய ஆந்தையும், வெல் அரியகாடி - வெல்லுதற்கரிதாகிய காடியும், காட்டுஆன்-காட்டுப்பசுவும், பூனை-பூனையும், புலி-புலியும், மேல்-மேலும், விளங்கும்-காணப்படுகிற, இருநா உடும்பு-இரண்டு நாககளையுடைய உடும்பும், மிக-அதிகமாக, உரைசெய்-சொல்லப்பட்ட, இவையெலாம்-இவையாவும், வலம் இருந்து-வலப்பக்கத்திலிருந்து, இடம்ஆகில்-இடப்பக்கத்திற்போனால், வெற்றிஉண்டு - செயமுண்டு, அதிகநலம்ஆம்-அதிக நன்மையும் உண்டாகும், ஒல்லையின்-விரைவாக, வழிப்பயணம் ஆகுமவர் - வழிப்பயணப் படுவோருடைய, தலைதாக்கல்-தலைபடுதலும், ஒரு தொடை இருத்தல்-ஒருதொடைமேல் நிற்றலும், பற்றல்-பிடித்தலும், ஒருதும்மல். ஒற்றைத்தும்மலும், ஆணையிடல்-ஆணையிடுதலும், இருமல்-இரு

முதலும், போகேல்என்ன-போகாதேயென்று, உபசுருதி சொல்ல-உபசுருதிசொல்லலுமாகிய, இவையெலாம்-இவை யாவும், அல்லல்தரும்-துன்பத்தையுண்டாக்கும் ஆதலால், நல்ல அல்ல என்பர்-நற்சகுனங்களல்ல என்றுசொல்லுவர் (பெரியோர்), முதியோர் பரவும் அமலனே - ஞானிகளால் வழிபடப்படுகிற பரிசுத்தனே, அருமை மதவேள் எ-று.

ஒல்லை-விரைவு, தலைதாக்கல்-வாசற்படியில் தலைதட்டுதல் உபசுருதிசொல்-வேறொருவனுக்கு மற்றொருவன் சொல்லுஞ் சொல். முதியோர்-அறிவினால் முதிர்ந்தவர்.

இதுவுமது.

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவி சிச்சிலி யோந்திதான்
நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்
வரியுழுவை முயலிவை யனைத்தும்வல மாயிடின்
வழிப்பயண மாகை நன்று
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல் வாவா வென்றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கேக நன்மை யென்பார்

அருணகிர ணோதயத் தருணபா னுவையனைய
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுங)

(இ-ள்.) நரி - நரியும், மயில்-மயிலும், பசுங்கிள்ளை-பச்சைநிறமுள்ள கிளியும், கோழி - கோழியும், கொக்கொடு காக்கை-கொக்குடனே காகமும், நாவி-நாவியும், சிச்சிலியும், ஓந்தி-ஓந்தியும், நரையான்-நரையானும், கடுத்தவாய் செம்போத்துடன்மேதி-உரத்த சத்தத்தையுடைய செம்போத்துடனே எருமையும், நாடு அரிய சுரபி காண்பதற்கரிய பசுவும், மறையோர்-வேதியரும், வரிஉழுவை-கோடுகளையுடைய புலியும், முயல்-முயலும் ஆகிய, இவைஅனைத்தும்-இவைகளெல்லாம், வலமாயிட-வலத்திற்போக, வழிப்பயணம்ஆகை-வழிப்பயணமாதல், நன்றுஆம்-நன்மையாகும், மற்றும்-மேலும், இவையன்றியே-இவையல்லாமலே, குதிரை அநுமானித்தல் - குதிரை கனைத்தலும், வாய்ச்சொல் வாவாஎன்றிடல்-(ஒருவரையொருவர்) வாய்ச்சொல்லாலே வாவாவென்று அழைத்தலும், தருவளை தொனித்திடுதல் - தருகிற சங்குதொனித்தலும், கொம்பு கிடுமுடிமுரசு தப்பட்டை ஒலி கொம்பு கிடுமுடி முரசு தப்பட்டை ஆகிய இவற்றின்ஒலியும், வல்வேட்டு-வலியவெடியும், தனி-ஒப்பற்ற, மணிமுழக்கு எழுதல்-மணியோசை யுண்டாதலும் ஆகிய, இவையெலாம்-இவையாவும், ஊர்வழிதனக்கு ஏக - ஊர்ப்பிரயாணம் போவதற்கு, நன்மை என்பார்-நன்மையென்று சொல்லுவர்பெரியோர், அருணகிரணம்-செவ

ந்த கிரணங்களையுடைய, உதயதருண பாநவை அனைய-உதயகாலத்துச் சூரியனை நிகர்த்த, அண்ணாமலை-பெரியோனே, அருமை மதவேள். எ-று.

நாவி-கஸ்தூரி மிருகம், புழுகுப்பூனையெனினுமாம். சிச்சிலி-பொன் வாய்ப்பறவை. நரையான்-செங்கானுரை, மீன்குத்திப்பறவை யெனினுமாம். வேட்டு-துப்பாக்கி பீரங்கிகளின் வெடி.

இதுவுமது.

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசி சன்னாசி தட்டான்
றனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விரகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைல மிவைகள்
காணவெதிர் வரவொணு நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்கு ரூதகமங்கை
நாளும் வண்ணா னழுக்கும்
நகைபெருகு பாற்கலச மணிவளையன் மலரிவைக
ளாடியெதிர் வர நன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பரசவரியு
மண்ணாமலை யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுச)

(இ-ள்.) தலைவிரித்து எதிர்வருதல்-தலைமயிர் விரித்துக் கொண்டு எதிரில்வருதலும், ஒற்றை பிராமணன்-ஒருபிராமணனும், தவசி-தவசியும், சன்னாசி-சந்நியாசியும், தட்டான்-தட்டானும், தனம் இல்லா வெறுமார்பி-முலையில்லாத வெறுமார்பையுடையவளும், மூக்கறை-மூக்கறையும், புல்-புல்லும், விறகுதலை - விறகுதலையரும், தட்டைமுடி - சப்பைத்தலையும், மொட்டைத்தலை-மொட்டைத்தலையும், கலைன்கழி மடந்தையர்-விதவைப்பெண்கள், குசக்கலம்-குசக்கலங்களும், செக்கான்-வாணியனும், கதித்ததில தைலம்-பெருத்த எள்ளெண்ணெயும்ஆகிய, இவைகள்-இப்பொருள்கள், காண-பார்க்கும்படி, எதிர்வரவொணா-எதிரில் வரவொண்ணாதனவாகும், நீர்க்குடம்-நீர்க்குடமும், எருக்கூடை-எரு முட்டைக் கூடையும், கனி-பழமும், புலால்-மாமிசமும், உபயமறையோர்-இரட்டைப்பார்ப்பாரும், நலம் மிகு சுமங்கலை-நன்மை மிகுந்த சுமங்கலையும, கிழங்கு-கிழங்கும், சூதகமங்கை-சூதகமாதும், நாளும்-நாள்தோறும், வண்ணான் அழுக்கும் வண்ணான்அழுக்கும், நசைபெருகு-ஆசைபெருகுதற் குரிய, பால்கலசம-பாற்குடமும், மணி-இரத்திநமும், வளையல்-வளையலும், மலர்-பூவும் ஆகிய, இவைகள்-இந்தப்பொருள்கள், நாடி எதிர்வர-தேடியெதிரில்வரின், நன்மைஆம்-நன்மை யுண்டாகும், அலைகொண்ட-அலைகளையுடைய, கங்கை-கங்காநதியை, புனை-தரித்த, வேணியாய்-சடையை யுடையவனே, பரசு அணியும் அண்ணலே-மழுவைத் தரித்த பெரியோனே, அருமை மதவேள். எ-று.

மூக்கறை-மூக்கற்றவன். கலன்-மங்கலியம். குசக்கலம்-குசவன் செய்த மட்கலங்கள். உபயம்-இரண்டு சூதகமங்கை-பூப்புள்ளபெண் பாற்கலசம்-பாற்குடுவை,குடுவை-கலயம். அணிவளையல் எனப்பிரித்து தரிக்கின்ற வளையல் என்றுரைத்தலும் பொருந்தும்.

உணவில் விலக்கு.

கைவிலைக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு
செவ்வையில் சிறுகிரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலா வகஞ்
சீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக் காய்
எவ்வமில் சிவன்கோயி னிர்மாலி யங்கிரண
மிலகுசுட ரில்லாதவூ
ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரை செயும்
ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்று
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுரு)

(இ-ள்.) கைவிலைக்கு கொள்ளும்பால்-கைவிலைக்கு வாங்குகிறபாலும், அசப்பால்-ஆட்டுப்பாலும், வரும்கார் ஆகற

ந்தவெண்பால்-வருகிற காராவினின்றும் கறக்கப்பட்டவெள்ளியபாலும், காளான்-காளானும், முருங்கை-முருங்கையும், சுரை-சுரையும், கொம்மடி-கொம்மடியும், பழஞ் சோறு - பழையசோறும, காந்திக்கரித்தசோறு-தீந்துகரிந்துபோனசோறும், செவ்வை இல்சிறுக்கீரை-நற்குணமில்லாதசிறுகிரையும், பீர்க்கு-பீர்க்கங்காயும், அத்தி-அத்திக்காயும், வெள் உப்பு-வெள்ளையுப்பும், தென்னைவெல்லம்-தென்னவெல்லமும், மலாவகம் - பிண்ணாக்கும், சீர் இல்லா வெள் உள்ளி - சிறப்பில்லாத வெள்ளுள்ளியும், ஈருள்ளி-ஈருள்ளியும், இங்குவொடு-பெருங்காயத்துடனே, சிறப்புஇல்-மேன்மையில்லாத, வெள்கத்தரிக்காய் - வெள்ளைக்கத்தரிக்காயும், எவ்வம்இல்-குறைவில்லாத, சிவன்கோயில் நிர்மாலியம்-சிவன்கோயில் நிர்மாலியமும், கிரணம் இலகுசுடர் இல்லாதவூன்-கிரணம் விளங்குகிற சூரியனில்லாத உணவும் (ஆகிய), இவையெலாம்-இவையாவும், சீலம்உடையோர்களுக்கு-நல்லொழுக்கமுடையோர்களுக்கு, ஆகாஎன-ஆகாதனவென்று, பழையநூல் உரைசெயும்-வேதங்கள் சொல்லாநிற்கும், ஐவகைபுலன் வென்ற - ஐவகையாகிய புலன்களை வென்ற, முநிவர் விண்ணவர் போற்றும் - அமலனே-முநிவர்களும் தேவர்களும் வணங்குகின்ற பரிசுத்தனே, அருமை மதவேள். எ-று.

அசம்-ஆடு, காரா-காராம்பசு, கொம்மடி-நீர்மொலாம்பழம், வெள்ளுள்ளி-பூண்டு, ஈருள்ளி-வெங்காயம். வேதம் எல்லா நூல்களுக்கும் மூதனூலாதலால்அதனைப்'பழை

யநால் என்றார். ஐவகைப்புலன்-ஐம்புலன்கள். அவை சத்த பரிச ரூப ரச கந்தங்கள்.

நற்பொருளிற் குற்றம்

[illegible]

ண்ணிறமான சந்திரனுக்கு, உள்ளுள் களங்கமே-நடுவினு ள்ள களங்கமே, பெரிதுஆன தோஷம்ஆகும்-பெரிதாகிய குற்றமாகும், சீர்ஆம்தபோதநர்க்கு-சிறப்பையுடையமுனி வர்களுக்கு, ஒருவர்மேல் வருகின்ற சீற்றமே-ஒருவர்மேல் உண்டாகிற கோவமே, தோஷம்ஆகும்-குற்றமாகும், தீது இல் - குற்றமில்லாத, முடிமன்னவர்-கிரீடாதிபதிகளாகிய அரசர்கள். விசாரித்திடாது-விசாரணை செய்யாமல், ஒன் று செய்யின் - ஒரு காரியத்தைச்செய்தால், (அது) அவர் மேல் தோஷம்ஆம்-அவர்மேல் குற்றமாகும், தாராளமா மி கதந்துளோர்-(முன்னே பலயாசகர்களுக்கு) மிகுதியாகத் தாராளமாகப் பொருள் கொடுத்தவர்கள், தாராமைதான்-(பின்னே அப்படி) கொடாமையே, இரப்போர் தோஷம் ஆம்-அந்த யாசகரதுகுற்றமேயாகும், சாரம் உள்ள-இனி ய சுவையுள்ள, நல்கருப்பஞ்சாறு - நல்லகரும்பின்சாறு, கைப்பது-(சிலர்க்கு) கசப்பது, அவர் தாலம்செய்தோஷம் ஆகும்-அவர்களுடைய நாக்கள் செய்த குற்றமே யாகும், ஆராயும்-ஆராய்கின்ற, ஒருநால் மறைக்கும் ஒருநான்கு வேதங்களுக்கும், எட்டாது-எட்டாமல், ஒளிரும் -(அவற் றுக்கு மேற்பட்டு) விளங்குகிற, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள். எ-று.

பேர்-பிரசித்தி. வெண்மதியென்பதில்வெண்மைஇயற் கையடை. தபோதநர்-தவத்தையேசெல்வமாகவுடையவர்.

மனேகோல்வதற்கு மாதம்

சித்திரைத் திடங்கடனின் மனேகோல மனேபுகச்
செல்வமுண் டதினு நலமே

சேரும்வை காசிக்கு மேனு ளரன்புரந்
தீயிட்ட தானி யாகா
வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணி சுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்பசிக் கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்கு பாரதம் வந்தநா
ளுயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்ட தாகா
தத்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாகுமோ வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுஎ)

(இ-ள்) சித்திரைத்திங்கள்தனில்-சித்திரை மாதத்தில், மனைகோலமனைபுக மனைகோலினும் மனைபுகினும், செல்வம் உண்டு-செல்வமுண்டாகும், வைகாசிக்கு-வைகாசிமாசமாயின், அதினும் நலமேசேரும்-அதினும் மிகுந்தநன்மையே உண்டாகும்,மேல்நாள்-முன்னாளில், அரன்-சிவபெருமான் புரம், முப்புரத்தில், தீயிட்டது - நெருப்பிட்டதாதலால், ஆனி ஆகா-ஆனிமாதமாகாது, வெற்றிகொள்-வெற்றியைக் கொண்ட-இராகவன்தேவி-ஸ்ரீராமரதுதேவியாகிய சீதை, சிறைசேர்கடகம்-சிறையடைந்த ஆடிமாதம், வீறு அல்ல-

சிறந்ததல்ல, ஆவணி-ஆவணிமாசமாயின், சுகம்மேவிடும் - சுகம் உண்டாகும், இரணியன்மாண்டது-இரணியன் மடிந்ததாகையால், கன்னி ஆகாது-புரட்டாசிமாசம் ஆகாது, ஐப்பசிக்கு மேன்மையுண்டு ஐப்பசியிலானால்மேன்மையுண்டாகும், கார்த்திகைக்கு உத்தமம்-கார்த்திகைமாசமானால் உத்தமம், ஓங்குபாரதம்வந்தநாள்-உயர்ந்த பாரதயுத்தமுண்டானகாலமாதலால், மார்கழியில் ஆகாது-மார்கழிமாசத்திலாகாது, மகரத்தில் உயர்வு உண்டு-தைமாசத்திலானால் உயர்ச்சியுண்டாகும், மாசிமாதத்தில்-மாசிமாதத்திலானால், உம்பர்கோன் விடம் உண்டது ஆகாது-தேவர்பெருமானே நீ விஷமுண்டதனால் அது ஆகாது, அத்த - அத்தனே, நீ மாரனை எரித்த-நீ மன்மதனையெரித்த, பங்குனிதானும் ஆகுமோ-பங்குனிமாசமும் ஆகுமோ(ஆகாது), அருமைமதவேள், எ-று.

மனைகோலுதல்-வீடுகட்ட அடிப்படைபோடுதல். மனைபுகுதல்-கிருகப்பிரவேசம்செய்தல். மாசிமாசத்தில்சிவபெருமான் விஷமுண்டநாளையே சிவராத்திரியென்பர்.

விருந்துவாரம்.

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணு துண்ணெணுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந் தருந்தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிக பகையாம்

புகாவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போன வுறவுந் திரும்பும்
மங்குனிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்த நாளென் றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சஅ)

(இ-ள்.) செங்கதிர்க்கு-ஞாயிற்றுக் கிழமையில் விருந்து செய்தாலும்உண்டாலும், உறவுபோம்-நட்புக்கெடும் ஆதலால்,ஒருவர்-ஒருவரும்,விருந்துசெய்யொணுது உண்ணெணுது விருந்துசெய்தலுமாகாது உண்ணுதலுமாகாது, திங்களுக்கு உறவுஉண்டு நன்மைஆம்-திங்கட்கிழமையிலாயின் நட்புண்டாகும் நன்மையு முண்டாகும், பகைவரும்-பகையுண்டாமாதலால், செவ்வாய்விருந்து அருந்தார்-செவ்வாய்க்கிழமையில்விருந்துண்ண மாட்டார்கள், பொங்குபுதன்-விளங்குகிறபுதன்கிழமையானுல், நன்மை உண்டு உறவுஆம்-நன்மையுண்டு உறவுமுண்டாகும், பொன்னவற்கு-வியாழக்கிழமையில், விருந்துஉண்ண-விருந்து உண்டால், அதிக பகைஆம்-மிக்க பகையுண்டாகும், புகாவற்கு ஆகிலோ-வெள்ளிக்கிழமையி லானுல், நெடுநாள் விரோதமாய் போன உறவும்திரும்பும்-நெடுநாள் பகையாய்ப்போன உற

வும் திரும்பிவந்துசேரும், மந்துல்நிகர் சனிவாரம் நல்லது ஆம் - (நீல) மேகத்தைநிகர்த்த சனிக்கிழமை நல்லதாகும் இதனினும்-இதைப்பார்க்கினும், மனம் ஒத்திருந்த இடமே-மனமிசைந்திருந்த இடமே, வாலாயமாய்போய்-தாராளமாகப்போய், விருந்து உண்ண விருந்து உதவ-விருந்துண்பதற்கும் விருந்துசெய்வதற்கும், வாய்த்த நாள் என்று அறியலாம்-பொருத்தமான நாளென்றறிந்துகொள்ளலாம் அங்கையில்விளங்கிவளர்-அகங்கையில் விளங்கிவளராநின்ற, துங்கம் மழுவாளனே-உயர்ந்த மழுவாயுதத்தை யுடையவனே, அண்ணலே-பெரியோனே, அருமை மதவேள்.

செங்கதிர்-சூரியன் (செவந்தகிரணங்களை யுடையவன்) பொன்னவன்-வியாழன் (குரு). புகரவன் - சுக்கிரன். சனி கறுப்பாதலால் மந்துனிகர் சனியென்றார். துங்கம்-பரிசுத்தம் எனினுமாம்

பூப்பு வாரம்.

அருக்கனுக் கதிரோகி யாவணற் சோமனுக்
கானகற் புடைய ளாவா
ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்லைபைங் குழவி பெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்திஞெடு
சிறுவரைப் பெற் றெடுப்பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவு முண்டா யிருப்பாள்

கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகுவாள்
காரி வாரத்தி லாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரை செய்வார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
யண்ணாலே யருமை மதவே
ளனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுசு)

(இ-ள்.) அருக்கனுக்கு-ஆதிவாரத்தில் புஷ்பவதியானால், அதிரோகிஆவள்-மிகுந்த நோயுள்ளவளாவாள், சோமனுக்கு-சோமவாரத்திலானால், ஆனகற்பு உடையள் ஆவாள்-நன்மையாகிய கற்புள்ளவளாவாள், அங்காரகற்கு வெகுதுக்கி ஆவாள்-மங்களவாரத்திலானால் மிகுந்த துக்கமுள்ளவளாவாள், புந்தி அளவு இல்பலகுழவி பெறுவாள் புதவாரத்திலானால் அளவில்லாதபலபிள்ளைகளைப்பெறுவாள், திருதகு வியாழத்தில்-அழகுபொருந்தியகுருவாரத்திலானால், மிக்க சம்பத்தினோடு - மிக்க பாக்கியத்துடனே, சிறுவரை பெற்றெடுப்பாள் - குழந்தைகளைப் பெற்றெடுப்பாள், சீர் உடைய பார்க்கவற்கு சிறப்புள்ள சுக்கிரவாரத்திலானால், அதிபோகவதியும் ஆம்-அதிகபோகவதியுமாவாள், திருவும் உண்டாயிருப்பாள்-செல்வமுமுண்டாயிருப்பாள், காரிவாரத்தில் ஆகில்-சனிவாரத்திலானால், கருத்து அழிந்து-மனம்கெட்டு, எழில்குன்றி-அழகுகுறைந்து, வறுமைகொண்டு அலைகுவாள்-தரித்திர மடைந்து திரிவாள், (இதுவே) களு

பம் - கலவைச்சந்தநமணிந்த, முலை-ஸ்தனங்களையுடைய, மடமாதர்-இளம் பெண்கள், புட்பவதி ஆம்-புஷ்பவதிகளா கில், வாரகாலபலன் என்று உரைசெய்வார்-வாரகாலபலன் என்றுசொல்லுவர் (பெரியோர்), அருத்தியுடன்-அன்போ டு, எளியேனை ஆட்கொண்ட-எளியனேனை அடிமைகொண் ட, சோதியே-ஒளியே, அண்ணலே - பெரியோனே, அருமைமதவேள், எ-று.

அருக்கன்-சூரியன். சோமன்-சந்திரன். அங்காரகன்-செவ்வாய், புந்தி-புதன். வியாழன்-குரு. பார்க்கவன்-சுக்கிரன். போகவதி-போகத்தில் விருப்பமுள்ளவள். திரு-செல்வம். காரி-சனி. அருத்தி-கருணையெனினுமாம்.

பூப்பி லக்கினம்.

வறுமைதப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாறாது விபசாரி யாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிதினிற் பிறனை யணைவாள்
சிறுமைசெயு மிடிசேர்வண் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில்
செட்டுடைய டுலையெனிற் பிணியான் மெலிந்திடுவ்
டேளினுக் குத் தனுசெனில்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளா
நீண்மகர மான மில்ளா

நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னிலோ
நெடிய பேரறி வுடையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறியி ராசிபல
னதுவென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ0)

(இ-ள்.) மேடத்தில்-மேஷலக்கினத்தில்(புஷ்பவதியானு ல்) வறுமை[தப்பாதுவரும் தரித்திரம்தவறுமலுண்டாகும் இடபத்தில்-ரிஷபலக்நத்திலானல், மாறுது விபசாரிஆம்-இடையருமல்விபசரிப்பவளாவாள், மிதுநம்-மிதுநலக்நத் திலானல், வாழ்வு உண்டு-வாழ்வுண்டாகும், போகம்உண் டாகு-போகமும்உண்டாகும், கடகம்-கடகலக்நத்திலானு ல்,வலிதினில்-வலாத்காரமாக, பிறரை அணைவாள்-அந்நிய ரைச்சேர்வாள்-மிருகேந்திரற்கு எனின்-சிங்க லக்நத்திலா னல், சிறுமைசெய்யும் மிடிசேர்வள்-தாழ்வை யுண்டாக்கு கிறதரித்திரத்தை யடைவாள், கன்னியென்னில்-கந்யாலக் நமென்றால், சீர்பெறுவள்-சிறப்புப்பெறுவாள்,துலைஎனில்-துலாலக்நத்திலானல், செட்டு உடையள்-செட்டுடையவ ளாயிருப்பாள், தேளினுக்கு-விருச்சிகலக்நத்திலானல், பி ணியால் மெலிந்திடுவள்-நோயினல் இளைத்துப்போவாள், தனுசுஎனில்-தநுர் லக்நத்திலானல், நெறிசிதைவள்பூருவ த்து-முன்னே கற்புவழியினின்றும்தவறுவள், (அதுவுமன் றி) அபரநெறி உடையள் ஆம்-பின்னெறியாகிய விபசார

த்தை யுடையவளாவாள், நீள் மகரம்-பெரியமகரலக்நத்தி லென்றுலோ, நெடியபேரறிவு உடையள் ஆம்-மிகுந்த பேரறிவையுடையவளாவாள், அறிவாளர்-விவேகிகள், மடமாதர்தமை-இளம்பெண்களை, அறி - அறிந்துகொள்ளுதற்குரிய, இராசிபலன் இது என்பர்-இராசிபலன் இதுவென்று சொல்லுவர், பெரியோர் அருமைமதவேள், எ-று.

வாழ்வு-உயிர்வாழ்க்கை (ஆயுள்) செல்வம். கடகம் - கற்கடகம். சிங்கம் மிருகங்களுக்கெல்லாம் அரசனுதலால் அதனை மிருகேந்திரன் என்றூர். செட்டு-சிக்கனவு. (பிசுநததனம்)

தீவுங் கடலும்.

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம் யோசனை யிதனையே
நாடொறுஞ் சூழ்வதில வந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கட லதனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீ வம்மிதனின்
மேற்சூழ்த னெய்க் கடலதாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதவறு சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரி யப்பாலு மப்பால்

ஆவலுறு புட்கரத் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எக)

(இ-ள்.) நாவலந்தீவினை - நாவலந்தீவை, சூழ்-வளைந்த, கருங்கடல் அளவு-கருஙகடலின்பிரமாணம், லட்சம் யோசனை-லக்ஷம்யோசனையாகும், இதனை-இதை, நாள்தொறும் சூழ்வறு-எந்நாளும் வளைந்திருப்பது, இலவந்தீவு-இலவந்தீவாகும், அதைச்சூழ்தல்-அதைவளைந்திருப்பது, நல் கழைசாற்றின்கடல் - நல்ல கருப்பஞ்சாற்றுக் கடலாகும், மேவும் இதுசூழ்வது - பொருந்திய இதைச் சூழ்நதிருப்பது, குசத்தீவு குசத்தீவாகும், அதை சூழ்தல் - அதைச் சூழ்ந்திருப்பது, மிகு மதுக்கடல்-மிகுநத கள்ளுக்கடலாகும், அதனையே விழைவொடும் சூழ்தல் - அதைவிருப்பத்தோடு சூழ்ந்திருப்பது, கிரவுஞ்சதீவும்-க்ரௌஞ்ச தீவாகும், இதனின்மேல் சூழ்தல்-இதன்மேற் சூழ்ந்திருப்பது, நெய்க்கடலதுவும்-நெய்க்கடலாகும், பூவில் உலகில், இது சூழ்தல்-இதைச்சூழ்ந்திருப்பது, சாகதீவம் - சாகத்வீபமாகும், இங்கு இதை போர்ப்பது, இங்கிதனைச் சூழ்ந்திருப்பது, திருப்பாற்கடல் - திருப்பாற்கடலாகும், போத அது சூழ்தல்-மிகவும் அதைச் சூழ்ந்திருப்பது, சால்மலி தீவமாம்-சால்மலித்வீபமாகும், அப்பாலும்-அதைச்சூழ்ந் திருப்பதும், தயிர்புணரி-தயிர்க்கடலாகும், அப்பால்-அதற்கப்புறத்திருப்பது, ஆவல் உறுபு புட்கரத்தீவாம்-விரும்

புதற்குரிய புஷ்கரத்வீபமாகும், இதைச்சூழ்வது-இதைச் சூழ்ந்திருப்பது, அரும்புனற்று-அருமையாகிய சுத்தநீர்க் கடலாகும், அருமைமதவேள், எ-று.

நாவலந்தீவு - ஜம்பூத்வீபம். கழை-கரும்பு. மது-கள் புணரி-கடல்.

மேலான பொருள்.

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்க மாஞ்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்க மாம்
பழுதற்ற வதிருப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்க மாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்க மாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகிய
முசிதனோர் மாணிக்க மா
முத்தமகுலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக்க மாம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ௨)

(இ-ள்.) சுழிசுத்தமா யிருந்து-சுழிகள் சுத்தமானவைக ளாயிருக்கப்பெற்று, அதிலும்-அதனோடும், படைக்குஆன

துரகம்-படைவகுப்புக்குரியதாகிய குதிரை, ஓர்மாணிக்கம் ஆம்-ஒரு மாணிக்கமாகும், சூழ்புவிக்கு அரசன்ஆய்-வளை ந்த இவ்வுலகத்துக்கு அரசனாகி, அதிலே-அதிலும், விவே கம் உள்ள-விவேகத்தையுடைய, துரையும் - பிரபுவும், ஓர் மாணிக்கம்ஆம்-ஒருமாணிக்கமாவான், பழுது அற்ற-குற்ற மற்ற, அதிரூபவதியுமாய்-அதிகசௌந்தரிய முடையவளு மாகி, (அதனுடன்) கற்பு உடையபாவை-கற்புள்ளபெண், ஓர்மாணிக்கம்ஆம்-ஒருமாணிக்க மாவாள், பலகலைகள் பல நூல்களையும், கற்று-படித்து, அறி - (அவற்றின் பொருள் களை சந்தேக விபரீதங்க ளில்லாமல்) அறிந்த, அடக்கம் உள்ள-அடக்கத்தையுமுடைய, பாவலன்-வித்துவான், பா ர்க்கில்-பார்க்குமிடத்து, ஓர்மாணிக்கம் ஆம்-ஒருமாணிக்க மாவான், ஒழிவு அற்ற செல்வன் ஆய்-தொலைவில்லாத பெ ருஞ்செல்வத்தையுடையவனாய், அதிலே அதிலும், தியாகி ஆம்-கொடையாளனாகிற. உசிதன்-மேலோன், ஓர் மாணிக் கம்ஆம்-ஒருமாணிக்கமாவான், உத்தமகுலத்து உதித்து - சிறந்த குலத்திற் பிறந்து, அதிலும்-அதிலும், மெய்ஞ்ஞா னம் உடையன் - உண்மைஞானத்தை யுடையவன், ஓர்மா ணிக்கம்ஆம்-ஒருமாணிக்கமாவான், அழிவு அற்ற-அழிவில் லாத, வேதாகமத்தின்-வேதாகமங்களின், முடிவுஆய் விள ங்கும்-முடிவுப்பொருளாய் பிரகாசிக்கிற, அமலனே-பரிசுத் தனே, அருமைமதவேள், எ-று.

சூழ்புவிக்கரசனும் என்பதற்கு தன்னைச் சூழ்ந்திருக் கிற உலகத்தார்க்கரசனாய் என்றுரைத்தலும்பொருந்தும்.

சூழ்புவி-கடலாற் சூழப்பட்டவுலகம் எனினுமாம். பாவை-பிரதிமை போல்வாள். இது உவமையாகுபெயர். பாவலன்-கவிஞன் எனினுமமையும். ஒழிவற்ற என்ற விசேடணத்தால் செல்வம்பெருஞ் செல்வத்துக்காயிற்று.

உண்டி யிலையும் முறையும்.

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணாத வோவரசு
வநசஞ் செழும் பாடலம்
தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண் முருக்குச்
சாருமிசை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணா தால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டன் மெத்தவூ ணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப் பருகிடார்
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
னருமைம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எஈ)

(இ-ள்.) வாழையிலை-வாழை யிலையிலும், புன்னை-புன்னை யிலையிலும், புரசுடன்-புரச இலையோடு, நல்குருக்கத்தி-நல்லகுருக்கத்தி யிலையிலும், மா-மாவிலையிலும், பலா-பலா

விலையினும், தெங்கு-தென்னை யிலையினும், பன்னீர்-பன்னீ ரிலையினும், மாசு இல-குற்றமில்லாத, அமுது உண்ணலாம்-சோறுண்ணலாம், உண்ணுதவோ-உண்ணாத் தகாதனவோ என்றால், அரசு-அரசிலையினும்,வனசம்-தாமரையிலையினும் செழுபாடலம்-செழுமையாகிய பாதிரியிலையினும், தாழை யிலை-தாழையிலையினும், அத்தி-அத்தியிலையினும், ஏரண்டபத்திரம்-ஆமணக்கிலையினும், சாதேவம்-சிறுநாவல் இலையினும், முள் முருக்கு-முள்முருக்கிலைனுயிம், சாரும்இவையன்றி-பொருந்திய இவைகளேயன்றி, வெள்பால்-வெள்ளியபாலுள்ள, எருக்கு-எருக்கிலை, இச்சில் இலைதன்னினும்-இச்சில் இலை என்பவைகளினும், உண்டிடவொண்ணுது - உண்ணக்கூடாது, தாழ்வு இல்லா - குறைவற்ற, சிற்றுண்டி-சிற்றுணவும, நீர் அடிக்கடிபருகல்-நீரை அடிக்கடி குடித்தலும், சாதங்கள் பல அருந்தல்-பலவகையாகிய சோற்றையுண்ணுதலும், சற்று உண்டல்-கொஞ்சமா யுண்ணுதலும், மெத்தவூண்-மிகவுண்ணுதலும் ஆகிய, இவையெல்லாம்-இவையாவும், மெய்ப்பிணிதனக்கு இடம் என-சரீரவியாதிக்கு ஏதுவாமென்று, பருகிடார்-உண்ணார் (அறிவுடையோர்,) ஆழி-கடலானது, புடைசூழ்-சுற்றிலும்வளைந்திருக்கிற, உலகில்-உலகத்தில், வேளாளர் குலதிலகன் ஆகும்-வேளாளரது குலத்துக்குத் திலகம் போல்பவனாகிற, எமதருமைமதவேள், எ-று.

சாதங்கள்பல என்றது சித்திராந்நங்களை, சித்திராந்நங்களாவன. புளியோரை, பொங்கல், சர்க்கரைப் பொங்கல், தத்தியோநம் முதலியன.

கவிஞர் வறுமை.

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேட னென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ண னென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜய னென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சனை
மொழி யரிச்சந்த்ர னென்றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னே
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசு)

(இ-ள்.) எழுதப்படிக்க-எழுதவும் படிக்கவும், வகைதெரியாதமூடனை-வகையறியாத மூடனை, இணையில்லா சேடன் என்றும்-நிகரற்ற ஆதிசேஷனென்றும், ஈவது இல்லாத கனலோபியை-ஈகையில்லாத பெரியலோபியை, சபையதனில்-சபையிலே, இணையில்லாகர்ணன் என்றும்-நிகரற்றகர்ணமஹாராஜனென்றும், அழகு அற்ற-அழகில்லாத, வெகுகோரரூபத்தை உடையோனை-மிகுந்த கோரவடிவத்தை

யுடையவனே, அதிவடிவம்மாரன் என்றும்-மிக்க அழகிய ரூபத்தையுடைய மன்மதனென்றும், ஆயுதம் எடுக்கவும் தெரியாதபேடிதனே-ஆயுதத்தையெடுக்கவும் அறியாதபேடியை, ஆண்மைமிகுவிஜயன் என்றும்-ஆண்மையில் மிகுந்த அருச்சுனன் என்றும், முழுவதும்பொய்சொல்லி-முழுதும் பொய்பேசி, அலேகின்றவஞ்சகனே-அலேகின்றவனுகிய வஞ்சனேயுள்ளவனே, மொழிஅரிச்சந்த்ரன் என்றும்-சொல்லப்பட்ட அரிச்சந்திரன் என்றும், மூது உலகில்-பழமையாகிய வுலகத்தில், இவ்வண்ணம்சொல்லி-இந்தப்பிரகாரமாகச்சொல்லி, கவிராஜர்-கவிராயர்கள், முறையின்றிஏற்பது என்னே-முறையில்லாமல் ஏற்பது என்னகாரணத்தினுலோ, (அறிந்திலேம்,) அழல் என-நெருப்புப்போல, உதித்துவரு - தோன்றிவந்த, விடம்உண்ட - நஞ்சையுண்ட, கண்டனே - நீலகண்டனே, அமலனே-பரிசுத்தனே அருமைமதவேள், எ-று.

ஆதிசேஷன் கல்வியிற்சிறந்தவன் என்பதும், கர்ணன் ஈகையிற் சிறந்தவன் என்பதும், மன்மதன் அழகிற்சிறந்தவன் என்பதும், அருச்சுனன் ஆண்மையிற் சிறந்தவன் என்பதும், இச் செய்யுளால் இனிது விளக்கப்பட்டன, பேடி-அலி.

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
    தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினெடு நாற்கவிதை நாற்பொரு
    டெரிந்துரைசெய் திறமை யுடனே

விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
 விரிவிலக் கண விகற்பம்
வேறுமுள தொன் னூல் வழக்குமுல கத்தியல்பு
 மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
 யொத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ர சங்கம
 துரைப்பவன் கவிஞ னாகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
 யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (௭ரு)

(இ-ள்.) தெள் அமிர்ததாரைஎன-தெளிவாகிய அமிர்த தாரையைப்போலவும், மதுரம்கதித்த-மதுரம்குந்த, பைந்தேன் மடைதிறந்தது என-பசிய தேன்மடை திறந்தாற் போலவும், செப்பும் முத்தமிழினொடும்-சொல்லப்பட்டமுத்தமிழுடனே, நாற்கவிதை - நாற்கவிகள், நாற்பொருள்- நாற்பொருள்கள் (என்பவற்றை,) தெரிந்து உரைசெய் திறமையுடனே-அறிந்து சொல்லத்தகுந்த சமர்த்துடனே, விள் அரிய-சொல்லுதற்கரிய, காவியத் துட்பொருள்-காவியங்களின் உட்பொருள், அலங்காரவிரிவு-அலங்காரவிரிவு இலக்கணவிகற்பம்-இலக்கண வேறுபாடு, வேறும் உள்ள - மற்றுமுள்ள, தொன்னூல்வழக்கும்-பழையநூல்வழக்கும், உலகத்து இயல்பும் - உலகவியற்கையும், மிக்க ப்ரபந்தவ

ண்மை - மேலான பிரபந்த வண்மையும், உள்ள எல்லாம் அறிந்து - இன்னும் உள்ளவையாவும் கற்றறிந்து, அலை அடங்கும் கடலை ஒத்து-அலையடங்கின கடலை நிகர்த்து, அதிக சபைகண்டபோது-மேலான சபையைக் கண்டபொழுது, ஓங்கு அலை ஒலிக்கின்றகடல்போல்-உயர்ந்த அலைகள் முழங்கப்பெற்ற கடல்போல, ப்ரசங்கமது உரைப்பவன்-பிரசங்கம் செய்பவன், கவிஞன் ஆகும்-கவிஞனுவான், விடம் அள்ளி உண்ட-நஞ்சை அள்ளிப்புசித்த, கனிவாயனே-கனிவாயை யுடையவனே, நேயனே-அன்புள்ளவனே, அமலனே-பரிசுத்தனே, அருமைமதவேள், எ-று.

முத்தமிழ்-இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன. நாற்பொருள்-அறம், பொருள், இன்பம, வீடு என்பன. காவியம்-சிந்தாமணிமுதலிய பஞ்சகாவியங்கள். அலங்காரம் - அலங்கார சாத்திரம், இலக்கண விகற்பம்-எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் முதலிய வகைவேறுபாடு. உலகத்தியல்பு-லோகாசாரம், ப்ரபந்தவண்மை-பிரபந்தங்கள்செய்து உபகரித்தல், வண்மை-கொடை.

நற்சார்பு.

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
  கண்ணிணைகள் செய் புண்ணியங்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதிரு
  காது செய்திடு புண்ணியம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
  பேசில்வாய் செய் புண்ணியம்

பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிது செய்திடு புண்ணியம்
வீணெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்
மேனி செய்திடு புண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்க பூருவ புண்ணியம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசு)

(இ-ள்) காண் அரிய பெரியோர்கள் தரிசநம் லபிப்பதே-காண்பதற்கரிய பெரியோர்களுடைய தரிசநம் வாய்ப்பதே, கண் இணைகள் செய்புண்ணியம்-இருகண்கள்செய்தபுண்ணியமாகும், கருணையாய்-கிருபையுடனே, அவர் - அந்தப் பெரியோர், சொல்-சொல்லுகிற, மொழி - சொற்களை, கேட்டிட லபிப்பதே, கேட்கும்படி வாய்ப்பதே, இருகாது செய்திடுபுண்ணியம்-இருசெவிகள்செய்த புண்ணியமாகும். பேணி-விரும்பி, அவர்புகழையே - அவரது கீர்த்தியையே, துதிசெயலபித்திடுதல்-தோத்திரம்பண்ண வாய்ப்பது, பேசில்-சொல்லுமிடத்து, வாய்செய் புண்ணியம்-வாய்செய்த புண்ணியமாகும், பிழையாமல்-தவறாமல், அவர்தமை தொழுதிடலபிப்பது-அவர்களை வணங்கவாய்ப்பது, கை-கைகள், பெரிதுசெய்திடு புண்ணியம்-மிகவுஞ் செய்த புண்ணியமாகும், வீண்நெறிசெல்லாமல் - வீண்வ

றியிற் செல்லாமல், அவர்பணிவிடை லபிப்பது - அவரது தொண்டுசெய்ய வாய்ப்பது, தன்மேனி செய்திடு புண்ணியம்-தன் உடம்புசெய்த புண்ணியமாகும், விழைவொடு - விருப்பத்துடனே, அவர்சொல்படி-அவரதுசொற்படியே, நடந்திடலபிப்பது - நடக்கவாய்ப்பதே, மிக்க - மேலான, பூருவபுண்ணியம் - பூர்வபுண்ணியமாகும், ஆணவம் என்னும்களை - ஆணவமென்கிற களையை, களைந்து-பறித்து, அறிவினை தந்த - அறிவாகிய பயிரைக்கொடுத்த, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள், எ-று.

தரிசநம்-காட்சி, சேவை. லபித்தல்-கிடைத்தல். வீண்நெறி-பயனில்லாத மார்க்கம். விழைவு-விருப்பம் பூருவபுண்ணியம் - முற்சநநத்திற் செய்தபுண்ணியம் புண்ணியம் என்றது புண்ணியப்பயனை, இடு என்பதற்கு வேறுபொருளின்மையால் கேட்டிட, தொழுதிட, நடந்திட, என்பவற்றை ஒரு சொற்களாகக் கொண்டு, கேட்க தொழநடக்க எனப்பொருளுரைக்கலாயிற்று ஆணவம்-அகங்காரம்.

பிறந்த நாளொடு வருகிற வாரபலம்

சென்ம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரிற்
 றீரா தலைச்ச லுண்டாந்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினொடு
 திருமாதி னருளு முண்டாம்
வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
 வாராது சுகம தென்பார்

மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும்
வாரத் துடன் கூடினால்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மை யுடனே வந்திடும்
நாரிய ருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்ல வாரத்தில் வந்தால்
ஆன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எஎ)

(இ-ள்.) சென்ம நக்ஷத்திரத்து - ஜந்மநக்ஷத்திரத்தில், ஆதிவாரம்வரின்-ஆதிவாரம்வந்ததானால், திராத அலைச்சல் உண்டாம்-ஒழியாத அலைச்சலுண்டாகும், திங்களுக்கு ஆகில்-சோமவாரத்துக்கானால், வெகு சுகபோசநத்தினொடு - மிகுசுகபோசநத்துடன், திருமாதின் அருளும் உண்டாம்-இலக்குமியின் கிருபையுமுண்டாகும், வன்மைதரும் அங்காரவாரம்வந்தால்-வலிமையைத்தருகிற மங்களவாரம் வந்தால், சிறிதும்-கொஞ்சமும், சுகம்வாராது என்பர் - சுகம் உண்டாகாதென்பர், மேன்மைஆம்-மேன்மையாகிய, புந்தி என்னும் வாரத்துடன் கூடினால் - புதவாரத்தோடு சேர்ந்தால், மாசு இல்-குற்றமில்லாத, பலகலைபயில்வர் பலநூல்களையும் கற்பார்கள், நன்மைதரு-நன்மையைத் தருகிற, குருவாரம் சேர்ந்துவரில் - குருவாரம் சேர்ந்துவந்தால், ஆடை-வஸ்திரம், நன்மையுடனே வந்திடும்-நன்மையோடும்

வரும், ஒரு-ஒப்பற்ற, வெள்ளி நல்லவாரத்திில்வந்தால்-சுக்கிரனென்கிற நல்லவாரத்தில்வந்தால், நாரியருடன்-மாதரோடு, மிகவும்போகம் உண்டு-மிகவும் சுகாநுபவமுண்டாகும், சனியனுக்கு-சனிவாரத்துக்கு, அல்மருவு - அந்தகாரம்பொருந்திய, பீடை உண்டாம் என்பர்-பீடையுண்டாகுமென்று சொல்லுவர், அமலனே - பரிசுத்தனே, அருமை மதவேள், எ-று

சுகபோசநம்-சௌக்கியமான உணவு. திருமாதினருள் என்றது செல்வத்தை. குரு-வியாழம்.

இதனை யுடையவர்க் கிது வில்லையெனல்.

பொன்னாசை யுள்ளவர்க் குறவேது குருவேது
 பொங்குபசி யுள்ள பேர்க்கும்
போதமே சுசியேது ருசியேது மயல்கொண்டு
 பொதுமாதர் விழி வலையிலே
எந்நாளு மலைபவர்க கச்சமொடு வெட்கமே
 தென்றென்று முறு கல்விமே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
 வெளிதா யிருந்து கொண்டே
பன்னாளு மலைபவர்க் கிகழேது புகழேது
 பாரி லொருவர்க் கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
 பகர்நிரய மொன் றுளதுகாண்

அன்னை வருகரி யுரித்தணியு மெய்யனே
யமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எஅ)

(இ-ள்) பொன் ஆசை உள்ளவர்க்கு-பொன் விருப்பமு ள்ளவர்களுக்கு, உறவு ஏது குரு ஏது-உறவில்லைகுருவில்லை பொங்குபசி உள்ளபேர்க்கு-மிகுந்தபசியுள்ளபேர்களுக்கு, போத-மிகவும், சுசியேது ருசியேது-சுத்தியில்லை சுவையி ல்லை, மயல்கொண்டு-காம மயக்கங்கொண்டு, பொதுமாதர் விழிவலையிலே-பொதுமாதரது கண்வலையிலே யகப்பட்டு, எந்நாளும் அலைபவர்க்கு-எக்காலத்திலும் அலைந்துகொண் டிருப்பவர்களுக்கு, அச்சமொடு வெட்கம் ஏது அச்சத் தோடு நாணமில்லை, என்றென்றும் - எப்பொழுதும், உறு கல்விமேல்-மிகுந்த கல்வியின்மீது, இச்சை உள்ளபேர்க்கு- விருப்பமுள்ளபேர்களுக்கு, அதிக சுகம்ஏது துயில் ஏது- அதிகசுகமில்லை தூக்கமில்லை, எளிதாய், இருந்து கொண் டே-எளிய நிலையிலிருந்துகொண்டே, பலநாளும் அலைபவ ர்க்கு-பலநாளும் அலைவோருக்கு, இகழ்ஏது புகழ்ஏது - இகழ்ச்சியில்லை புகழ்ச்சியில்லை, பாரில்-உலகத்தில், ஒருவ ர்க்கு - ஒருவருக்கு, அதிகமே பண்ணியிடும் மூடருக்கு - (மிகையே) குற்றமேசெய்கிற மூடர்களுக்கு, மறம அல்லா ல் அறம்ஏது-பாவமல்லாமல் புண்ணியமில்லை, பகர்-சொல் லப்பட்ட, நிரயம் ஒன்று உள்ளது - நரகமும் ஒன்றுண்டு, அல்நாணவரு - இருட்டும் நாணும்படி வந்த, கரிஉரித்து

அணியும் - யானையை யுரித்து (அதன்தோலை) தரித்துக் கொண்ட, மெய்யனே-திருமேனியை யுடையவனே, அமலனே-பரிசுத்தனே, அருமைமதவேள், எ-று.

ஏது என்னும்வினா எதிர்மறையாய் இல்லையென்னும் பொருளில்வந்தது. பொதுமாதர்-வேசையர். தமதுகணவர்க்கேயன்றி மற்றையர்க்குப் போகங்கொடாத குலமாதர் போலாது தம்மை நாடிவந்து பொருள் கொடுப்போரெல்லாருக்கும் பொதுவாய் போகங்கொடுப்பவ ராதலால் வேசையர்க்குப் பொதுமாதர் எனப் பெயர்வந்தது.

மழைநாட் குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல
சீரான பரணி மழையுந்
தீதில் வைகாசியிற் பூரணை கழித்தபின்
சேரு நாலா நாளினில்
ஒத்துவரு மழையுமவ் வானியிற் றேய்பிறையி
லோங்கு மேகா தசியினி
லொளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தார மும்மழையு
முண்டா யிருந் தாடியில்
பத்திவரு தேதியைந் தினிலாதி வாரமும்
பகரு மாவணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவு முண்டாம்
அத்தனை பைங்குவளை மாலையணி மார்பனை
மண்ணலெம தருமை மதவே

ளுறுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசு)

(இ-ள்.) சித்திரை திங்கள் - சித்திரைமாசம், பதின்மூன் றுக்குமேல்-பதின்மூன்றுக்குமேலே, நல்ல-நன்மையாகிய, சீர்ஆன-சிறப்பாகிய, பரணிமழையும் - பரணிநக்ஷத்திரத் தில் பெய்கிறமழையும், தீது இல்-குற்றமில்லாத, வைகாசி யில்-வைகாசிமாசத்தில், பூரணைகழித்தபின் - பௌர்ணமி கழித்தபிறகு, சேரும் நாலாம்நாளினில் - வருகிறநான்கா வதுநாளில், ஒத்துவரும்மழையும்-ஒத்துவருகிறமழையும், அ ஆனியில்-அந்த ஆனிமாசத்தில், தேய்பிறையில்-அமர பக்ஷத்தில், ஒங்கும் ஏகாதசியினில்-உயர்ந்த ஏகாதசியில், ஒளிர் பரிதி வீழ்பொழுதில்-விளங்குகிற சூரியன் அஸ்த மிக்கும்போது, மந்தாரமும் மழையும் உண்டாயிருந்து - மந்தாரமும் மழையுமுண்டாயிருந்து, ஆடியில்-ஆடிமாசத் தில், பத்திவருதேதி ஐந்தினில்-வரிசையாய்வருகிற தேதி ஐந்தில், ஆதிவாரமும்-ஆதிவாரமாகவும், பகரும் ஆவணி-சொல்லப்பட்ட ஆவணிமாசத்தில், மூலநாள் - மூலநக்ஷத் ரத்தில், பரிதியும்மறைந்திட-சூரியனும் மறைந்துபோகும் படி, ககனம் மழைபொழிந்திட - மேகமானது மழையைச் சொரிய, (அதனால்) பாரில்-பூமியில், வெகுவிளைவும் உண் டாம்-வெகுவிளைச்சலு முண்டாகும், அத்தனே-கடவுளே பைகுவளை மாலைஅணி-பசியகுவளை மலர்மாலையைத் தரித் த மார்பன்ஆம்-மார்பையுடையவனாகிய, அண்ணல்-பெரு மைபொருந்திய, எமது அருமைமதவேள், எ-று.

திங்கள்-மாசம். ககனம்-ஆகாயம், அது இடவாகுபெயராய் அங்குள்ளமேகத்தை யுணர்த்திற்று. குவளை - முதலாகுபெயர்.

இருந்து முதவாமை.

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழு திலாத கிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிரிவரு
சமரத் திலாத படையேன்
விமலனுக் குதவாத பூசையே னுளமிருள்
வேளைக் கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக் கிலாத கலையேன்
தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத் திலாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
றரணிமீ தென்பர் கண்டாய்
அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
வாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ௰)

(இ-ள்.) தரணிமீது-பூமியின்மேல், சமயத்தில் உதவாத சமயத்தில் உதவியாகாத, நிதியம்ஏன்-திரவியம் யாதுக்கு, மிக்கதுயர்சார்பொழுது-மிகுந்ததுன்பம்வந்தபோது, இல்

லாத-உதவாத, கிளைஏன் - உறவுயாதுக்கு, சபைமுகத்து உதவாத-சபையி னிடத்தே உதவாத, கல்விஏன்-கல்வியாதுக்கு, எதிரிவரு சமரத்து இல்லாத - பகைவன்வருகிற போர்க்களத்தில் உதவாத, படைஏன்-சேனையாதுக்கு, விமலனுக்கு உதவாத-நிர்மலனாகிய சிவபிரானுக்கு ஏற்காத, பூசைஏன்-பூசையாதுக்கு, நாளும்-நாள்தோறும், இருள் வேளைக்கு இல்லாத-இருட்டுக் காலத்தில் உதவாத, சுடர் ஏன்-தீபம்யாதுக்கு, வெம்பசிக்கு உதவாத - கடும்பசிக்கு உதவாத, அன்னம்ஏன்-சோறுயாதுக்கு, நீடுகுளிர் வேளைக்கு இல்லாத-பெரிய குளிர்காலத்தி லுதவாத, கலைஏன் - ஆடையாதுக்கு, தமது தளர்வேளைக்கு இல்லாத-தமதுதளர்ச்சிக்காலத்தில் உதவாத, ஓர்மனைவிஏன்-ஒருமனையாள் யாதுக்கு, சரசத்து இல்லாத - சரசவேளையில் இல்லாத, நகைஏன்-சிரிப்புயாதுக்கு, சாம்மரணகாலத்தில் உதவாத-சாகிறமரணசமயத்தில் உதவாத, புதல்வன்ஏன்-புத்திரன் யாதுக்கு, என்பர்-என்றுசொல்லுவர் (பெரியோர்,) அமரர்க்கும்-தேவர்களுக்கும், முனிவர்க்கும்-முனிவர்களுக்கும், ஒருவர்க்கும்-வேறொருவருக்கும், எட்டாத-எட்டவொண்ணாத, ஆதியே-முதல்வனே, அருமைமதவேள், எ-று.

நிதியம்-புதையல் எனினும்பொருந்தும். உறவைக் கிளையென்றது உவமையாகுபெயர். சபைமுகத்துஎன்பதில்முகம் ஏழனுருபு. சமரம்-போர். ஏன் என்றவினா பயனில்லையென்னும்பொருளைக்குறித்தது. என்பர் என்னும்பயனிலைக்கு எழுவாயாகியபெரியோர்என்பதுவருவிக்கப்பட்டது.

மறையோர் சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவா
ருதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால
மொருமூன்றி னுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்
பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப் பெய்யுமுகி லவர்மகிமை யெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே.

(இ-ள்.) ஓர் ஆறு தொழிலையும் கைவிடார்-ஒப்பற்ற அறு தொழில்களையும் கைவிடமாட்டார்கள், சௌசவிதிஒன்று தப்பாதுபுரிவார் - சௌசவிதி ஒன்றையாயினும் தவறுமற் செய்வார்கள், உதயாதியில்சென்று நீர்படிகுவார் - உதயா தியிற்போய் நீரில் முழுகுவார்கள், காலம் ஒருமூன்றினுக் கும்-காலம் ஒருமூன்றிலும், மறவாது ஆராய்ந்து - மறவா மல் ஆராய்ந்து, காயத்ரியது செபிப்பார்-காயித்ரீமந்திரத்·

தைச் செபிப்பார்கள், நாளும்-நாள்தோறும், அதிதிபூசை கள்பண்ணுவார்-அதிதிபூசைகளைச் செய்வார்கள், யாகாதி கருமங்கள் - யாகமுதலிய சற்கிரியைகளை, மந்த்ரக்ரியாலோபம் இன்றியே செய்துவருவார்-மந்திரத்திலும்கிரியையிலும் குறைவில்லாமலே செய்து வருவார்கள், பேராசை கொண்டிடார் - (எந்தப்பொருளிலும்) பேராசை வையார்கள், (இப்படி) வைதிகம் - வைதிகமாகிய, நல்மார்க்கமே-நன்னெறியின்கண்ணே, பிழையாது இருக்கும் மறையோர்-தவறாமலிருக்கிற வேதியர்கள், பெய்என - பெய்யென்று சொல்லுதலும், முகில்பெய்யும் - மேகம் மழையைச்சொரியும், (ஆதலால்) அவர்மகிமை-அவர்பெருமையானது, எவர்களும்-யாவரும், பேசுதற்கு-சொல்லுதற்கு, அரிது அரிது-மிகவும் அரிதாகும், ஆர் ஆர்-ஆத்திமலர்மாலை பொருந்திய, நெடுசெடிலம் - நீண்ட சடையையுடைய, அமலனே - பரிசுத்தனே, என்னை ஆளும் அண்ணலே-என்னையாண்டருளுகிற பெரியோனே, அருமைமதவேள், எ-று.

ஓராறுதொழில் என்றது, ஓதல் - ஓதுவித்தல், வேட்டல். வேட்பித்தல், ஈதல், ஏற்றல என்பவற்றை. படிதல்-மூழ்குதல், காலமொரு மூன்று என்றது காலைமாலை பகல் என்பவற்றை அதிதி- தேசாந்தரி, விருந்தாளி. லோபம் - குறைவு வைதிகம்- வேதசம்பந்தம். அரிது அரிது என்ற அடுக்கில் முன்னது மிகுதிப்பொருளைத் தரவந்தது.

அரசர் சிறப்பு.

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வருமதிக ரண வீரமும்

வாள்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்
கனமா மமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
கால தேசங்க ளெவையும்
இனிதா யறிந்தஸ்தா னுபதிக ளொடுசமர்க்
கிளையாத தள கர்த்தரு
மென்றும்வற் றுததன தானிய சமுத்திரமு
மேற்றமுள குடி வர்க்கமும்
அனேவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அஉ)

(இ-ள்.) மனுநீதிமுறைமையும் - மநுநீதியின்கிரமமும், பரராஜர் கொண்டாடவரும்-வேற்றரசர் கொண்டாடும்படி யுண்டான, அதிகரணவீரமும்-மிகுதியாகிய போர்வீரத்தன்மையும், வாள்விசயமொடு-வாட்போரில் வெற்றியோடு, சரசசாதந விசேஷமும்-சரசமான சாதந விசேஷங்களும், வாசிமதகரி ஏற்றமும், குதிரையேற்றம் மதயானையேற்றம் என்பனவும், கனம்ஆம் அமைச்சரும்-மேன்மையாகிய மந்திரிகளும், பலம் ஆன துர்க்கமும்-உறுதியாகிய அரணும், கஜரதபதாதியும்-யானைதேர்காலாள் முதலியவும், துரகப்ரவாகமும்-குதிரைவெள்ளமும், காலதேசங்கள் எவையும்-

காலதேசங்கள்யாவும், இனிதாய் அறிந்த - நன்றாயறிந்த, ஸ்த்தாநாபதிகளொடு-தானபதிகளுடனே, சமர்க்கு இளையாத தளகர்த்தரும்-போருக்கு இளைக்காத தளகர்த்தர்களும், என்றும்-எக்காலத்திலும், வற்றாத-வடியாத, தநதாநியசமுத்திரமும் - தநதாநியக்கடலும், ஏற்றம் உள்ள-மேன்மையுள்ள, குடிவர்க்கமும் - குடித்தொகையும் (ஆகிய,) இங்கிவையெல்லாம்-இவையாவும், அனைவோரும் மெச்ச - எல்லாரும் மெச்சும்படி., உடையபேர் - உடையபேர்கள், அரசர் ஆம்-அரசராவார்கள், அருமைமதவேள், எ-று.

மநுநீதி - மநுவினாற் செய்யப்பட்ட நீதிசாஸ்திரங்கள், அவை மநுதர்மசாஸ்திரம், மநுஸ்ம்ருதிமுதலியன. சாதநவிசேஷம்-பழக்கமிகுதி. ஏற்றம்-ஏறுதல். (சவாரிசெய்தல்) அரண்மதிலரண், நீரரண், காட்டரண், மலையரண் எனநால்வகைப்படும். அரண்-காவல்-ப்ரவாகம் மிகுதிப்பொருளில் வந்தது.

வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்
நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருடேடி
நிலத் தரசு புரியும்
வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத விடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுநா றாயிட
வளர்ப்பவரு துலை துலைக்கும்

ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்திடுவ
 ரளவில் பற்பல சரக்கு
மமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலனுவு
 மறவிடார் செலவு வரிலோ
ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ
 ரருள்வைசிய ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (அரு)

(இ-ள்.) நீள்கடல் கடந்திடுவர் - நெடியகடலைக்கடந்து போவார்கள், மலையாளமும்போவர் - மலையாள தேசத்துக்கும்போவார்கள், நெடிது தூரம் திரிந்தும் - நெடுந்தூரம் போய்த் திரிந்தும், நினைவுதடுமாறார்கள்-நினைவுதடுமாறமாட்டார்கள், சலியார்கள் - சலிக்கமாட்டார்கள், பொருள் தேடி-பொருள்சம்பாதித்து, நீள்நிலத்து - பெரியபூமியில், அரசுபுரியும் - அரசாட்சிசெய்கிற, வாள் உழவனை-வேந்தனை, தமது கைவசம் செய்வார்கள்-தமதுகைவசப்படுத்திக் கொள்வார்கள், வரும் இடம்வாராத இடமும் - வருமிடத்தையும் வாராதஇடத்தையும், மனதையும் - கருத்தையும், அறிந்து-அறிந்துகொண்டு, உதவி - (அவர்களுக்குவேண்டியவற்றை) உதவிசெய்து, ஒன்றுநூறு ஆயிடவளர்ப்பர் - ஒன்றே நூறாகும்படி விருத்திசெய்வார்கள், வருதலைதலைக்கும் - அதிகமானதொலை தூரங்களுக்கும், ஆள்விடுவர் - ஆளனுப்புவார்கள், (அனுப்பி அவ்விடங்களில்) மலிவுகுறைவது விசாரித்திடுவர் - மலிவும்குறைவும் விசாரித்துக் கொள்வார்கள். அளவுஇல்-அளவில்லாத, பற்பலசரக்கும்-

பலபல சரக்குகளையும், அமைவுற - அவசரப்படாமல் (அமைதியாக, கொள்வர் விற்பார் - வாங்குவார்கள் விற்பார்கள், கணக்கதில்-கணக்கில், அணுவும் அறவிடார் - அணுவாயினும் நழுவவிடார்கள், செலவுவரிலோ-செலவுநேரிட்டாலோ, ஆளிஒத்து - சிங்கத்தையொத்து, மலையினளவும் கொடுத்திடுவர் - மலையளவு பொருளையாயினும் கொடுத்துவிடுவார்கள், (இப்படிக்கெல்லாம் செய்பவர் யார் என்றால்) அருள்வைசியர்-கருணையுள்ளவைசியரே, அருமைமதவேள்

மலையாளமும் என்ற வும்மையாய் போதற் கருமை தோன்றுகின்றது. தடுமாறுதல்-கலங்குதல். சலித்தல்-வெறுத்தல். அணு-மிகச்சிறியபாகம்.

வேளாளர் சிறப்பு.

யசனாதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றிநல் லோர் பெறுவதும்
இராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்றுநல் லோர் பெறுவதும்
வசனாதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர் பெறுவதும்
திசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை
செய்யநல் லோர் பெறுவதுஞ்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யு மேழிப் பெருமைகாண்

அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணமலை யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அச)

(இ-ள்.) வேதியர் - மறையோர், யசநாதிகருமமும்-யஜந முதலிய அறுதொழில்களையும், தப்பாமல் இயற்றி-தவறாமற்செய்து, நல்ஏர் பெறுவதும்-நல்ல அழகையடைந்திருப்பதும், முடிமன்னர்-முடிவேந்தர், இராச்சியபாரம் செய்து-ராஜ்யபாரத்தைத்தாங்கி, வெற்றிகொண்டு - ஜயமடைந்து, என்றும்-எக்காலத்திலும், நல்ஏர்பெறுவதும் - நல்ல அழகையடைந்திருப்பதும், வசியர்-வைசியர், வசநாதிதப்பாது - வாக்குமுதலானவைகள் தவறாமல், தனதானியம் தேடி-தநதாநியங்களைச் சம்பாதித்து, நல்ஏர்பெறுவதும் - நல்ல அழகை யடைந்திருப்பதும், மற்றும்உள்ளபேர் எல்லாம்-இன்னமும் உலகத்திலுள்ளபேமரல்லாரும், மிடிஎன்றிடாது-வறுமையென்று சொல்லாமல், அதிக வளமைபெற்று ஏர்பெறுவதும்-மிகுந்தசெல்வத்தையடைந்து அழகுபெற்றிருப்பதும், திசைதோறும் உள்ள - எல்லாத்திசைகளிலுமுள்ள, பலதேவாலயம் - பலதேவாலயங்கள், பூசை செய்ய-உலகத்தார் பூசைசெய்யும்படி, நல்ஏர்பெறுவதும்-நல்ல அழகையடைந்திருப்பதும் (ஆகிய இவையெல்லாம்) சீர்கொண்ட-சிறப்புப்பெற்ற, பைகுவளை மாலைபுனை-பசிய குவளைமலர்மாலையையணிந்த, வேளாளர்செய்யும் - வேளா

ளர்செய்கிற, மேழிபெருமை-மேழியின் பெருமையாலுண்டாவனவேயாம், அசையாது-அசையாமல், வெள்ளிமலைதனில்-வெள்ளிமலைமேல், மேவிவாழ்கின்ற-பொருந்திவாழ்கின்ற, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள், எ-று

யசநாதிகருமம் என்றது. வேட்டல் முதலிய அறுதொழில்களை. அவைவேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம். இவற்றையே முறையே யஜநயாஜந அத்யயந அத்யாபந தாநப்ரதிக்ரஹம் என்பர் வடநூலார், வசநாதி-வாக்குதொழில் முதலியவை. வசியர்-வணிகர். பலதேவாலயம் என்றமையால் சிவாலயம் விஷ்ணுவாலயம் யாவுங்கொள்க. ஆலயம்-கோயில் மேழி-கலப்பை.

தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளி னியல்பு.

தன்னரசன் வலுமையும் பராசரெண்ணமுஞ்
 சாலமேல் வரு கருமமுந்
 தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினோன்
 றானாதி பதியாகு வான்
மன்னவர் மனத்தையும் காலதேசத்தையும்
 வாழ்குடி படைத் திறமையும்
 மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
 வளமான மதி மந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே
 சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
 தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
 சூரனே சேனாதி பன்

அன்னையினு நல்லமலை மங்கைபங் காளனே
    யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுர தேவனே. (அ௫)

(இ-ள்) தன் அரசன் வலுமையும்-தன் அரசனது வலியும், பராஜர் எண்ணமும்-வேற்றரசர்கருத்தும், சால-மிகவும், மேல்வருகருமமும்-இனிமேல்வரப்போகிறகாரியமும், தான் அறிந்து - தான்தெரிந்துகொண்டு, அதிபுத்தியுத்தி உண்டாயினோன்-அதிகபுத்தியுக்திக ளுண்டாயிருப்பவன், தானுதிபதி ஆகுவான்-தாநாதிபதியாவான், மன்னவர்மனத்தையும் - அரசர்மனத்தையும், காலதேசத்தையும்-காலதேசங்களையும், வாழ்-வாழ்கின்ற, குடிபடைதிறமையும் - குடிபடைகளின் திறமையையும், மந்திராலோசனையையும், எல்லாம்-மற்றெல்லாவற்றையும், அறிந்தவன்-அறிந்திருப்பவன், வளம்ஆனமதிமந்திரி-வளமாகியமதிமந்திரியாவான் துன்னிய-நெருங்கிய, படைக்குணம் - சேனையின்குணம், கரிபரிபரீக்ஷை-யானைகுதிரைகளின்பரீக்ஷை, சூழ்-வளைந்த பகைவர்-பகைவரானவர், புரி-செய்கிற, சூழ்ச்சியும்-ஆலோசனையும், தோலாதவெற்றியும்-தோற்காத ஜயமும், திடம் ஆன-உறுதியாகிய, சித்தி-காரியசித்தியும், உள்ள-உடைய சூரனே-சூரனே, சேனுதிபன் - சேநாதிபதியாவான், அன்னையிலும்நல்ல-தாயினுஞ்சிறந்த, மலைமங்கை பங்காளனே-பார்வதீபாகனே, அனகனே - பரிசுத்தனே, அருமைமதவேள். எ-று.

காலதேசம்-காரியஞ்செய்யத்தகுந்தகாலமும் இடமும். மந்திராலோசனை-ரஹஸ்யாலோசனை. வளம்-அறிவின்வளம். மதிமந்திரி- புத்திசாலியாகியமந்திரி. சித்தி-பலிதம்.

இராயச கருணீகர் சிறப்பு.

வருமோலை யுத்தரத் தெழுதிவருபொருளினால்
வரவிடுப் போன் மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலக மாய்
விரைவா யறிந்தரச ரெண்ணிலெண் ணினையளவிடவெழுத வாசிக்கவும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடையோன்புவியின்
மேன்மைராயச காரனும்
கருவா யறிந்துதொகை யீராறுகோடியினிற்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாய்க்
காட்டுவோன் கருணீக னும்
அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அசு)

(இ-ள்.) வரும்ஓலை உத்தரத்து-வருகிற ஓலைப்புறத்தில், எழுதி வருபொருளினால்- எழுதிவருகிற அர்த்தத்தினால்,

வரவிடுப்போன்மனதையும்-வரவிடுவோனுடைய மனக்கரு த்தையும், மருவிவரு கருமமும்-பொருந்திவருகிற கருமத் தையும், தேசகாலத்தையும்-தேசகாலங்களையும், வருகரத லாமலகமாய் - உண்டான கரதலாமலகமாக, விரைவாய்அ றிந்து - சீக்கிரமாயறிந்துகொண்டு, அரசர்-அரசருடைய, எண்ணில்-மனத்திலுள்ள, எண்ணினை-எண்ணத்தை, அள விட-அளவிடவும், எழுதவாசிக்கவும் - எழுதவும்வாசிக்க வும், வெற்றிகொண்டு-ஜயங்கொண்டு, பெரிய புத்தியுடை யோன்-பேரறிவையுடையவன், மேன்மை-மேன்மையுள்ள, ராயசகாரன் ஆம்-ராயசகாரனுவான், கருவாய் அறிந்து - நுட்பமாயறிந்து, தொகை - தொகையை, ஈராறுநொடியி னில் - பன்னிரண்டு நொடிப்பொழுதில், கடிது ஏற்றிடகு றைக்க-விரைவாயேற்றவும் குறைக்கவும், கடுகை ஒருமலை யாக-கடுகையொரு மலையாகவும், மலையை ஒருகடுகுமாய்-மலையை ஒருகடுகாகவும், காட்டுவோன் - காண்பிப்பவன், கருணீகன்ஆம்-கருணீகனுவான், அருஆகி-அருவமாகியும், உருஆகி-உருவமாகியும், ஒளிஆகி-பிரகாசமாகியும், வெளி ஆகும்-வெளியுமாகிற, அண்ணலே-பெரியோனே அருமை மதவேள், எ-று.

உத்தரம்-பின்புறம். பொருள்-அர்த்தம். வரவிடுப்போன் அனுப்புகிறவன். கருமம்-காரியம். கரதலாமலகம் என்ப தை கரதலம் ஆமலகம்எனப்பிரித்து, கைத்தலத்திலுள்ள நெல்லிக்கனியெனப் பொருளுரைத்துக்கொள்க. கரு-நுட் பம். ஏற்றுதல்-அதிகப் படுத்துதல். கருணீகன்-கணக்கன்.

கோபத்தின் கொடுமை.

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னாக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற் றள்ளுமால்
ஆபத் தெலாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணாமலை யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அஎ)

(இ-ள்.) கோபமே - கோவந்தானே, பாவங்களுக்கு எல்லாம்-தீவினைகளெல்லாவற்றுக்கும், தாய்தந்தை-தாயுந்தந்தையுமாகும், கோபமே - கோவந்தானே, குடிகெடுக்கும் - (தன்னை யுடையவனுடைய) குடும்பவிருத்தியை அழித்துவிடும், கோபமே-கோவந்தானே, ஒன்றையும் கூடிவரவொட்டாது-(தன்னையுடையவனுக்கு) ஒருகாரியத்தையும் கைகூடிவரவொட்டாது, கோபமே-கோவந்தானே, துயர்கொ

டுக்கும் (தன்னையுடையவனுக்கு) துன்பத்தையுண்டாக்கும், கோபமே-கோவந்தானே, பொல்லாது-கொடியது, கோபமே-கோவந்தானே, சீர்கேடு - (தன்னையுடையவனுடைய) புகழையழிப்பது, கோபமே-கோவந்தானே, உறவு அறுக்கும்-(தன்னையுடையவனது) பந்துஜநங்களை அவனைவிட்டு நீங்கச்செய்யும், கோபமே-கோவந்தானே, பழிசெய்யும் - (தன்னையுடையவனுக்கு) பழிப்பை யுண்டாக்கும், கோபமே-கோவந்தானே, பகையாளி - (தன்னையுடையவனுக்கு) விரோதியாகும், கோபமே - கோவந்தானே, கருணைபோக்கும் - (தன்னையுடையவனிடத்திலுள்ள) கிருபையைக் கெடுக்கும், கோபமே-கோவந்தானே, ஈனம்ஆம்-(தன்னையுடையவனுக்கு) இழிவைத்தருவதாகும், கோபமே-கோவந்தானே, எவரையும் கூடாமல் - (தன்னையுடையவனோடு) ஒருவரையும் சேராமற் செய்து, ஒருவன் ஆக்கும் - (அவனை) தனியனாகச்செய்யும், கோபமே-கோவந்தானே, மறலிமுன் கொண்டுபோய் - (தன்னைக்கொண்ட) உயிரைமறுமையில் யமனுக்கெதிரேகொண்டுசெலுத்தி, தீய-கொடிதாகிய, நரகக்குழியினில்தள்ளும்-நரகக்குழியிலே தள்ளிவிடும், ஆபத்து எல்லாம்தவிர்த்து - (என்) துன்பங்களெல்லாவற்றையும்நீக்கி, என்னை ஆட்கொண்டருளும் - என்னை யடிமைகொண்டருளுகின்ற, அண்ணாமலை-பெரியோனே, அருமைமதவேள், எ-று.

மறல்-கொடுமை. அதனை யுடையவனாதலால் யமனுக்கு மறலியென்னும் பெயர்வழங்கும் பகையாளி-பகைத்தன்மையை ஆள்பவன். (சத்துரு.)

பல் துறை.

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
 தங்களுக் கவை தழைவுறா
சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தனைசெய்
 தயவிலோ ராயுள் பெருகார்
மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
 வீடுநற் செந்நெ லிவைகள்
வேறொருவர் தந்திடினு மறுமொழி யறிந்தபேர்
 விலைகொடுத் தேகொள்ளு வார்
தேன்கனி கிழங்குவிற கிலையிவை யனைத்தையுந்
 தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
 சீலமுடை யோரென்ப ரால்
ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே
 யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (அஅ)

(இ-ள்.) தான்புரி தவத்தையும் கொடையையும்) தாம் செய்ததவத்தையும் தானத்தையும், புகழுவோர் தங்களுக்கு-தாமேபுகழ்ந்துசொல்லிக்கொள்வோர்களுக்கு, அவை-அந்தத்தவமும்தானமும், தழைவுறா-விருத்தியடையமாட்டா, சற்றும் அறிவு இல்லாமல்-சிறிதும்விவேகமில்லாமல், அந்தணரை-பிராமணரை, நிந்தனைசெய்-நிந்திக்கிற, தயவு

இல்லோர்-தயையில்லாதவர்கள், ஆயுள்பெருகார்-ஆயுள்வி ருத்தியை யடையமாட்டார்கள், மேம்படு - மேன்மைபொ ருந்திய, நறுசுவை-மணமுள்ள கலவைச்சந்தனம், மாலை - பூமாலை, தயிர்பால்-தயிர்பால், புலால் மாமிசம், வீடு-வீடு, நல்செந்நெல் - நல்லசெந்நெல், இவைகள்-இவைகளை, வே று ஒருவர் தந்திடினும்-வேறொருவர் தந்தாலும், மறுமொழி அறிந்தபேர்-மநுநீதிமொழிகளை யறிந்தபேர்கள், விலைகொ டுத்தே வாங்கிக்கொள்வார்கள், தேன் - தேன், கனி-பழம், கிழங்கு-கிழங்கு, விறகு-விறகு, இலை-இலை, இவை அனைத் தையும்-இவையெல்லாவற்றையும், நீண்டு அரிய நீசர் எனி னும்-நீண்டவொண்ணாத நீசராயிருந்தாலும், சீர்பெற அ ளிப்பரேல் - மேன்மைபெறத் தருவாராளுல், சீலம் உடை யோர்-ஆசாரமுடையவரும், இகழாது (தேன்முதலியவற் றை) அவமதிக்காமல், கைக்கொள்வர் - கைப்பற்றுவார், என்பர்-என்று சொல்லுவர் (பெரியோர்,) ஆன்கொடி உய ர்த்த-இடபக் கொடியை உயர்த்தின, உமைநேசனே-உமா தேவி ப்ரியனே, ஈசனே-ஈச்சுரனே, அண்ணலே-பெரியோ னே, அருமைமதவேள், எ-று.

'தாம்புரிதவத்தையும் கொடையையும் புகழுவோர் தங்களுக்கவை தழைவுறா' என்றமையால் பிறர்புகழலாம் தாமேபுகழ்ந்துகொள்ளலாகாதென்பதும், 'சற்று மறிவில் லாமலந்தணரை நிந்தனைசெய் தயவிலோராயுள்பெருகார்' என்றமையால் அந்தணரை நிந்திக்கலாகா தென்பதும், பெறப்பட்டன, கலவைமுதலியவற்றை மநுமொழியறிந்த

பேர் விலைகொடுத்தே கொள்ளுவார் என்றமையால் அறியாதவர் விலைகொடாமற் கொள்ளுவார் என்றும், வேறொருவர் தருதல் விலையில்லாமலே என்றும் பொருள்படுத்தல் காண்க உமைநேசன் என்பதனை ஒருசொல்லாகக்கொண்டு அதற்கு ஆன கொடியுயர்த்த என்பதைவிசேடணமாக்குக.

தத்துவத் திரயம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்து மிந்திரிய மைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்துமன மாதியாம்
புகலரிய கரண நான்கே
ஓதினோ ரிவையான்ம தத்துவ மெனச்சொல்வ
ருயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
றுரைசெய்யு மோரேழுமே
நீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலாற்
றிகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்தி சிவ மைந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செ
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவளா
ரறப்பளீ சுர தேவனே. (அகூ)

(இ-ள்.) பூதம் ஓர் ஐந்துடன் - பூதங்கள் ஓரைந்துடனே, புலன்ஐந்து - புலன்களைந்து, ஞானம்பொருந்தும் இந்திரி

யம் ஐந்து-ஞானேந்திரியங்களைந்து, பொருவில் கன்மேந்திரியம் ஐந்தும் ஒப்பற்ற கர்மேந்திரியங்களைந்தும், மனம் அதிஆம்-மனமுதலாகிய, புகல்அரிய-சொல்லுதற்கரிய, கரணம்நான்கு - அந்தக்கரணங்கள் நான்கு, இவை-இவைகளை, ஓதினோர் - கற்றுவல்லோர், ஆன்மதத்துவம் எனச்சொல்வர்-ஆத்மதத்துவம் என்றுசொல்லுவர், உயர்-உயர்ந்த, காலம் நியதி கலையோடு ஓங்கிவருவித்தை ராகம் புருடன் மாயைஎன்று உரைசெய்யும் ஓர் ஏழும்-காலம் நியதி கலையுடனே பெருகிவருகிற வித்தை இராகம் புருடன்மாயைஎன்று சொல்லப்பட்ட ஒப்பற்ற ஏழும், தீது இல்-தீமையில்லாத, வித்யாதத்வம் என்றிடுவர்-வித்தியாதத்துவம் என்றுசொல்லுவர், இவை அல்லால்-இவைகளல்லாமல், திகழ்-விளங்குகிற, சுத்தவித்தை-சுத்தவித்தை, ஈசன்-ஈசன், சீர்கொள் சாதாக்கியம்-சிறப்பைக்கொண்ட சாதாக்கியம், சத்தி-சத்தி, சிவம்-சிவம், ஐந்தும் - ஐந்தும், சிவதத்வம் என்று அறைகுவார்-சிவதத்துவமென்று சொல்லுவர், ஆதி-முற்காலத்தில், வடநீழலில்-கல்லாலமாநிழலில், சனகாதியர்க்கு - சநகர்முதலிய நால்வருக்கும், அருள்செய்-அருள்செய்த, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள்

பூதமோரைந்து-நிலமுதலிய ஐந்துபூதங்கள், புலனைந்து - மெய்முதலிய ஐந்துவிடயங்கள். ஞானம்பொருந்துமிந்திரியமைந்து-மெய்முதலிய ஐந்து ஞானேந்திரியங்கள். கன்மேந்திரிய மைந்து-வாக்குமுதலிய கர்மேந்திரியங்களைந்து மனமாதியாம் கரணநான்கு-மனமுதலிய அந்தக் கர

ணங்கள்நான்கு, ஓதினோர்-தத்துவ சாத்திரங்களைக் கற்று வல்லோர். வடம்-ஆலமரம்.

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்.

வனசஞ் செழுஞ்சுத முடனசோ கந்தளவ
மலர்நீல வை யிவையைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
மனதி லாசையை யெழுப்பும்
வினைவிலொண் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கு
மிகவசோ கந்துயர் செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு
மேவுமிவை செயு மவத்தை
நினைவிலது வோநோக்கம் வேறொன் றி லாசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்ற
னெஞ்சந் திடுக்கிடுத லனம்வெறுத் திடல்காய்ச்ச
னோர்தன் மௌனம் புரிகுதல்
அனையவுயி ருண்டில்லை யென்னலீ ரைந்துமா
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூ0)

(இ-ள்.) வனசம்-தாமரைமலர், செழுஞ்சூதமுடன்-செழுமையாகிய மாமலரோடு, அசோகம்-அசோகமலர், தளவமலர்-முல்லைமலர், நீலம்-குவளைமலர், (ஆகிய) இவை ஐந்தும்-இவையைந்தும், மாரவேள் கணைகள் ஆம்-மன்மதனு

டைய பாணங்களாகும், இவைசெய்யும் குணம்-இவைசெய்யுங் குணங்களாவன, முளரி-தாமரைமலர்களை, மனதில் ஆசையை எழுப்பும்-மனத்தில் விருப்பத்தையுண்டாக்கும் வினவில் - கேட்குமிடத்தில், ஒள்-ஒட்பமாகிய, சூதமலர்-மாமலர், மெய்-சரீரத்தில், பசலை உண்டாக்கும்-பசலைநிறத்தையுண்டுபண்ணும், அசோகம்-அசோகமலர், மிக துயர் செயும் மிகவுந் துன்பத்தை யுண்டாக்கும், குளிர்முல்லை - குளிர்ந்த முல்லைமலர், வீழ்த்திடும் - கிடத்திவிடும், நீலம்-குவளைமலர், உயிர்போக்கிவிடும்-உயிர் நீக்கிவிடும், மேவும்-பொருந்திய, இவைசெயும் அவத்தை-இவைசெய்யும் அவஸ்தைகளாவன, நினைவில் அதுவே நோக்கம்-நினைப்பில் அதுவே நோக்கமாயிருத்தல், வேறு ஒன்றில் ஆசை அறல் - வேறொரு பொருளினும் ஆசையற்றிருத்தல், நெட்டுயிர்ப்பொடு-பெருமூச்சு விடுதலோடு, பிதற்றல் - வாய்பிதற்றுதல், நெஞ்சம் திடுக்கிடுதல்-நெஞ்சம் திடுக்கிடல், அன்னம்வெறுத்திடல் - சோற்றை வெறுத்தல், காய்ச்சல்-உடல் வெதும்புதல், நேர்தல்-மெலிதல், மௌனம்புரிகுதல்-மௌனமாயிருத்தல், அனைய உயிர் - அத்தன்மைத்தாகிய பிராணன், உண்டு இல்லையென்னல் - உண்டோ இல்லையோவென்று தோன்றுதல் (ஆகிய,) ஈரைந்தும் ஆம்-பத்துமாகும், அத்தனே-இறைவனே, அருமைமதவேள், எ-று.

நீலம்-கருங்குவளைமலர். பசலைநிறம்-வைவர்ணியம், பிதற்றல்-புலம்புதல். நேர்தம்-உடலிளைத்தல் மௌனம்புரிகுதல்-வாய்பேசாதிருத்தல்.

மன்மத னுபகரணங்கள்.

வெஞ்சிலை செழுங்கழைவி னாரிகரு வண்டினம்
மேல்விடுங் கணைக ளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத விருளாம்
வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடிய
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகிலங் காகளம்
மனதே பெரும் போர்க்களம்
சஞ்சரிகை விசைபாடல் குமுதநே யன்கவிகை
சாரிரதி யேமனைவி யாந்
தறுகண்மட மாதரிள முலைமகுட வாமல்கு
தவறு திருக்கு மிடமாம்
அஞ்சுகணை மாரவேட் கென்பரெளி யோர்க்கெலா
மமுதமே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூக)

(இ-ள்) அஞ்சுகணை மாரவேட்கு - பஞ்சபாணங்களையுடைய மன்மதனுக்கு, வெம்சிலை-கொடியவில், செழுகழை-செழுமையாகியகரும்பாகும், வில்நாரி-வில்நாண், கருவண்டு இனம்-கரியவண்டின் கூட்டமாகும், மேல்விடும்-மேலேபிரயோகிக்கிற, கணைகள்-பாணங்கள், அலர் ஆம்-மலர்களாகும், வீசிடும் தென்றல் - வீசுகிற தென்றற் காற்றானது, தேர்-தேராகும், பை பசிய, கிள்ளையே-கிளிகளே, பரிகள்-

குதிரைகளாகும், கெடாத இருள்-நீங்காத இருளானது, வேழம்ஆம்-யானையாகும், வஞ்சியர்-மாதர், பெருஞ்சேனை-பெரியபடையாகும், கைதை - தாழைமடல், உடைவாள்-உடைவாளாகும், நெடிய வண்மைபெறுகடல்-பெரிய ஔதார்யம் பெற்றகடல், முரசம்ஆம்-பேரிகையாகும், மகரம்-மீன், பதாகை-துவசமாகும், வருகோகிலம்-வருகின்ற குயில்கள், காகளம்-ஊதுகொம்பாகும், மனதே-மனமே, பெருபோர்க்களம்-பெரியயுத்தகளமாகும், கஞ்சரிகஇசை-வண்டோசை, பாடல்-சங்கீதமாகும், குமுதநேயன்-சந்திரன், கவிகை-குடையாகும், சார்-பொருந்திய, இரதியே-ரதீதேவியே, மனைவிஆம்-மனைவியாவாள், தறுகண் - அஞ்சாமையுள்ள, மடவாதர்-இளம்பெண்களுடைய, இளமுலை-இளமுலைகள், மகுடம்ஆம்-கிரீடமாகும், அல்குல்-நிதம்பம், தவறுது-இடைவிடாமல், இருக்கும் இடம்ஆம்-வீற்றிருக்குமிடமாகும், என்பர்-என்றுசொல்லுவர் (பெரியோர்,) எளியோர்க்கு எல்லாம்-எளியவர்களுக் கெல்லாம், அமுதமே-அமிர்தம்போல்பவனே, அருமைமதவேள், எ-று.

பைங்கிள்ளை-பச்சைநிறமுள்ள கிளி வஞ்சியர்-கொடிபோல்வார், கைதை-தாழை உடைவாள்-அரையிற்கட்டும்வாள். மகரம் மீன், காகளம்-எக்காளம் (ஊதுகொம்பு) சஞ்சரிகம்-வண்டு. இசை-ஓசை. பாடல் - சங்கீதப்பாட்டு. அல்லிமலர்களுக்கு நாயகனாதலால் சந்திரனைக் குமுதநேயன் என்றார். குமுதம்-அல்லிமலர்.

பகைகொளத் தகாதவர்.

மன்னவ ரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறுத மர்ம முடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்
சொன்னமுடை யோர்புலைய ருபதேச மதுசெய்வோர்
சூழ் வயித்தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொற்பனந் தனி லாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
நம்பனே யன்பர் நிதியே
அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. (௯உ)

(இ-ள்.) இ-இந்த, நானிலத்து - உலகத்தில், மன்னவர், அரசர், அமைச்சர்-மந்திரிகள், துர்ச்சநர் - துர்ஜநங்கள்- கோளர்- கோள்சொல்லுவோர், தூதரொடு-தூதருடனே, மாறுதமர்மம் உடையோர் - நீங்காத மர்மமுள்ளவர்கள், வலுவர்-பலமுள்ளவர்கள், கருணீகர்-கணக்கர், மிகுபாகம் செய்து-மிகுந்த சமையல் செய்து, அன்னம் இடும் மடையர்-அன்னம் பரிமாறுகிற மடையர், மந்திரவாதியர்-மந்திர

வாதிகள், சொன்னம் உடையோர்-பொன்னுடையவர் (திரவியமுள்ளவர்.) புலயர்-நீசர், உபதேசமதுசெய்வோர்-உபதேசம் செய்கிறவர், சூழ்வயித்தியர்-ஆலோசனையுள்ளவைத்தியர், கவிதைகள் சொற்றிடும்புலவர் - கவிகள்பாடும்புலவர்கள், (ஆகிய) இவர் பதினைந்துபேரொடும்-இவர்கள்பதினைந்துபேர்களோடும், சொப்பனம் தனிலாகிலும் - கனவிலாயினும், நல்நெறி அறிந்தபேர் பகைசெய்திடார்கள்-நல்வழியையறிந்தபேர்கள் பகைத்துக்கொள்ளமாட்டார்கள், என்பர்-என்று சொல்லுவர் பெரியோர், நாரி ஓர்பாகனே-உமாதேவியை ஒருபாகத்திலுடையவனே, வேதாகமம்பரவும் நம்பனே - வேதாகமங்கள் துதிக்கின்ற சிவபிரானே, அன்பர் நிதியே - அன்பர் செல்வமே, அன்னம் ஊர்பிரமனும்-அன்னத்தை நடத்துகிற பிரமதேவனும், கண்ணனும்-விஷ்ணுவும், காணாத - காணவொண்ணாத, அண்ணலே-பெரியோனே, அருமைமதவேள், எ-று.

வலுவர்-வலிமையுள்ளவர். மடையர் - சமையற்காரர். சொன்னம்-பொன், அது இங்கு தநதாநியாதிக ளெல்லாவற்றையுங்குறித்தது. நாரி-பெண். நம்பன்-மங்கள குணங்கள் நிறைந்திருப்பவன். அன்பர்க்குப் பொருட் செல்வஞ் செல்வ மல்லாமையாலும், இறைவனது அருட்செல்வமே செல்வமாதலாலும் 'அன்பர் நிதியே' என்றார்.

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுநன் னெல்லை யெள்ளைத்

தூயதெங் கின்கனியை யெண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதிரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்
புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர் வீரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
யண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூஈ)

(இ-ள்.) சுவை சேர்கரும்பை - (இன்) சுவையுள்ளகரும்பையும், வெண்பாலை - வெண்மையாகியபாலையும், பருத்தியை-பருத்தியையும், (யாவராலும் புகழ்ந்து) சொல்லும் - சொல்லப்பட்ட, நல்நெல்லை-நல்ல நெல்லையும், எள்ளை-எள்ளையும், தூயதெங்கின்கனியை - பரிசுத்தமானதேங்காயையும், எண்ணாததுட்டரை-மதிக்காததுஷ்டரையும், தொண்டரை - தொண்டுசெய்வோரையும், தொழுதொழும்பை - தொழும்படியான அடிமைகளையும், நவைதீருமாறு-குற்றமொழியும்படி, கண்டித்தே-கண்டிதஞ்செய்தே, பயன்கொள்வர்-பயனடைவார்கள், நல்தமிழ்-இனிய தமிழைக்கற்ற,

கவிவாணரை-கவிவாணர்களையும், நலம் மிக்கசெழுமலரை-நன்மைமிகுந்த செழுமையாகிய பூவையும், ஓவியம் எனத்தக்க-சித்திரப்பாவையென்று சொல்லத்தகுந்த, நயம்உள்ள நாரியர்தமை-இன்பமுள்ள மாதரையும், புவிமீதில்-பூமியின்மேல், உபகாரநெஞ்சரை-உபகாரமனத்தை யுடையவரையும், சிறுவரை-சிறுவரையும், போர்வீரரை - யுத்தவீரரையும், தூயரை-பரிசுத்தரையும், போதவும்பரிவோடு-மிகவும் அன்போடு, இதம்செய்ய-நன்மைசெய்ய, புகழ்பெற-சீர்த்தியடையும்படி, மிகு பயன்கொள்வர் - மிகு பயனையடைவார்கள், அவமதிதவிர்த்து-துர்ப்புத்தியை நீக்கி, என்னை ஆட்கொண்ட - என்னை யாட்கொண்டருளின, வள்ளலே-உதாரனே, அண்ணலே - பெரியோனே, அருமைமதவேள், எ-று.

கரும்பாதலால் சுவை இன்சுவையென்றுரைக்கப்பட்டது, வெண்பாலை யென்பதில் வெண்மை இயற்கையடை. நன்னெல்-செந்நெல். கண்டித்து என்றது சிக்ஷித்து என்றபடி, நலம்-மணமெனினு மமையும். உபகாரநெஞ்சர்-உபகரிக்கவேண்டு மென்கிற மனவிருப்ப முள்ளவர். தூயர் என்றது ஞானியரை.

தருமம்.

பெறுமில் பெறுவித்தலொடு காதோலை நாடொறும்
பிள்ளைக ளருந்திடும் பால்
பேசரிய சத்திர மடமா வுரிஞ்சுகல்
பெண்போக நாவிதன் வணான்

மறைமொருக ணாடிதண் ணீர்தலைக் கெண்ணெய்பசு
வாயினுறை பிணை மடக்கல்
வாவியிறு முயிர்மீட்ட றின்பொரு ளடைக்காய்
வழங்கல் சுண்ணம் புதவுதல்
சிறையுறு பவர்க்கமுது வேற்றிலங் காத்தல்பொழில்
செய்தன்முன் னாலின் மணங்
திகழ்விலங் கூண்பிச்சை யறுசமய ருக்குண்டி
தேவ ராலய மவுஷதம்
அறைதல்கற் போர்க்கன்ன நாலெட் டறங்களுமு
னன்னைசெய லருமை மதலே
எனுதினமு மனதினிலை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுசு)

(இ-ள்.) பெறும்இல்-பிள்ளைபெறுதற்கு வீடுவிடல், பெறுவித்தல், பிள்ளைபெறுவித்தலோடு, காதோலை - (சுமங்கலிகளுக்கு) காதோலைகொடுத்தல்,நாள்தொறும்-தினந்தோறும், பிள்ளைகள் அருந்திடும்பால்-பிள்ளைகள் குடிக்கின்ற பாலுண்பித்தல், பேசு அரிய சத்திரம் - சொல்லுதற்கரிய சத்திரம், மடம்-மடங்கட்டுவித்தல், ஆவுரிஞ்சுகல்-ஆவுரிஞ்சுதறி, பெண்போகம்-பெண்போகம்கொடுத்தல், நாவிதன் அம்பட்டனைக்கொண்டு க்ஷவரம்செய்வித்தல், வண்ணான்-வண்ணானைக்கொண்டு ஆடைவெளுப்பித்துக் கொடுத்தல், மறைமொழி - வேதமோதுவித்தல், கண்ணாடி-கண்ணாடி கொடுத்தல், தண்ணீர் - (தாகத்துக்கு) தண்ணீர் கொடுத்

தல், தலைக்கு எண்ணெய்-தலைக்கெண்ணெய் கொடுத்தல், பசுவாயின் உறை-பசுவுக்கு வாயுறை கொடுத்தல், பிணம் அடக்கல் - (திக்கற்ற) பிணத்தையடக்கஞ்செய்தல், வாவியிடும் உயிர்மீட்டல் - பறக்கும் உயிர்களாகிய பறவைகளை மீட்டுவிடுதல், தின்பொருள் அடைக்காய் வழங்கல் - தின்பண்டங்களையும் வெற்றிலைப்பாக்கையும் கொடுத்தல்,சுண்ணாம்பு உதவுதல்-சுண்ணாம்பு கொடுத்தல், சிறை உறுபவர்க்கு அமுது - சிறைப்பட்டவர்க்கு அன்னங்கொடுத்தல், வேற்றிலம்காத்தல் - வேற்றில்லத்தைக் காத்தல், பொழில் செய்தல்-சோலைவைத்தல், முந்நூலின்மணம் - பூணூற்கலியாணஞ்செய்துவைத்தல், திகழ்விலங்குஊண்-விளங்குகிற விலங்குணவுகொடுத்தல், பிச்சை-பிச்சைபோடுதல், அறுசமயருக்கு உண்டி-அறுசமயத்தார்க்கும் உணவளித்தல், தேவாலயம்-தேவாலயம்கட்டுவித்தல், ஔஷதம் - (நோய்க்கு) மருந்துகொடுத்தல், அறைதல் கற்போர்க்கு அன்னம்-படிப்பவர்க்கு அன்னமளித்தல், (இவைகளே,) முன்-முற்காலத்தில், அன்னை-லோகமாதாவாகிய உமாதேவியார், நாலெட்டு அறங்களும்செயல் - முப்பத்திரண்டு தருமங்களையும் செய்தலாம், அருமைமதவேள், எ-று

இ ல ல ற ம்.

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முள மனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநட்பி வருவோர்களைச்

சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர் வறிஞரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததஞ் செய்கடனை யென்றுமிவை பிழையாது
தான்புரிந் திட லில்லறஞ்
சாருநல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூ௫)

(இ-ள்.) தந்தைதாய் சற்குருவை - தந்தைதாயாரையும் சற்குருவையும், இட்டதெய்வங்களை-இஷ்டதெய்வங்களையும், சன்மார்க்கம் உள்ளமனைவியை-நன்னெறியுள்ள மனைவியையும், தவறாத சுற்றத்தை-நீங்காத சுற்றத்தாரையும், ஏவாதமக்களை-ஏவவேண்டாத மக்களையும், தன்னைநம்பிவருவோர்களை-தன்னை நம்பிவருவோர்களையும், சிந்தைமகிழ்வுஆக பணிவிடைசெய்வோர்களை-மனமகிழும்படி தொண்டுசெய்வோர்களையும், தென்புலத்தோர் வறிஞரை-தென்புலத்தாரையும் வறியரையும், தீதுஇல்லா அதிதியை-குற்றமற்ற அதிதியையும், பரிவுஉடைய துணிவரை-அன்புள்ள சிநேகரையும், தேநுவை-பசுவையும், பூசுரர்தமை-வேதியரையும், சந்ததம்-எப்பொழுதும், செய்கடனை-செய்யவேண்டிய கடன்களையும், (இவை-இவற்றை,) என்றும் பிழை

யாது-எக்காலத்தும் தவறாமல், புரிந்திடல்-செய்தலே, இல்லறம்-இல்லறமாகும், சாரும்-பொருந்திய, நலம்உடையர்ஆம்-நன்மை யுடையோராகிய, துறவறத்தோரும்-துறவறத்தாரும், இவர் தம்முடன்-இவர்களுடனே, சரிஆயிடார்-சமானமாகமாட்டார்கள், அந்தரி-அந்தரியாய், உயிர்க்கு எல்லாம்-சீவராசிகளுக் கெல்லாம், தாய்தனினும் நல்லவட்கு-தாயினும்நல்லவளாகிய உமாதேவிக்கு, அன்பனே-காதலனே, அருமைமதவேள், எ-று.

சன்மார்க்கமுள்ள மனைவி-கற்புடையமனைவி. ஏவாத மக்கள்-இன்னதைச் செய்யென்று தந்தைதாயர் ஏவாமல் தாமே குறிப்பறிந்து செய்கிறமக்கள். தென்புலத்தோர்-பிதிர்த்தேவதைகள், வறிஞர்-எளியார், அதிதி-விருந்து (தேசாந்திரி.) இல்லறம்-இல்வாழ்க்கையோடுகூடிச் செய்யவேண்டிய தருமம், துறவறத்தோர் - சந்நியாசிகள் அந்தரி-உயிர்க்குயிரா யிருப்பவன்.

புராணம்.

தலைமைசேர் பௌடிக மிலிங்கமார்க் கண்டமெழில்
சாரும் வாமன மச்சமே
சைவம் பெருங்கூர்மம் வருவரா கங்காந்த
சரிதமே பிர மாண்டமும்
நிலைமைசே ரிப்பத்து முயர்சிவ புராணமா
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடிய புராண நான்காம்

கலைவளர்சொல் பதுமமொடு பிரமகை வர்த்தமே
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாங்
கனல்காதை யாக்கி னேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனையு
மத்தனே யருமை மதவே
எனுதினமு மனதிவினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௯)

(இ-ள்.) தலைமைசேர்-முதன்மை பொருந்திய, பௌடிகம்-பௌடிகமும், இலிங்கம் - இலிங்கமும், மார்க்கண்டம்-மார்க்கண்டமும், எழில்சாரும்வாமநம்-அழகுபொருந்திய வாமநமும், மச்சம்-மச்சமும், சைவம்-சைவமும், பெருகூர்மம்-பெரியகூர்மமும், வருவராகமும்-வருகின்றவராகமும் காந்தசரிதம்-காந்தசரிதமும், பிரமாண்டம்-பிரமாண்டமும்ஆகிய, நிலைமைசேர் இப்பத்தும்-நிலைமைபொருந்திய இந்தப்பத்தும், உயர்-உயர்ந்த, சிவபுராணம் ஆம்-சிவபுராணங்களாகும், நெடியமால்கதை-நெடுமாலின் சரிதத்தைக்கூறுவன, வைணவம் - வைணவமும், நீதிசேர்காருடம்-நீதிபொருந்தியகாருடமும், நாரதம் - நாரதமும், பாகவதம்-பாகவதமும்ஆகிய, நீடிய-பெரிய, புராணம் நான்கு ஆம் - நான்கு புராணங்களாகும், கலைவலர்சொல்-நூல்வல்லலார் புகழ்கின்ற, பதுமமொடு-பதுமத்துடன், பிரமகைவர்த்தம்-பிரமகைவர்த்தமும், கமலாலயன்காதை ஆம்-பிரமபுராணங்களாகும், கதிரவன்காதை-சூரியன்சரிதத்தைச்சொல்லுவது, சூரியபுராணம் ஆம் - சூரியபுராணமாகும், கனல்

காதை-அக்நியின்சரிதத்தைச்சொல்லுவது, ஆக்கிநேயம்-ஆக்நேயபுராணமாகும், அலைகொண்ட நதியும்-அலைகளையுடைய கங்காநதியையும், வெள்மதியும்-வெள்ளிய சந்திரகண்டத்தையும், அறுகும்-அறுகம்புல்லையும், புனையும் - தரித்த, அத்தனே-இறைவனே, அருமைமதவேள், எ-று.

சரிதம்-சரித்திரம் நெடியமால் என்றது திரிவிக்கிரமாவதாரத்தைக் குறித்தது. கமலாலயன் (கமலம் - ஆலயம்) தாமரை மலரை இடமாக வுடையவன். ஆலயம் - இடம். கனல்-அக்கினி.

புகழ்ச்சி.

பருகாத வமுதொருவர் பண்ணாத பூஷணம்
பாரின் மறையாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கே ருகம்

கருகாத புயல்கலைக ளருகாத திங்கள்வெங்
கானி லுறையாத சீயங்
கருதரிய விக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியி லருமை யாகும்

தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவரு கல்வியொடு
சீரிதய மீகை வதனந்
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண்டாடவே

அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௭)

(இ-ள்.) பருகாத அமுது-உண்ணாத அமிர்தம், ஒருவர் பண்ணாதபூஷணம் - ஒருவர்செய்யாத ஆபரணம், பாரில்ம றையாதநிதியம்-பூமியில் மறைந்துபோகாத நிக்ஷேபம்,பரி திகண்டு அலராத - சூரியனைக்கண்டு மலராததும், நிலவுக ண்டு உலராத-சந்திரனைக்கண்டு உலராததும் ஆகிய, பண் புடைய-குணத்தை யுடைய, பங்கேருகம்- தாமரைமலர், கருகாதபுயல் - கருகாதமேகம், கலைகள் அருகாததிங்கள்- கலைகள்குறையாதசந்திரன், வெம்கானில் உறையாதசீயம் கொடிதாகிய காட்டில்வசிக்காதசிங்கம், கருத அரிய-சொ ல்லுதற்கரிதாகிய,இக்குணம் அனைத்தும் உண்டானபேர்- இந்தக் குணங்களெல்லாவற்றையு முடையபேர், காசினி யில்-உலகத்தில், அருமை ஆகும் - அருமையாம், தெரிய உரைசெய்யின்-தெரியச்சொல்லினால், மொழிகீர்த்தி-சொ ல்லப்பட்டகீர்த்தி, வருகல்வியொடு-வளர்கின்ற கல்வியுட னே, சீர்இதயம்-சிறந்த இருதயம், ஈகை-கொடை, வதந ம்-முகம், திடம் ஆனவீரம்-உறுதியாகியவீரம், இவை எ ன்று அறிகுவார்கள்-இவைகளேயென்றறிவார்கள், இச்செ கம் எல்லாம்கொண்டாட-இந்த உலகமுழுதும்கொண்டா டும்படி, அருள்-அருள்செய்கிற, கற்பதரு என்ன-கற்பகத் தருவைப்போல, ஓங்கிடும் - உயர்ந்த, தாநதுரை ஆகும் - கொடைக்குப்பிரபுவாகிய, எமதருமைமதவேள், எ-று.

மொழி முதலியவை முறையே அமுதுமுதலானவை போலிருக்கப்பெற்றவனும் கற்பகத்தருவைப்போன்றகொ டையாளனும் யாரெனின், மதவேள் என்னும் பிரபுவேயா வன் என்பது இச்செய்யுட்கருத்து.

திருமா லவதாரம்.

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மச்சமாஞ்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டி மாநில மெடுத்தே
போமிரணி யாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்
ஏமுறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வே ரறுத்தோ
னேர்பரசி ராமன்வரு கண்ணனொடு பலராம
னிப்புவி பயந் தவிர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
மரிவடிவ மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬அ)

(இ-ள்.) சோமுகாசுரனை-சோமுகன் என்னும் அசுரனை, முன்-முன்னாளில், வதைத்து-வதைசெய்து, அமரர் துயர் கெட-தேவர்களுடைய துன்பம்நீங்கும்படி, சுருதிதந்தது-வேதங்களைத்தந்தது, மச்சம்ஆம்-மச்சாவதாரமாகும், சுரர்தமக்கு-தேவர்களுக்கு, அமுது ஈந்தது-அமிர்தம் கொடுத்தது, ஆமைஆம்-கூர்மாவதாரமாகும், மாநிலம்-பெரிதாகிய பூமியை, பாய்போல் சுருட்டியெடுத்து-பாயைப்போ

லச் சுருட்டியெடுத்து, போம் - போன, இரணியாக்கனை-இரணியாக்ஷனை, உயிர் உண்டது-உயிர்குடித்தது, ஏனம் ஆம் - வராகாவதாரமாகும், பொல்லாத கனகன் உயிரை-பொல்லாத இரணியனுயிரை, போக்கியது-நீக்கினது, நரசிங்கம்-நரசிங்காவதாரமாகும், உலகு அளந்து ஓங்கியது-உலகத்தைத் திருவடியாலளந்து பிறகு உயர்ந்தது, வாமநமூர்த்திஆம்-வாமநாவதாரமாகும், ஏமுறும் இராவணனை வென்றவன்-இறுமாந்திருந்த ராவணனைஜெயித்தவன், இராகவன்-ஸ்ரீராமனுவன், இரவிகுலம் வேர் அறுத்தோன்-சூரியகுலத்தை வேரறுத்தவன், ஏர்பரசுராமன் - அழகிய பரசுராமனுமன், வருகண்ணனொடு பலராமன்-அவதரித்த க்ருஷ்ணரும் பலராமரும், இப்புவிபயம் தவிர்த்தோர்-இந்தப் பூமியிலுள்ளோரது அச்சத்தையொழித்தவராவார், இனியகற்கி-இனிதாகிய கற்கி அவதாரம், இனிமேல் வருவதுஆம்-இனிமேல் எடுக்கப்போகிறதாகும், இவைபத்தும்-இவைபத்தும், அரிவடிவம்-திருமாலவதாரங்களாகும், அருமைமதவேள், எ-று.

ஆமை கூர்மம், ஏனம் பன்றி, (வராகம்.) ஏமுறுதல்-இறுமாத்தல். இராகவன்-இரகுகுலத்தில் அவதரித்தவன். இரவி-சூரியன். கற்கி-குதிரை.

சிவமூர்த்தி.

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
  பெரியனுயர் வதுவை வடிவன்
பிச்சாட னன்காம தகனன்மற லியைவென்ற
  பெம்மான் புரந் தகித்தோன்

மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினோன் வீரே சுரன்
மருவுநர சிங்கத்தை வென்றவர னுமைபாகன்
வனசரன் கங்கா ளனே
விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக் கர முதவினேன்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மிளிரேக பாதன் சுகன்
அறிவரிய தக்ஷிணு மூர்த்தியொ டிலிங்கமா
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூகூ)

(இ-ள்.) பிறைசூடி-சந்திரசேகரன், உமைநேசன்-உமா தேவிக்குப் பிரியன், விடையூர்தி-இடபவாகநன், நடமிடு ம்பெரியன்-நடநஞ்செய்கின்ற பெரியோன், உயர்வதுவை வடிவன்-சிறந்த மணக்கோலத்தை யுடையவன், பிச்சாட நன்-பிக்ஷாடநன், காமதகநன்-காமனையெரித்தவன், மறலி யைவென்றபெம்மான் - யமனைவென்றபெருமான், புரம்த கித்தோன் - திரிபுரத்தை யெரித்தவன், மறம்மலி சலந்தர னைமாய்த்தவன்-கோவமிகுந்த சலந்தராசுரனை மடித்தவன் பிரமன் முடிவௌவினோன்-பிரமன்தலையைக் கவர்ந்தவன், வீரேசுரன் - வீரேசுவரன், மருவும் நரசிங்கத்தை வென்ற அரன்-பொருந்திய நரசிங்கத்தை வென்ற ஹரன், உமை பாகன்-உமாதேவிபங்கன், வனசரன்-வேடுவன், கங்காளன்-

கங்காளன், விறல்மேவு சண்டேசரக்ஷகன்-வெற்றிபொருந்திய சண்டேசரக்ஷகன், கடுமாந்தி-விஷபானம் செய்தவன், மிக்கசக்கரம் உதவினோன்-மேலானசக்கரத்தைக் கொடுத்தவன், விநாயகற்கு அருள்செய்தோன்-விநாயகனுக்கு அருள்செய்தவன், குகன் உமையுடன்கூடி மிளிர்-முருகனோடும் உமாதேவியோடும்கூடி விளங்குகின்ற, ஏகபாதன்-ஏகபாதன், சுகன்-சுகவடிவன், அறிவு அரிய-அறிதற்கரிய, தக்ஷிணாமூர்த்தியொடு - தக்ஷிணாமூர்த்தத்துடன், இலிங்கம் ஆம்-இலிங்கவுருவமுமாகின்ற, ஐயனே-இறைவனே, அருமைமதவேள், எ-று.

விடை-இடபம். ஊர்தி-நடத்துவோன். நடமிடல்-நடனஞ்செய்தல். வதுவை-மணம். மறம்-கோவம். மலிதல்-மிகுதல். கங்காளன்-முழுவெலும்பைத் தாங்குவோன். கடு-விஷம். மாந்தல்-குடித்தல்.

கவி வணக்கம்

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
    மருக்கொழுந் துயர் கூவிளம்
  மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலசூடி
    மணிமுடி தனிற் பொறுத்தே
சிலரொருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
    செம்முள்ளி மலர் சூடவே
  சித்தம்வைத் தவையுமங் கீகரித் திடுமகா
    தேவ தேவா தெரிந்தே

கலைவல ருரைக்குநன் கவியொடம் பலவாண
கவிராய னாகு மென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகு மடனாக மும்
அலைபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையு
மேலினை யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ന)

(இ-ள்.) சிலர்-சிலபேர், மலர் இதழி-மலர்ந்தகொன்றை மலர், பைகுவளை-பசியகுவளைமலர், மெல்முல்லை-மென்மையாகிய முல்லைமலர், மல்லிகை-மல்லிகைமலர், மருக்கொழுந்து-மருக்கொழுந்து, உயர்கூவிளம்-உயர்ந்தவில்வம், மற்றும் உள்ள வாசமலர்-மற்றுமுள்ள மணமலர்கள், பத்திரம் பத்திரங்கள், (ஆகிய இவற்றை) சூட-தரிக்க, மணிமுடிதனில்பொறுத்து-அழகிய சிரசில்தாங்கி, சிலர்-சிலபேர், எருக்கொடு-எருக்க மலருடன், வனத்துள் - காட்டிலுள்ள, பூளை-பூளைமலர், பச்சறுகு-பச்சை அறுகம்புல், செம்முள்ளிமலர்-செம்முள்ளிமலர்கள், (ஆகிய இவற்றைசூட-தரிக்க, சித்தம்வைத்து-திருவுள்ளம்வைத்து, அவையும்-அவற்றையும், அங்கிகரித்திடும்-ஏற்றுக்கொண்ட, மகாதேவதேவா-மஹாதேவதேவனே, கலைவலர் - நூல்வல்லோர், தெரிந்து உரைக்கும்-அறிந்துசொல்லுகிற, நன்கவியொடு-நல்ல கவிகளோடு, அம்பலவாண கவிராயன் ஆகும்-அம்பலவாணகவிராயனாகிய, என்புன்கவியையும் - எனது அற்பகவி

யையும், சூடி - தரித்து, மனமகிழ்ந்திடுவது - திருவுளங்களிப்பது, உன்கடன் ஆகும் - உன்கடனாகும், அடல்நாகமும் - வலிமையுள்ள பாம்பையும், அலைபெருகு கங்கையும் - அலைபொங்குகிற கங்கையையும், செழுமதியமும் - செழுமையாகிய சந்திரனையும், புனையும் - தரித்த, அமலனே - பரிசுத்தனே. அருமைமதவேள், எ-று.

மருக்கொழுந்து - வாசனைக்கொழுந்து. பத்திரம் - இலை. சிலர் மணமுள்ள கொன்றைமலர் முதலியவற்றைச்சூட சிலர்மணமற்ற எருக்கமலர் முதலியவற்றைச்சூட. அவ்விரண்டையும் ஒருங்கே திருவுளம்பற்றினதுபோல - கற்றுவல்லோராகிய பெரியோரது கவிமாலைகளைத் திருவுளம்பற்றினதுபோல எனது புன்கவிமாலையையும் திருவுளம்பற்றியருளல் வேண்டுமென்பது கருத்து.

அறப்பளீசுரசதகம்

மூலமும் - உரையும்

முற்றுப்பெற்றது.